பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | கார்த்திகை 06, திங்கட்கிழமை 21.11.2016 | கதிர் 16

Facial, Straightening, Bleaching, . Face Massaging, Threading.
WELLA Hair Dressing
Ladies & Gents
வெலா சலூன்
இல.8, நவீன சந்தை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 658 4453, 021 205 4116

### முன்னெப்போதும் இல்லாத வகையில் இப்போது

# சர்வதேச ஆதரவு எமக்கு மிக உச்சம்

## அதை வசமாகப் பயன்படுத்தி தீர்வு காண்போம் என்கின்றார் சம்பந்தன்

சாவகச்சேரி, நவம்பர் 21


**இதற்கு முன்பு எப்போதும் - எந்தக் காலத்திலும் - இல்லாத அளவுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவு, ஒத்துழைப்பு எமக்கு இப்போது கிட்டியுள்ளது. அதனைப் பயன்படுத்தி தீர்வைக் காண்பதற்கான முயற்சிகளில் நாம் ஒற்றுமையுடன் ஈடு படவேண்டும்.**

**-இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் சிலையை நேற்று சாவகச்சேரியில் திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு முன்பாக அமரர் ரவிராஜின் சிலையைத் திறந்து வைத்த பின்னர் சாவகச்சேரி நகரசபையின்பொன்விழாமண்டபத்தில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில்அவர்உரையாற்றினார்.

பக்கம் 19 »



நேற்று திறந்து வைக்கப்பட்ட அமரர் மாமனிதர் ரவிராஜின் திருவுருவச் சிலை.

## ஊடக சுதந்திரம் பற்றியும் 'குரல் எழுப்புகின்றார் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு, நவ.21

வரவு - செலவுத் திட்டம் மற்றும் அரசமைப்பு சீர்திருத்தம் பற்றிய விடயங்களில் மக்கள் கவனத்தைச்செலுத்தும்போது, அர்சு

பக்கம் 20 »

### அளப்பு அருணாசலம்



சாத்தான் வேதம் ஓதுறது எண்டது உதுதான் பாருங்கோ...!



அஞ்சலிக் கூட்டத்தில் பங்குபற்றிய பிரமுகர்கள்

## சிலை திறப்பிற்கு திரண்டு வந்த அரசியல் பிரமுகர்கள்

சாவகச்சேரி நவ.21

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் அமரர் நடராஜா ரவிராஜின் 10 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சாவகச்சேரியில் அமைக்கப்பட்ட அவரது உருவச் சிலை நேற்று திறந்துவைக்கப்பட்டது.

சிலையை, தமிழ்த் தேசியக்

பக்கம் 20 »

## தமிழர்களின் இராசதானியாக வடக்கு, கிழக்கு மாறும் ஆபத்து

### சிங்கள மக்களுக்கு விழிப்பூட்டுகிறார் மஹிந்த

கொழும்பு, நவ.21

நாட்டில் இருந்து வடக்கு, கிழக்கை வேறுபடுத்தி தமிழர்களின் இராசதானியாக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்று தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ,வடக்கிலுள்ளசிங்களவர்களைச் சிறுபான்மையினராக்கும் சதி நடவடிக்கையும் இடம்பெற்று வருகின்றது எனவும் குற்றம்சாட்டியுள்ளார்.

முல்லைத்தீவு மணலாறிலுள்ள விகாரையை வழிபடவும் அங்குள்ள மக்களைச் சந்திப்பதற்காகவும் நேற்று அங்கு சென்ற மஹிந்த ராஜபக்ஷ, அந்த மக்கள் முன்பாக உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்:-

புதிய அரசமைப்பில் சமஷ்டி ஆட்சிமுறையைக்கொண்டுவருவது தொடர்பில் தற்போது பேசப்படுகின்றது. கூட்டு எதிர்க்கட்சி என்ற வகையில் கொள்கை ரீதியில் சமஷ்டி ஆட்சி முறையைக்

பக்கம் 20 »

### தீயினால் பெரும் பாதிப்புக்குள்ளான

## 'பஷன் பக்' களஞ்சியத்தை பார்வையிட திரண்ட முஸ்லிம் அரசியல்வாதிகள்

கொழும்பு, நவ.21

நேற்று முன்தினம் இரவு கொழும்பு பெப்லினியானவில் மர்மமான முறையில் தீப்பற்றி எரிந்து பெரும் சேதமடைந்த 'பஷன் பக்' ஆடைக் களஞ்சியத்தை பல முஸ்லிம் அமைச்

பக்கம் 20 »

## இராணுவப் புரட்சிக்கு வாய்ப்பே இல்லை!

### வவுனியாவில் ராஜித உறுதி

வவுனியா நவ.21

இலங்கையில் இராணுவப் புரட்சியொன்று நடைபெறுவதற்குரிய எந்தவிதமான நிலைமையும் இல்லையென அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமாகிய ராஜித சேனாரத்ன நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன நாடாளு

பக்கம் 20 »

## எம்.பிக்களின் எண்ணிக்கையை 240 ஆக அதிகரிக்கத் திட்டம்

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு நவ.21

உத்தேச புதிய அரசமைப்பின் கீழ் செய்யப்படுகின்ற தேர்தல் சீர்திருத்தங்களின் போது நாடாளுமன்றஉறுப்பினர்களின் எண்ணிக்கையைதற்போதைய 225என்றஅளவிலிருந்து240 ஆகக் கூட்ட வேண்டும் -

இத்தகைய யோசனை ஒன்றை நேற்று நீர்கொழும்பில் நடைபெற்றதேசியகனிஷ்டசட்ட மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

பக்கம் 20 »



அமரர் மாமனிதர் ரவிராஜின் சிலை திறப்பு விழா நேற்று நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம். சாவகச்சேரி பிரதேச சபைக்கு முன்னால் சிலை திறந்து வைக்கப்பட்ட பின்னர், அமரர் ரவிராஜின் உருவப்படம், கூட்டம் நடைபெற்ற சாவகச்சேரி நகரசபையின் பொன் விழா மண்டபத்துக்கு எடுத்து வரப்படுகின்றமையையும் கூட்டத்தில் பங்குபற்றியோரையும் படங்களில் காணலாம்.

# கொழும்பில் நாளை பத்திரிகையாளர்களை சந்திக்கிறார் வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன்

*தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களுடன் சேர்ந்து*

தமிழ் மக்கள் பேரவை நாளை கொழும்பில் நடத்தவிருக்கும் செய்தியாளர் மாநாட்டில் கொழும்புப் பத்திரிகையாளர்களை வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் சந்திக்கிறார்.

இந்த விடயம் தொடர்பாக தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த த.வசந்தராசா, இருதய வைத்திய நிபுணர் பூ.லக்ஷ்மன் ஆகியோர் சார்பில் "பத்திரிகை செய்தியாளர் மாநாடு – தமிழ் மக்கள் பேரவையால் ஒழுங்கு செய்யப்பட்ட வடக்கு – தெற்கிற்கான உரையாடல்" என்ற தலைப்பில் ஊடகங்களுக்கு ஒரு செய்திக் கடிதம் மூலம் அழைப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் சிவில் பிரதிநிதிகளையும் கல்விமான்களையும் அரசியல் தலைவர்களையும் உள்ளடக்கியதான 'தமிழ் மக்கள் பேரவை' எனும் அமைப்பு கடந்த 24.09.2016 இல் 'எழுக தமிழ்' என்ற நிகழ்வொன்றை யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்து, அதில் வடக்கு, கிழக்கு மக்களின் அன்றாட மற்றும் அடிப்படைப் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தி நடைபெற்ற ஊர்வலம் மிகவும் வெற்றிகரமாக நடந்து முடிந்தது யாவரும் அறிந்ததே.

இப்பேரணியானது தென் பகுதியில் உள்ள – குறிப்பாக சிங்கள மக்கள் மத்தியில் – பலதரப்பட்ட கருத்துக்களுக்கும் விமர்சனங்களுக்கும் உள்ளாகி இருப்பதால் 'எழுக தமிழ்' பேரணியில் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளையும், தேவைப்பாடுகளையும் தென் பகுதியில் உள்ள மக்களுக்குத் தெளிவுபடுத்துவதும் சிங்கள – தமிழ் மக்களுக்கிடையில் ஆரோக்கியமானதொரு உறவைப்பேணுவதும் எமது கடமையாகும்.

அந்த அடிப்படையில் நாங்கள் – தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர்கள்–இணைந்து ஊடகவியலாளர்மாநாடொன்றை கொழும்பு – 07, றொறிங்டன் சதுக்கத்தில் அமைந் துள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் செவ்வாய் பிற்பகல் 4 மணி தொடக்கம் 6 மணி வரை நடத்தவுள்ளோம்.

இந்த மாநாட்டில் உங்களையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பதுடன், இந்த மாநாட்டின் முழுமையான நிகழ்வுகளையும் வெளியிடப்படவிருக்கும் கருத்துக்களையும் உங்கள் பத்திரிகைகளில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். – இப்படி பத்திரிகைகளுக்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்புக் கடிதத்தில் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்கள் கோரியுள்ளனர்.

# சமையல் எரிவாயுவினால் தீ; வயோதிபப் பெண் பலியானார்

சமையல் எரிவாயுவினால் தீப்பிடிக்கப்பட்டு எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட வயோதிபப் பெண் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவக்கொழுந்து (வயது 76) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

மேற்படி வயோதிபப் பெண்ணும் அவரது கணவரும் வீட்டில் தனிமையிலே வாழ்ந்து வந்துள்ளனர். இந்நிலையிலே சம்பவ தினமான நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் வயோதிபப் பெண் சமைப்பதற்காக சமையல் அறை சென்றுள்ளார்.

சமையலறையில் அவர் எரிவாயுவைத் திறந்து அடுப்பைப் பற்ற வைக்க முற்பட்டபோது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தீ அவரது ஆடையில் பற்றிக் கொண்டது. இதனையடுத்து அப்பெண் கூச்சலிட்டு கணவனை உதவிக்கு அழைத்தும் கணவனுக்கு காது கேட்காமையினால் அவரால் உதவிக்கு வரமுடியவில்லை .

இதையடுத்து வயோதிபப் பெண்ணே தன்னை ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு தனது ஆடைகளைக் களைந்து கிணற்றடி சென்று தண்ணீரினால் உடம்பைக் கழுவியுள்ளார். அதையடுத்து அவர் வீட்டிற்குள் வரும் போது தான் இச்சம்பவம் தொடர்பாக கணவனுக்குத் தெரிய வந்தது.

அதனைத்தொடர்ந்து உடனடியாக யாழ்.போதனா வைத்தி சாலைக்கு மேற்படி வயோதிபப் பெண் கூட்டிச் செல்லப்பட்டு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். இருந்த போதிலும் இரவு 9 மணியளவில் அப்பெண் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரணவிசாரணை அதிகாரி நவசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் சடலம் கணவனிடம் ஒப்படைக்கப்பட்டது. (உ -10)

# மன்னார் விடுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கு பாலியல் நோய் தொடர்பான சோதனை

மன்னார் பொது வைத்தியசாலை பாலியல் நோய் தடுப்பு வைத்தியக் குழுவினர், மன்னார் மாவட்டத்திலுள்ள விடுதிகளில் தங்கியுள்ளவர்கள் மற்றும் அங்கு கடமையாற்றுவோரின் குருதிகளை பரிசோதனை செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி பரிசோதனையை இவர்கள் வருடாந்தம் மேற்கொண்டு வருகின்றனர். அதன் தொடர்ச்சியாவே இந்த வருடமும் – அது இடம்பெறுகின்றது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திருமதி எஸ்.ஆர்.யூட்டின் பணிப்புரைக்கு அமைய, மன்னார் பொது வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் திருமதி றஜனி அன்ரன் சிசில் தலைமையில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விடுதிகளில் தங்கியிருப்பவர்கள் மற்றும் அங்கு பணிபுரியும் ஊழியர்கள் யாவருக்கும் இந்தக் குருதிப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. மன் னார் நகருக்குள் இதுவரை 7 விடுதிகளில் 36 நபர்களுக்கு இப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என மருத்துவக் குழுவில் உள்ள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து மன்னார் மாவட்டத்தில் எங்கெங்கு விடுதிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் இந்தக் குருதி ஆய்வுப் பரிசோதனை இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-112)

## 'பஷன் பக்' தீ பற்றிய விசாரணை கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவிடம்!

கொழும்பு, பெப்லியானவில் உள்ள பிரபலமான ஆடையகமான 'பஷன் பக்' நிறுவனம் நேற்று முன்தினம் இரவு தீப்பற்றி எரிந்தமை தொடர்பான விடயம் குறித்து விசாரணை நடத்தும் பொறுப்பு கொழும்பு குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் ஒரு நாசகார செயலாக இருக்கலாம் எனப் பரவலாகச் சந்தேகிக்கப்படும் நிலையில் இந்த விவகாரம் கொழும்பு குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைக்கு இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தின் உதவியும் கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# கைதான இந்திய மீனவர்களுக்கு டிசெம்பர் 2 வரை விளக்கமறியல்

யாழ்ப்பாணம் நவ.21

இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடித்த குற்றச்சாட்டில் காரைநகர் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 11 பேரையும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற பதில் நீதிவான் இராமலிங்கம் சபேசன் நேற்று உத்தரவிட்டார்.

தமிழ்நாடு, இராமேஸ்வரம் பகுதியில் இருந்து இரண்டு விசைப்படகுகளில் வந்து நெடுந்தீவு கடற்பரப்பில் மீன் பிடித்தவர்கள் என்று கூறப்படும் மேற்படி இந்திய மீனவர்களை காரைநகர் கடற்படையினர் நேற்று முன்தினம் மாலையில் கைது செய்திருந்தனர்.

இவர்களின் பதிவுகளை மேற்கொண்ட பின்னர் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர் கடற்படையினர். அவர்கள் கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளால் நேற்று மாலை ஊர்காவற்றுறை நீதிமன்ற பதில் நீதிவான் இராமலிங்கம் சபேசனின் இல்லத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான், அவர்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம-09)

# வெற்றிலைக்கு ஆதரவு வழங்கிய 11 கட்சிகள் பூமொட்டுக்கு மாறின?

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் சேர்ந்து இயங்கிய 11கட்சிகள்கூட்டுஎதிர்க் கட்சியினால் உருவாக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜனமுன்னணிக்குஆதரவு வழங்க தீர்மானித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி கட்சிகள் கடந்த தேர்தல்களின்போது வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவு வழங்கியிருந்தன.

ஆனால், தற்போது புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு ஆதரவு வழங்க அவை உடன்பட்டிருக்கின்றன என்று கூறப்பட்டது.

இந்தக் கட்சிகளுடன் இதுவரையில் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன என்றும் கூறப்படுகின்றது. இந்த 11 கட்சிகளில் சிங்களக் கட்சிகள் மட்டுமன்றி தமிழ், முஸ்லிம் கட்சிகளும் உள்ளன என கூட்டு எதிர்க்கட்சியின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு தேர்தல் சின்னமாக பூமொட்டு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கேரள கஞ்சா வைத்திருந்த ஆஸ்திரேலிய யுவதி கைது

வெளிநாட்டு யுவதி ஒருவர் கேரள கஞ்சாவுடன் எல்ல பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். எல்ல பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே இவர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் ஆஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த 25 வயதான யுவதி எனத் தெரியவந்துள்ளது.

மேலும் இவர் வசம் இருந்து மூன்று கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபரை பண்டாரவளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# இலங்கைக்கு நாணய நிதியம் பெருந்தொகைக் கொடுப்பனவு

இலங்கைக்கு 162.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை (அண்ணளவாக) வழங்குவதற்கு அனைத்துலக நாணய நிதியம் முடிவு செய்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் இந்த பெரும் நிதி வழங்கப்படவுள்ளதாக அனைத்துலக நிதியம் அறிவித்துள்ளது.

அதற்கான முடிவு இவ்வருடம் ஜூன் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டதாகவும் இப்போது அது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் –

அரசாங்கத்தின் பொருளாதார முயற்சிகளுக்கு கைகொடுக்கும் வகையிலுமே மேற்கண்ட முடிவு செயற்படுத்தப்படுவதாகவும் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அனைத்துலக நாணய நிதியத்தின் உதவியை மனதில் கொண்டே, எதிர்பார்த்த அரசின் வரவு–செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

# சுகாதார அமைச்சர் வவுனியாவில்...





சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்று வவுனியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இலங்கை பொலிஸின் 150 ஆவது ஆண்டை முன்னிட்டு வவுனியா பொலிஸாரால் ஏற்பாடு செய்யப்பட்ட சுத்திகரிக்கும் குடிதண்ணீர்த் திட்டத்தை வவுனியா பொலிஸ் நிலையத்தில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்று ஆரம்பித்து வைத்தார்.

முற்பகல் 10.30 மணிக்கு வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்த நிகழ்வில் மத அனுஷ்டானங்களை அடுத்து குடிதண்ணீர் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி, இலங்கை கடற்படை தளபதி, வவுனியா மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சிவில் பாதுகாப்புக் குழுக்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ-100)

## விதிகளை மீறிய வர்த்தகர்கள் 778 பேருக்கு எதிராக வழக்கு!

### ஜனவரி முதல் ஒக்ரோபர் வரையில்

வவுனியா, நவ.21

கடந்த ஜனவரி தொடக்கம் ஒக்ரோபர் வரையிலான காலப் பகுதியில் விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட வர்த்தகர்கள் 778 பேருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று வவுனியா மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

குறிக்கப்பட்ட விலையை விடக் கூடுதலான விலைக்கு பொருள்களை விற்பனை செய்தமை, கட்டுப்பாட்டு விலையை விட கூடுதலான விலைக்கு பொருள்களை விற்பனை செய்தமை, காலாவதியான பொருள்களை விற்பனைக்கு காட்சிப் படுத்தியமை, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, விலைகளை காட்சிப் படுத்தாமல் அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்தமை – பொருள்களில் உள்ள விலையை அழித்து அதிகரித்த விலை சுட்டுத்துண்டு ஒட்டியமை, பொருள்களை விற்பனை செய்யும் போது மிகுதிப்பணத்துக்கு பதிலாக மாற்றுப்பண்டம் வழங்கியமை, வியாபார நிலையத்தில் நடப்பு ஆண்டுக்கான முத்திரை இடப்படாத தராசு வைத்திருந்தமை என்பனவற்றுக்கு எதிராகவே குறித்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி இவ்வாண்டு ஜனவரி முதல் ஓகஸ்ட் வரை வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த 634 வர்த்தகர்களுக்கு எதிராகவும், செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் வவுனியா, முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த 144 வர்த்தகர்களுக்கு எதிராகவும்' வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது. (இ-100)

## வடக்கு, கிழக்கின் பாதுகாப்பு; நிலைமை திருப்தியாக இல்லை

### முன்னாள் ராணுவ அதிகாரி கூறுகிறார்

கொழும்பு, நவ.21

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பாதுகாப்பற்ற நிலைமை விரைவாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டும் என ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் அவர் இதைக் கூறியுள்ளார்.

வடக்கில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையை கட்டுப் படுத்தாமல் போனால் ஒரு பெரும் பிரச்சினையாக அது உருவாகும் என்று எச்சரித்துள்ளார்.

நாட்டில் தற்பொழுது காணப்படும் பாதுகாப்பு நிலைமை குறித்து திருப்தியடைய முடியவில்லை எனவும் கூறியுள்ளார்.

நாட்டில் இராணுவம் மற்றும் புலனாய்வுப் பிரிவு பலவீனப் பட்டால் வடக்கில் தோன்றிய 'ஆவா குழுக்கள்' போன்று மேலும் பல குழுக்கள் உருவாகும் என்பது தவிர்க்க முடியாது எனவும் கமால் குணரத்ன குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## பிரதேச செயலரை அச்சுறுத்திய இளைஞர் மறியலில்

வேலணை, நவ.21

வேலணைப் பிரதேச செயலரின் கடமைக்கு இடையூறு விளைவித்து, அச்சுறுத்தல் விடுத்தவர் எனக் கூறப்படும் இளைஞரை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற பதில் நீதிவான் இராமலிங்கம் சபேசன் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

வேலணை மண்கும்பான் பகுதியைச் சேர்ந்த 28வயதுடைய இளைஞரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை வேலணைப் பிரதேச செயலகத்துக்குச் சென்ற இளைஞர், கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப் படுத்துவதற்கு அனுமதி தருமாறு கோரி வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார்.

அத்துடன் பிரதேச செயலருக்கு அச்சுறுத்தல் விடுத்தமை, அரச ஊழியரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை போன்ற செயற்பாடுகளில் ஈடு பட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊர் காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் பிரதேச செயலர் வழங்கிய தகவலின் அடிப்படையில் அந்த இளைஞரைப் பொலிஸார் கைது செய்திருந்தனர். (ஐ-9)

## ஓடும் பேருந்தில் பயணி மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ.21

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த இ.போ.ச. பேருந்தில் பய ணித்த சக பயணி மீது, மது போதையில் ஏறிய இருவர் சரமாரியாகத் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் அச்சுவேலி மடத்தடிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த சசிக்குமார் (வயது32) என்ற தனியார் பேருந்து சாரதி மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்றதை அடுத்து பேருந்தை அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்ற சாரதி,காயமடைந்த நபரைப் பொலிஸ் நிலையத்தில இறக்கி முறைப்பாடு பதிவு செய்ய வைத்துள்ளார். தாக்குதல் மேற்கொண்ட நபர்கள் பொலிஸாரினால் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ-9)

## உழவு இயந்திரத்துடன் மோதி மோட்டார் சைக்கிள் விபத்து

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் உழவு இயந்திரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் தாவடிப்பகுதியில் இடம்பெற்ற வீதிவிபத்தில் இளைஞன் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் பொலிஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் கோண்டாவில் மேற்கு பகுதியைச் சோந்த மார்டின் குகதாஸ் (வயது33) என்ற நபரேவீதியில் காயங்களுக்கு உள்ளான நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

காங்கேசன்துறைப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து முன்னால் சென்ற உழவு இயந்திரத்துடன் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது என்று சுன்னாகம் பொலிஸார் குறிப் பிட்டனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய உழவு இயந்திரத்தின் சாரதியை சுன்னாகம் பொலிஸார் தேடி வருகின்றனர். (ஐ-9)

## ரூ. 2 கோடி ஹெரோயினுடன் 4 வெளிநாட்டவர்கள் கைது!

கொழும்பு, நவ.21

கல்கிஸ்ஸ பகுதியில் இரண்டு கிலோகிராம் ஹெரோயினைக் கடத்த முயற்சித்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்

கைது செய்யப்பட்ட நால்வரில் பாகிஸ்தான் பிரஜை ஒருவரும் மாலைதீவு பிரஜைகள் மூவரும் உள்ளடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் சர்வதேச போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் எனக் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட ஹெரோயின் சுமார் 2 கோடி ரூபா பெறுமதியானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)


### வாழ்வக அனுமதி – 2017

சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக நிறுவனத்தில் கண் பார்வையற்ற அல்லது குறைந்த பார்வையுடைய பிள்ளைகளை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பிள்ளைகளுக்கான உணவு, உடை உட்பட அனைத்து வசதிகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும். இவ்விதமான பிள்ளைகளின் பெற்றோர்கள் எதிர்வரும் 20.12.2016 ஆம் திகதிக்குப் பிந்தாமல் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு தங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்துக்கு வழிசமைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (சு/0811)

தொடர்பு:
தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.
தொலைபேசி: 021 224 0146
076 828 6331

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 - 222 3000, editor@kalaikkathir.lk
விளம்பரம்: 021 - 221 9440, ads@kalaikkathir.lk
விநியோகம்: 021 - 222 2600

## புதிய அரசமைப்பு நிறைவேற தாண்ட வேண்டிய கண்டங்கள்

இலங்கையில் நீண்ட காலம் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட பல விடயங்களை உள்ளடக்கியதாகப் புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டு வருவது பற்றிய பேச்சே இப்போது நாட்டின் அரசியல் களத்தில் முக்கியமாக அடிபடுகின்றது.

இதற்காக முழு நாடாளுமன்றமுமே அரசமைப்புச் சபையாக மாற்றப்பட்டுள்ளது. அது தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பமாகி விட்டன. ஆனாலும், அது மந்தகதியிலேயே உள்ளது. இன்னும் நீண்ட தூரம் கடக்க வேண்டும். அந்த முயற்சிகள் நின்று, நிலைத்து, நீடித்து, தாக்குப்பிடித்து, இறுதிவரை நகருமா? தெரியவில்லை. பெரும்பாலும் சந்தேகந்தான்.

தீர்வு முயற்சிகள் தொடர்பான - அரை நூற்றாண்டுக்கு மேலான - பட்டறிவு அந்தச் சந்தேகத்தைத்தான் தந்து நிற்கிறது.

புதிய அரசமைப்பு உருவாகுவதற்கான முயற்சி பல கண்டங்களைத் தாண்ட வேண்டும்.

முதலில் நாடாளுமன்றத்துக்கு ஓர் அரசமைப்பு நகல் வடிவத்தைச் சமர்ப்பிப்பதற்கான இணக்கத்துக்கு அந்த முயற்சியில் ஈடுபட்டுள்ள தரப்புகள் - குறிப்பாக ஆளும் தரப்பில் உள்ள ஐ.தே. கட்சி, ஸ்ரீ.ல.சு. கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்றனவும், எதிரணியில் உள்ள தமிழர் தரப்பும் - இணங்க வேண்டும்.

பின்னர், அதன் மீதான நாடாளுமன்ற விவாதத்தைத் தொடர்ந்து மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையினால் அது அரசமைப்புச் சபையால் (நாடாளுமன்றத்தால்) அங்கீகரிக்கப்பட வேண்டும்.

அதன் பின்பு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மக்களால் அது அங்கீகரிக்கப்படவும் வேண்டும்.

இவை மூன்றும் பிரதான கண்டங்கள். தவிரவும், இந்த நடவடிக்கைக்கு மத்தியில் இவ்விவகாரத்தில் உயர் நீதிமன்றம் சம்பந்தப்படும் நிலைமையும் உண்டு.

தற்போதைய அரசமைப்பின்படி அதற்கு பொருள் கோடும் - அதன் வாசகங்களுக்கு வியாக்கியானம் கூறும் - அதிகாரம் உயர் நீதிமன்றத்துக்கே உண்டு. ஆகவே, இந்த விடயத்தில் உயர் நீதிமன்றத்தின் கருத்தும் - பங்களிப்பும் - தாக்கம் செலுத்தக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இந்தக் கண்டங்களில் எல்லாம் பெரும் கண்டம் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் ஆணை பெறுவது என்பதுதான்.

இதற்கு முன்னர் கொண்டு வரப்பட்ட எந்த அரசமைப்பும் சர்வஜன வாக்கெடுப்பு என்ற மக்கள் நீதிமன்றத் தீர்ப்புக்கு விடப்பட்டு கொண்டு வரப்பட்டவை அல்ல.

அதனால், அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் சிக்கல்கள் இருந்திருக்கவில்லை.

ஆனால், இப்போது கொண்டுவரப்படும் அரசமைப்புக்கு இந்தப் பிரச்சினை இருக்கிறது. கடைசியாகக் கொண்டு வரப்பட்ட - 1978இல் நடைமுறைக்கு வந்த - தற்போது அமுலில் உள்ள - அரசமைப்பில் அத்தகைய பூட்டு ஒன்றையும் சேர்த்துப் போட்டு விட்டுள்ளார் அந்த அரசமைப்பின் சூத்திரதாரியான ஜே.ஆர். ஜெயவர்த்தன.

தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பின் பிரதான - முக்கிய - அம்சங்களை மாற்றுவதாயின் அதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவுடன் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் ஆணையையும் பெற வேண்டும் என்கிறது ஜே.ஆரின் அந்த அரசமைப்பு.

அதன்படி செயற்படுவதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை என்பதைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முதல் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் வரை அனைவரும் உணர்ந்து, ஒப்புக் கொண்டு, அதன்படி செயற்படுவது குறித்து கோடியும் காட்டிவிட்டனர்.

இந்தச் சர்வஜன வாக்கெடுப்புக் கண்டத்தை வாய்ப்பாகப் பயன்படுத்தி, அதில் வைத்து இந்த அரசமைப்பு உருவாக்க முயற்சியைத் தோற்கடித்து, அதன் மூலம் தற்போதைய அரசியல் ஸ்திரத்தன்மையைக் குழப்பி, அந்தச் சந்தர்ப்பத்தின் மூலம் மீண்டும் அரியாசனத்தைக் கைப்பற்றலாம் என்று மஹிந்த ராஜபக்ஷ ஆதரவு அணி திட்டம் போடுகிறது.

சிறுபான்மையினருக்கு அதிகாரம் பகிர்வதை அல்லது பரவலாக்கம் செய்வதைத் தனது பௌத்த, சிங்கள மேலாதிக்க வெறிப்போக்குக் காரணமாகக் கடுமையாக எதிர்க்கும் பேரினவாதிகளும் இந்த சர்வஜன வாக்கெடுப்பு என்ற சந்தர்ப்பத்தை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்வதற்காக அவ்விவகாரத்தில் மேற்படி மஹிந்த அணியுடன் சேர்ந்தியங்குவதற்கான ஏது நிலைகளும் அதிகம் தென்படுகின்றன.

அதிகாரப் பகிர்வின் போது தமக்குரிய தனித்துவ முக்கியத்துவம் வழங்கப்படவில்லை என்ற தீர்மானத்துக்கு வரக்கூடிய முஸ்லிம் தரப்பினர் கூட இந்த சர்வஜன வாக்கெடுப்பின் போது அரசமைப்பு மாற்றத்தை அங்கீகரிக்க மறுக்கும் நிலைமையும் உண்டு.

இவற்றை எல்லாம் மனதில் வைத்துக்கொண்டுதான் காய்களை இப்போது இருந்தே, நகர்த்தத் தொடங்கியிருக்கிறது மஹிந்த ராஜபக்ஷவின் பின்னால் திரண்டுள்ள எதிரணி.

உத்தேச புதிய அரசமைப்பை, சர்வஜன வாக்கெடுப்பு என்ற சந்தர்ப்பத்தில் வைத்து மண்கவ்வச் செய்யும் எண்ணத்துக்குக் கட்டியம் கூறும் செயற்பாடுகளாகவே சிறுபான்மையினருக்கு எதிரான இனவெறுப்புப் பிரசாரமும் அதையொட்டிய நடவடிக்கைகளும் இந்தச் சந்தர்ப்பத்தில் கட்டவிழ்வதை நாம் நோக்கவேண்டும்.

புதிய அரசமைப்பு நாடாளுமன்றத்துக்கும் பின்னர் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களிடமும் வரும் சமயத்தில், இந்த இனவெறுப்பு நடவடிக்கைகள் பெரும் சூறாவளியாக நாட்டைத் தாக்கும் ஏதுநிலை உண்டு.

அந்த சூறாவளிக்கு முந்திய இன முறுகல்களாகவே, தற்போது பரவலாக நாட்டில் இடம்பெறும் - சிறுபான்மையினருக்கு எதிரான - குரோத நடவடிக்கைகளை நோக்கவேண்டியுள்ளது.

# தொடர் மழையால் மண்சரிவு 10 மாவட்டங்களுக்கு ஆபத்து !

கொழும்பு, நவ. 21

நாட்டில் பெய்து வரும் கடும் மழை காரணமாக பத்து மாவட்டங்களில் மண்சரிவு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் ஆர்.என்.எஸ்.பண்டார தெரிவித்துள்ளார்.

நுவரெலியா, பதுளை, மாத்தளை, இரத்தினபுரி, களுத்துறை காலி, மாத்தறை, கேகாலை, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் இந்த மண்சரிவு ஆபத்துக் காணப்படுகின்றது.

இது தொடர்பில் பிரதேச மக்களுக்கு விளக்கமளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதேச அலுவலகங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது தென்கிழக்கு கடற்பிரதேசங்களில் நிலவும் சீரற்ற நிலை எதிர்வரும் தினங்களில் குறைவடையும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இடைப் பருவப்பெயர்ச்சி மழை அதிகரிப்பதன் மூலம் ஏற்படக்கூடிய மின்னல் ஆபத்துக்களைத் தவிர்த்துக்கொள்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களுக்குத் தெரிவித்துள்ளது. (ஐ)

# வெளிநாடுகளுக்குப் பெண்களை கடத்துவோர் குறித்து விசாரணை

கொழும்பு, நவ. 21

இலங்கைப் பெண்கள் வெளிநாடுகளுக்குக் கடத்துவோர் தொடர்பில் தீவிர விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுவேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட விசாரணைப் பிரிவு, இது தொடர்பில் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கையைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் மாலைதீவில் பாலியல் தொழிலில் ஈடுபடுகின்றனர் என்று தகவல்கள் வெளியாகி இருந்தன. இதனுடன் தொடர் புடைய இருவர் கைது செய்யப் பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களின் மூலம் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் விசேட விசாரணைப்பிரிவு எதிர்பார்க்கின்றது.

நூற்றுக்கும் அதிகமான இலங்கைப் பெண்கள் மாலை தீவில் பாலியல் தொழிலுக்கு ஈடுபடுத்துவது தொடர்பில் கிடைத்த தகவல்களுக்கமைய கடந்த ஒன்றரை மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட விசேட விசாரணைகளின் பின்னர் இரண்டு சந்தேக நபர்களைக் கைது செய்ய முடிந்தது. அவர்களால் மாலைதீவுக்கு அனுப்பப்பட்ட பெண்களில் அதிகளவிலானோர் கிராமப் பகுதிப் பெண்கள் என தகவல் வெளியாகியுள்ளது.

பெண்களை விற்பனை செய்யும் நடவடிக்கையில் வெளிநாட்டவர்களும் தொடர்புபட்டுள்ளமை தெரியவந்துள்ளது. பங்களாதேஷ் நாட்டைச்சேர்ந்த சிலர் தப்பியோடியுள்ளனர். அவர்களைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது.

இலங்கைப் பெண்களை சுற்றுலா விசா மூலம் ப்ங்களாதேஷ்க்கு அழைத்துச் செல்லும் நபர்கள். அந்நாட்டு முக்கியஸ்தர்களுக்கு விற்பனை செய்கின் றனர் என்றும் செய்திகள்வெளியாகியுள்ளன. (ஐ)

# இடி மின்னல் தாக்கி வீட்டுப் பகுதிகள் வெடிப்பு

வரணி, நவ.21

வரணி கரம்பைக் குறிச்சிப் பகுதியில் வீடு ஒன்றில் இடி மின்னல் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு மழை பெய்து கொண்டிருந்த போது கரம்பைக் குறிச்சி மேற்கைச் சேர்ந்த எஸ். பகீரதன் என்பவரது வீட்டின் மீது இரவு 8.30 மணியளவில் இடி மின்னல் தாக்கம் ஏற்பட்டது.

இதனால், வீட்டு வெளிக் கதவு, தூண், மின்சார ஆழிகள் பொருத்தும் இடம் என்பவற்றில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இதைவிடப் பயன்தரு மரங்களும் முறிந்துள்ளன என்று வீட்டு உரிமையாளர் கூறினார். (ஐ-40)

# அம்புலன்ஸ் சேவை பெறுவதில் மக்கள் ஆர்வம் காட்டவில்லை

### வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.21

வடமாகாணத்தில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள விசேட நோயாளர் அம்புலன்ஸ் சேவையைப்பெற்றுக்கொள்வதில்பொது மக்கள் பெரிதும் ஆர்வம் காட்டவில்லை என்று வடமாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நோயாளர் அம்புலன்ஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டு 10 மாதங்கள் கடந்துள்ள போதிலும் இந்த சேவைக்கான அழைப்புக்கள் 50 வீதம் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இந்த தகவலைக் குறிப்பிட்டார்.

இலங்கையில் முதன் முறையாக வடமாகாணத்தில் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி விசேட நோயாளர் அம்புலன்ஸ் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

அத்துடன் இந்தச் சேவையில் 100 நோயாளர் அம்புலன்ஸ்கள் பயன்பாட்டில் உள்ளன. இந்த சேவையை ஒருங்கிணைக்கும் அலுவலகம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அமைந்துள்ளது. இதற்கென விசேடமாக இரண்டுதொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

எனினும் இந்த தகவல் இதுவரை பொதுமக்களை அதிகளவில் சென்றடையவில்லை எனவும் கடந்த மாதம் வரை 50 வீதமான அழைப்புக்கள் யாழ் மாவட்டத்திலிருந்து மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் இதற்கு அடுத்தபடியாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்கள் காணப்படுகின்றன எனவும் சுகாதார அமைச்சர் இதன்போது தெரிவித்தார். (ஐ-81)

# வடமராட்சியில் பட்டம் விடும் 'சீஸன்' ஆரம்பம்

வடமராட்சி, நவ.21

வடமராட்சிப் பிரதேசத்தில் பட்டம் விடும் 'சீஸன்' ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் தைப் பொங்கல் திருநாளன்று பட்டம் விடும் 'சீஸன்' உச்சக்கட்டத்தை அடையும். எனினும் தைப்பொங்கலுக்குப் பின்னர் இரண்டு அல்லது மூன்று வாரங்கள் வரை பட்டம் விடும் 'சீஸன்' நீடிக்கும்.

விதம் விதமாகப் பட்டங்களை பறக்க விடுவதில் சிறுவர்கள் முதல்முதியோர்கள்வரை ஆர்வம் காட்டிவருவார்கள். குறிப்பாக 'சீஸன்' காலத்தில் இரவு வேளைகளிலும் கூட மின்சார ஒளியில் அலங்காரங்களுடன் வானத்தில் பட்டங்கள் பறப்பதை அவதானிக்கலாம்.

தனியார் சில விதம் விதமான பட்டங்களைக் கட்டி இளைஞர்களுக்கு வழங்குவதுடன், பிரதேசக் கடைகளிலும் இவை தற்போது விற்பனைக்கும் வந்துள்ளன,

பிரதேசத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் தைப்பொங்கல் தினத்தன்று விதம் விதமான பட்டங்களை விடும் போட்டிக்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-30)

### நாளை

22.11.2016
செவ்வாய்க்கிழமை
திதி : அட்டமி காலை 7.53 வரை
நட்சத்திரம் : மகம்
மு.ப. 10.41 வரை
சுபநேரம் 10.40 - 12.10
இராகுகாலம் 3.10 - 4.40

# துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்; முஸ்லிம் இளைஞர் உயிரிழப்பு

## மற்றும் ஒருவர் காயம்; கல்ஹின்னையில் சம்பவம்

கண்டி,நவ.21

கண்டி - கல்ஹின்னை பிரதேசத்தில் நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் இருவரும் 14 வயதான முபீத் மற்றும் 20 வயதான நாஸிர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதில் காயமடைந்த இருவரும் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் இவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

என்ன காரணத்துக்காகத் தாக்குதல் சம்பவம் நடைபெற்றது என்பது தொடர்பில் தகவல் வெளியாகவில்லை.

சந்தேகநபர்களில் ஒருவர் அங்குபுர - கபல்கஸ்தென்ன பிரதேசத்தில் வைத்து ரி 56 ரக துப்பாக்கியுடன் கார் ஒன்றில் வைத்து பிரதேசவாசிகளால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் கூறினர்.

இதேவேளை, சுமார் நான்கு வாரங்களுக்கு முன்னர் சிகரெட் இல்லை என்று கூறிய காரணத்துக்காக சிங்கள இளைஞர்கள் குழுவொன்று கல்ஹின்னையில் புகுந்து தாக்குதல் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உள்ளூராட்சித் தேர்தல் ஜனவரியில் அறிவிப்பு

கொழும்பு,நவ.21

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து ஜனவரி மாத இறுதியில் அரசு அறிவிக்க உள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சியினர் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தும் தினம் தொடர்பில் ஜனவரி மாத இறுதியில் அரசு உத்தியோக பூர்வ அறிவிப்பு ஒன்றை விடுக்க உள்ளது என்று நம்பத் தகுந்த வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்துவது குறித்து அரசு கூட்டணிக் கட்சிகளுடன் ஏற்கனவே பேச்சு நடத்தியுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, துரித கதியில் தேர்தல் நடத்துவது ஆளும் கட்சிக்கு சாதகமாக அமையும் என கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் புதிய அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட உள்ள நிலையில் தேர்தல் தொடர்பில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# வடக்கு, கிழக்கு எம்.பிகளுக்கு விமானப் பயண வசதிகள்

*சபையில் பிரதமர் ரணில் வலியுறுத்தல்*

வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப் பினர்களுக்கு, விமானப் பயண வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடந்த நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே, ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :-

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊதியம் மற்றும் மேலதிக கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வசதிகளைச் செய்து கொடுக்காமல் அவர்களிடம் மேலதிக பொறுப்புணர்வுகளை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும்.

அவர்களுக்குத் தமது தொகுதிகளில் பணிகளை மேற்கொள்வதற்கு ஒரு லட்சம் ரூபா மேலதிக கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

அமெரிக்கா, இந்தியாவில் விமானப் பயணச் சீட்டுகள் உள்ளிட்ட பல வசதிகள் வழங்கப்படுகின்றன.

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாம், விமானப்பயண வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் – என்றார் (ஐ)

# நிறம் மாறவுள்ள மஞ்சள் கோடுகள்

இலங்கையின் வீதிகளில் கடவைகளை கடக்கும் மஞ்சள் கடவைகளின் நிறங்கள் மாற்றப்படவுள்ளன.

இதன்படி மஞ்சளுக்குப் பதிலாக வெள்ளை நிறங்கள் குறித்த கடவைகளுக்கு தீட்டப்படவுள்ளன.

போக்குவரத்து ஒழுங்கு மீறலுக்கு எதிராக ஆகக்குறைந்த தண்டனைக் கட்டணம் 2,500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையிலேயே மஞ்சள் கடவையை வெள்ளையாக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் நிஹால் சூரியாராச்சி தெரிவித்துள்ளார்.

பனிப்பொழிவைக்கொண்ட நாடுகளிலேயே வீதிகளை கடக்க மஞ்சள் கடவைகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஏனைய நாடுகளில் வெள்ளைக் கடவைகளே பயன்படுத்தப்படுகின்றன என்று நிஹால் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# ‘கடல் நீர் நடுவே பயணம் போனால் குடிநீர் தருபவர் யாரோ…!

சர்வதேச மீனவர்கள் தினம் இன்றாகும். அதனையொட்டி இந்தச் சிறப்புக் கட்டுரை பிரசுரமாகிறது


எஸ்.ரகு

*“தரைமேல் பிறக்க வைத்தான்*
*எங்களை தண்ணீரில்*
*பிழைக்க வைத்தான்*
*கரைமேல் இருக்க வைத்தான்*
*பெண்களை கண்ணீரில்*
*குளிக்க வைத்தான்…”*

இது கவிஞர் வாலி எழுதிய பாடல் வரிகள் மட்டுமல்ல, இது தான் மீனவர்களின் வாழ்க்கை. மீனவர்களின் வாழ்வியலின் துன்பங்களை வாலிபக் கவிஞர் வாலி இந்தப் பாடலில் உணர்வு பூர்வமாகச் சொல்லியிருக்கிறார்.

உயிர் ஆபத்துக்கு மத்தியில் நாள்தோறும் தமது தொழிலைச் செய்கின்ற மீனவர்களின் வாழ்வு, விடிவைக் கண்டதில்லை. அதுவும் குறிப்பாக எமது தமிழ் மீனவர்களின் வாழ்வில் எப்பொழுதும் வசந்தம் வீசியதில்லை. மாறாக, மாறி மாறி அவர்கள் வாழ்வில் புயல்தான் வீசிக்கொண்டிருக்கின்றது. வடக்கு, கிழக்கு மீனவர்கள் சந்தித்த துன்பங்களும், இழப்புகளும், உயிர்ச் சேதங்களும் சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதல்ல.

இயற்கை அனர்த்தத்தாலும், போராலும் அவர்கள் சந்தித்த இழப்புகளைச் சொல்லி- செயலில் வடிக்கமுடியாது. அண்மைக் காலமாக இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கும் அவர்கள் முகம் கொடுத்து வருகின்றார்கள். கடற்றொழில் என்பதே கஷ்டங்கள் நிறைந்த தொழில்தான். இதைத்தான் கவிஞர் வாலி, “கடல் நீர் நடுவே பயணம் போனால் குடிநீர் தருபவர் யாரோ…?” என்ற வரிகளில் கூறியிருந்தார். ஆனால், எமது மீனவர்கள் எதிர் நோக்கும் இன்னல்களை வார்த்தைகளால் வரையறுக்கமுடியாது.

இன்று சர்வதேச மீனவர் தினமாகும். இந்த நாளிலாவது எமது மீனவர்கள் படும் இன்னல்களை எண்ணிப் பார்க்க வேண்டும். மீனவர்கள் கடலில் தங்களுக்கு ஏற்படும் தொழில் சார்ந்த பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் நோக்கில் 40 நாடுகளின் மீனவப் பிரதிநிதிகள் 21.11.1997 அன்று டில்லியில் கூடி விவாதித்து உலக அளவில் இணைந்து மீனவர் உரிமைக்குக் குரல் கொடுத்துப் போராடுவதற்காக 'மீன்பிடித் தொழிலாளர்கள் பேரவை' என்ற அமைப்பை உருவாக்கினர்.

இதன்மூலம் மீனவர்களுக்கு எதிராக அரசுகள் கொண்டுவரும் திட்டங்கள், மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் பிரச்சினைகள், பாரம்பரிய மீனவர்கள் உரிமைகள், சுற்றுச்சூழல் பாதிப்பால் கடல் மாசடைந்து, மீன்வளம் குன்றி, மீன்பிடித் தொழில் அழிவுப் பாதையில் செல்வது உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடிவு எடுக்கப்பட்ட நாளான நவம்பர் 21 ஆம் திகதியே 'சர்வதேச மீனவர்கள் தினமாக அறிவிக்கப்பட்டது.

ஆனால், ஈழத்து மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இந்த மீனவர் தினத்தாலோ, அல்லது சர்வதேச மீனவர் அமைப்புகளாலோ தீர்த்துவிட முடியாது. காரணம் என்ன ? அதற்கான முயற்சிகளைக் கூட எவரும் கருத்தில் எடுத்தார்கள் எனத் தெரியவில்லை. கடந்த காலங்களில் எமது மீனவர்களுக்குப் பெரும் பிரச்சினையாக இருந்ததே அரசுதான். மீனவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் அரசே அவர்களுக்குப் பிரச்சினையாக இருக்கும் போது எவ்வாறு அவர்களது பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

**இன்றும் கண்ணீர் வடிக்கும் நிலை**

போர்க்காலத்தில் தொழிலுக்குச் சென்ற பல தமிழ் மீனவங்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இன்றும் இந்த வேதனையை அவர்களது குடும்பங்கள் அனுபவித்து வருகின்றனர். தந்தையை இழந்த பிள்ளைகளும், கணவரை இழந்த மனைவியும், மகனை இழந்த தாயும் என தமிழர் பகுதிகளில் இன்றும் கண்ணீர் ஓயவில்லை.

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தொழிலுக்குச் சென்று வரும் மீனவர்களை இயற்கையும் விட்டுவைக்க வில்லை. 'சுனாமி' என்ற பெயரில் இயற்கையும் அவர்களை அழித்து நாசமாக்கி யது. குடும்பம் குடும்பமாகக் கொன்று குவித்தது. உறவுகளையும் சொத்துக்களையும் இழந்து மக்கள் நிர்க்கதியாகினர். குறிப்பாக, வடக்கு, கிழக்கு தமிழ் மக்களே 'சுனாமி'யாலும் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். இந்த அழிவிலிருந்து அவர்கள் மீண்டு வரும்பொழுது, மீண்டும் போர் ஆரம்பமானது. போராலும் கரையோரப் பகுதி மக்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டனர்.

ஆனால், போர் ஓய்ந்த பின்னர் சிறுகச் சிறுகச் சேர்த்து தொழில் உபகரணங்களை வாங்கித் தமது வாழ்வாதாரத்தைப் பெருக்கி வருகின்றனர். ஆனால், தற்போதும் அவர்களால் நிம்மதியாகத் தொழிலைச் செய்ய முடியவில்லை.

தென்னிலங்கை மீனவர்களாலும், தமிழக மீனவர்களாலும் பெரும் துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றனர். தென்னிலங்கை மீனவர்கள் எமது வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வந்து தொழில் செய்வதன் மூலம் மீன்வளம் அழிந்து வருகிறது. இதற்கு இலங்கைப் படையினரும் ஆதரவு வழங்கி வருகின்றனர். அதுமட்டு மன்றி எம்மைத் தொப்புள் கொடி உறவுகள் என்று கூறிக்கொள்ளும் தமிழக மீனவர்களின் அத்து மீறல்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

தமிழக மீனவர்கள் அத்துமீறி நுழைந்து எமது கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். ரோலர் போன்ற பாரிய இயந்திரப் படகுகள் மூலம் இவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதால், எமது மீன்வளம் முற்றாக அழிக்கப்படுகிறது. அத்துடன், எமது மீனவர்களின் சிறிய ரக வலைகளையும் அறுத்தெறிந்து அடாவடியில் ஈடுபடுகின்றனர். எனவே, இந்த சர்வதேச தினத்திலாவது அனைவரும் வடக்கு, கிழக்கு மீனவர்களின் நிலை குறித்து சிந்திக்க வேண்டும். அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும்.

எங்கள் மீனவர்களுக்கு கிட்டுமா விடிவு…? அது எப்போது..?

# மட்டு. கதிரவெளியில் நடந்த பண்பாட்டுப் பவனி!




கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் கோறளைப்பற்று வடக்கு வாகரைப் பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா மற்றும் கலாசார விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை மட்டு.கதிரவெளி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

பிரதேச செயலாளர் எஸ்.ராகுலநாயகி தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வு, நடைபவனியுடன் ஆரம்பமானது. வெகு விமர்சையாக நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் கும்மி, கோலாட்டம் மற்றும் காவடி போன்ற பாரம்பரிய நடனங்களை நிகழ்த்தினார்கள். நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச)

## இந்து தர்மாசிரியர் பரீட்சைக்கான கருத்தரங்கு

மட்டக்களப்பு, நவ.21

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்து தர்மாசிரிய பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லடி நாவற்குடா இந்து கலாசார நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கு மட்டக்களப்பு, அம்பாறை, பொலநறுவை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இருந்து பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளின் வசதி கருதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்து தர்மாசிரியர் பரீட்சை இவ்வருட இறுதியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## பாடசாலைகளின் அபிவிருத்திக்கு ரூ. 2 கோடி 70 இலட்சம்

சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்தின் கீழுள்ள இறக்காமம் பிரதேச பாடசாலைகளுக்கான அபிவிருத்திப் பணிகளுக்கு 2 கோடி 70 இலட்சம் ரூபா ஒதுக்கப்படட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப் படவுள்ளன அதன் படி ஆரம்பக் கல்வி கற்றல் வளநிலையம் மற்றும் ஆசிரியர் விடுதிகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எஸ். நஜீமின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹம்மட் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார். வரிப்பத்தான் சேனை லீடர் ஜுனியர் பாடசாலைக்கு 18 மில் லியன் ரூபாய் செலவில் ஆரம்பக் கல்வி கற்றல் வள நிலையத்திற்கான இருமாடிக்கட்டடம், வாங்காமம் ஒரா பிபாஷா வித்திலயத்திற்கு 4.5 மில்லியன் ரூபா செலவில் ஆசிரியர் விடுதி, இலுக்குச்சேனை அரசின் முஸ்லிம் கலவன் பாடசாலைக்கு 4.5 மில்லியன் ரூபா செலவில் ஆசிரியர் விடுதி ஆகியவற்றுக்கான வேலைத் திட்டம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. (இ

# செங்கல் தொழிற்சாலைகளை அகற்ற எச்சரிக்கைக் கடிதம்

## சம்மாந்துறை பிரதேச அபிவிருத்திக் குழு தீர்மானம்

அம்பாறை, நவ.21

அம்பாறை, சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நெய்னாகாடு கிராமத்தில் நீண்டகாலமாக இயங்கி வரும் செங்கல் உற்பத்தித் தொழிற்சாலைகளை அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கான எச்சரிக்கை கடிதங்கள் வழங்கப்பட்டு வருகின்றன என சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எம்.எம். சாபீர், நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் குறித்த தொழிற்சாலைகளை அகற்ற வேண்டும் என்றும் அவ்வாறு அகற்றாதவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.



நெய்னாகாடு கிராமத்தில் நீண்டகாலமாக இயங்கி வரும் செங்கல் உற்பத்தி தொழிற்சாலைகளால், அங்கு வாழும் மக்கள், காசநோய், கண்நோய் மற்றும் தோல் நோய்களுக்கு உள்ளாகி வருகின்றன.

அங்கு குடிதண்ணீர் மாசடைந்து காணப்படுவதால் மக்கள் பெரும் சுகாதார சீர்கேட்டை எதிர்கொள்கின்றனர்.

இந்த தொழிற்சாலைகளை வேறிடத்துக்கு மாற்றுமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் பலமுறை கோரிக்கைவிடுத்தும், அதை அவர்கள் உதாசீனம் செய்து வருகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்தவாரம் நடைபெற்ற சம்மாந்துறை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இந்த தொழிற்சாலைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (ச)

## பாடசாலைக்கான காணி கொள்வனவுக்கு நிதி உதவி

அம்பாறை, நவ. 21

அம்பாறை, பொத்துவில் அல் அஸ்ஸாதிக் வித்தியாலயத்துக்கு காணி கொள்வனவு செய்வதற்காக பொத்துவில் நன்நோக்கு அமைப்பும், தில்ஸாத் அகமட் பஷண்டேசன் அமைப்பும் இணைந்து, முதற்கட்டமாக 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி நன்கொடையாக வழங்கியுள்ளன.

பொத்துவில் பழைய தபாலக முன் வீதியில் அமைந்துள்ளகிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் 2013ஆம் ஆண்டு இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

இங்குதரம் ஒன்று தொடக்கம் 4 வரையான வகுப்புகளில் 242 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இந்தப்பாடசாலை தகர கொட்டில்களிலேயே தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

இப் பாடசாலைக்குப் புதிய கட்டடம் நிர்மாணிப்பதற்காக காணி கொள்வனவுக்கு நிதி திரட்டும் முகமாக சனசமூக நடைபயணம் ஒன்று கடந்த புதன் கிழமை பொத்துவில் பிரதேச செயலாளர் என்.எம்.முஸாரத் தலைமையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-ச)

# தேரர்களின் இனவெறிச் செயல்கள்; நல்லிணக்கம், நல்லாட்சிக்குப் பங்கம்

## அரசாங்க பொது ஊழியர் சங்கம் அறிக்கை

"சிறுபான்மை மக்களுக்கு எதிராக இனவெறிச் செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டு வருவது நல்லிணக்கம், இன சௌஜன்யத்துக்குப் பாதிப்பாகவே அமையும். அரசின் காத்திரமான நடவடிக்கையால் அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும்"

இவ்வாறு அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ். லோகநாதன் விடுத்துள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார். மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அண்மைக் காலமாக சில பௌத்த தேரர்கள் முன்னெடுத்துவரும் சிறுபான்மை சமூகங்களை உணர்வுபூர்வமாகப் பாதிக்கும் இனவாத, பௌத்த மேலாதிக்கச் செயற்பாடுகளைக் கண்டிக்கிறோம். இத்தகைய இனவாத நோக்கு கொண்டு செயற்படுவோர் பௌத்த துறவிகளானாலும் நல்லாட்சி அரசு உரிய நடவடிக்கை எடுக்க முன் வரவேண்டும். கடந்த சில தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு மங்களாராமய விகாரையின் விகாராதிபதி அம் பிட்டிய சுமணரத்ன தேரர் நடந்து கொண்டுள்ள கீழ்த்தரமான சம்பவம் தமிழ் மக்களை மட்டுமன்றி சகோதர முஸ்லிம் மக்களையும் கொதிப்படையச் செய்துள்ளது.

குறித்த தேரர் அத்துமீறிக் காணி அபகரிப்புச் செய்ய முனைவதைத் தடுக்கும் வகையில் நேரடியாகப் பார்வையிடச் சென்ற பிரதேச உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்களிடம் இனவாதத்தைக் கக்கி சீறிப்பாய்ந்து அடாவடித்தனம் காட்டியுள்ளார்.

இதன்போது தமிழ் மக்களையும் என் சகோதர முஸ்லிம் மக்களையும் இழிவுபடுத்திப் பேசியுள்ளமை மிக வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும்.

சிங்கள பௌத்த மேலாதிக்க இறுமாப்புக் கொண்ட இத்தகையோரின் இழி செயற்பாடுகள், நல்லிணக்கம், நல்லாட்சி, இன சௌஜன்யம் என்பவற்றுக்காகப் பாடுபட்ட அமரர் சோபித தேரர் போன்றவர்களின் நல்நோக்குகளுக்கும், முன்மாதிரிகளுக்கும்; சவாலாகவே அமைந்துள்ளன.

எனவே இந்த நல்லிணக்க செயற்பாடுகளுக்கு எதிரான தேரர் மீது காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நல்லாட்சி அரசு முன்வரவேண்டும்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-150)

# அமிர்தகழி அம்மனின் வேலி உடைத்தெறிந்து நாசம்!



மட்டக்களப்பு, நவ. 20

மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கம் பிள்ளையார் கோவிலுக்குச் சொந்தமான கண்ணகி அம்மன் கோவிலுக்கு முன்னால் உள்ள காணியின் வேலி சிலரால் உடைத்து நாசமாக்கப்பட்டுள்ளது என மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கோவில் வண்ணக்கர்மார்கள் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர் என மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் கோவில் தலைவர் மயில்வாகனம் அரசரட்ணம் தெரிவித்தார்.

அந்த முறைப்பாட்டை அடுத்து குறிப்பிட்ட இடத்துக்கு வருகை தந்த மட்டக்களப்பு பொலிஸார், மண்முனை வடக்கு பிர தேசசெயலக உதவி பிரதேச செயலாளர் மற்றும் அமிர்தகழி கிராம சேவை உத்தி யோகத்தர் சகிதம் நேரில் பார்வையிட்டதுடன் இது விடயத்தில் நவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கம் பிள்ளையார் ஆலயத்துக்குச் சொந்தமான காணிகள் கடந்த காலத்தில் சிலரால் அத்துமீறி அபகரிக்கப்பட்டுள்ளன எனவும் அதன் காரணமாக ஆலயத்துக்குச் சொந்தமான காணிகளைப் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கைகளை ஆலய நிர்வாகத்தினர் மேற் கொண்டு வருகின்றனர் எனவும் மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் ஆலயத் தலைவர் தெரிவித்தார். (ச)

# வடக்கு உப்பளங்களைத் தனியார் மயப்படுத்த அரசு எடுக்கும் நடவடிக்கைகள் தவறானவை

## தடுத்து நிறுத்துமாறு கோரி மன்னார் அபிவிருத்திக் குழுவிடம் மகஜர்



வடக்கின் உப்பளங்களைத் தனியார் மயப்படுத்த அரசு எடுக்கும் நடவடிக்கை வரலாற்றுத் தவறாகும்.

அதனை நிறுத்துவதற்கு வடக்கின் வாக்காளர்களாக இருந்து ஒத்துழைப்பு வழங்கிய மக்களின் நலன் கருதி கட்சி வேறுபாடின்றி அழுத்தம் கொடுக்கவேண்டும்.

– இவ்வாறு மன்னார் மாந்தை சோல்ட் லிமிட்டெட் உப்பள ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவர்களுக்கு நேற்று முன்தினம் மகஜர் ஒன்றை ஊழியர்கள் அனுப்பிவைத்துள்ளனர்.

விலைபோக உத்தேசிக்கப்பட்டுள்ள மாந்தை உப்புக் கூட்டுத்தாபன (மன்னார், ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு) உப்பளங்கள் தொடர்பில் மன்னார் மாந்தை உப்பள ஊழியர்கள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வட பகுதியில் உள்ள உப்பளங்கள் அனைத்தும் மாந்தை உப்புக் கூட்டுத்தாபனத்தின் பெயரின் கீழ் உள்ளன.

அவற்றில் மன்னார் உப்பளம், ஆனையிறவு உப்பளங்கள் (குறிஞ்சாத்தீவு) உட்பட அனைத்து உப்பளங்களையும் தனியார் உடைமையாக்குவதற்கான ஆலோசனை நிதி அமைச்சரால் 2016, நவம்பர் மாதம் 10ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு முன்மொழியப்பட்டது.

தற்போது இரண்டாம் கட்ட வாசிப்பும் நிறைவு பெற்று மூன்றாம் கட்ட வாசிப்பை 2017ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டம் எதிர்நோக்கியுள்ளது.

மன்னார் உப்பளம் 1938 ஆம் ஆண்டு தொடக்கம் நீண்ட வரலாற்றைக் கொண்டது. பல நிர்வாகக் கட்டமைப்புக்களில் இருந்து தற்போது கைத்தொழில் வணிக அமைச்சின் கீழ் இலாபத்துடன் இயங்குகின்ற உப்பளமாகும்.

நூற்றுக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கும் பங்களிப்பு செய்யும் உப்பளமாகும். பல மில்லியன் ரூபாவை வருடாந்தம் மொத்த இலாபமாக அது ஈட்டித்தருவதோடு, வருடாந்தம் வருமான வரியாக பல மில்லியன் ரூபாவை அரசுக்கு வருடாந்தம் செலுத்தி வருகின்ற மன்னார் மாவட்டத்தின் மிகப் பெரிய கைத்தொழில் நிறுவனமுமாகும்.

1990 - 2001, உள்நாட்டு போர் நடைபெற்றுக்கொண்டிருந்த போது மன்னார் மாவட்ட முன்னாள் அரச அதிபர்களின் சிறப்பான நிர்வாகக்கட்டமைப்பின் கீழ் உப்பளம் பல மில்லியன் இலாபத்துடன் இயக்கப்பட்டது. பல குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கு அது உதவி செய்தது.

2012- 2013 இல் பல மில்லியன் செலவில் கைத்தொழில் வணிக அமைச்சால் அபிவிருத்தி செய்யப்பட்டு அதிகரிக்கப்பட்ட உப்பு உற்பத்தியுடன் பல புதிய வேலை வாய்ப்புக்களை வழங்கி பல மில்லியன் இலாபத்தில் தற்போது மன்னார் உப்பளம் இயங்கிக்கொண்டிருக்கின்றது.

உள்நாட்டுப் போருக்கு முன்பு தேசிய உப்பு உற்பத்தியில் வட பகுதியின் மிகப்பெரிய உப்பளமான ஆனையிறவு உப்பளம் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மெற் றிக்தொன் உப்பை உற்பத்திசெய்து தேசிய உற்பத்தியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்து அப்பகுதியில் ஆயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கு உதவியுள்ளது

நான்கு தசாப்தங்களாக உற்பத்தி மௌனிக்கப்பட்டிருந்த வடமாகாணத்தின் தாய் உப்பளம் ஆனையிறவு தற்போது மீண்டும் அபிவிருத்தி செய்து போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பை வழங்கி மிகப்பெரிய உப்பு அறுவடையை பெற்றுக் கொள்ள கைத்தொழில் வணிக அமைச்சால் பல மில்லியன் செலவில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் – ஆனையிறவு உப்பளத்தையும், மன்னார் உப்பளத்தையும் விற்பதற்கு நல்லாட்சி அரசு என்று கூறிக் கொண்டு அரசு எடுக்கும் நடவடிக்கை தவறு.

போரால் பாதிக்கப்பட்ட வட பகுதி மக்களின் வாழ்வாதாரத்தையும், ஏழை எளிய மக்களின் வேலைவாய்ப்பு, மற்றும் பொருளாதாரத்தையும் நீண்ட காலத் திட்டமிடலின் ஊடாக இல்லாதொழிக்கும் நடவடிக்கையாகவே நாம் கருதுகின்றோம்.

இது தனியார் ஒருவரின் கைக்குச் செல்லுமானால் வருடாவருடம் இதன் மூலம் ஈட்டப்படுகின்ற வருமானம் தனியொரு முதலாளியையே சென்றடையும். இதனைக் கொள்வனவு செய்பவர் காலப் போக்கில் உப்பளத்தை மூடிவிட்டு வேறு வருமானம் பெற்றுக்கொள்ளும் வகையில் இக்காணிகளைப் பயன்படுத்த முனையலாம்.

இதனால் நூற்றுக்கணக்கான ஏழைக் குடும்பங்களின் வாழ்வாதாரம் கேள்விக்குள்ளாகும்.

எனவே, வடபகுதி மாந்தை உப்பளத்தின் கீழ் உள்ள மன்னார், ஆனையிறவு (குறிஞ்சாத்தீவு) உப்பளங்களை அரசு அபிவிருத்தி செய்து உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட வட பகுதி மக்களின் வாழ்வாதார, பொருளாதார வாழ்க்கைத் தரம் மேம்பாடடைய உதவ வேண்டும் வேலைவாய்ப்புக்களை வழங்கி உப்புஉற்பத்தியையும் அதனுடன் இணைந்த உப உற்பத்திகளையும் மேலும் அதிகரிக்கக் கூடிய திட்டங்களையும் உருவாக்கி, நாட்டின் தேசிய உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்கின்ற வகையில் வடக்கின் உபாய ரீதியான உப்பளங்களை அபிவிருத்தி செய்ய நல்லாட்சி அரசு முன்வர அழுத்தம் கொடுக்கவேண்டியமை மக்களை நேசிக்கும் தலைவர்களின் தார்மீகக்கடமையாகும்.

வடக்கின் உப்பளங்களைத் தனியார் மயப்படுத்த அரசு எடுக்கும் நடவடிக்கை வரலாற்றுத் தவறாகும். அதனை நிறுத்துவதற்கு வடக்கின் வாக்காளர்களாக இருந்து தங்களுக்கு ஒத்துழைப்பு நல்கிய மக்களின் நலன் கருதி கட்சி வேறுபாடின்றி அழுத்தம் கொடுக்க வேண்டும் என மக்கள் பிரதிநிதிகளாகிய தங்களைத் தாழ்மையுடன் நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

"எதிர்பாக்கப்படும் புதிய அரசமைப்புக்கு ஏற்றவாறு வடபகுதி தமிழ் பேசும் மக்களுக்கு நல்லாட்சி அரசால் சுயாட்சி வழங்கப்படும் போது வடபகுதி உபாயரீதியான உப்பளங்கள் எமக்கு நிலையான வருமானம் தரும் சொத்தாகும்".– என்றுள்ளது. (ஐ–112)

## யாழ். சுற்றுலா மையங்களை அபிவிருத்தி செய்யத் திட்டம்

வலிமேற்கு,நவ.21

யாழ் மாவட்டத்தில் உள்ள சுற்றுலா மையங்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. ஏற்கனவே உள்ள சுற்றுலா மையங்களை மேலும் அபிவிருத்தி செய்வதுடன் புதிய சுற்றுலா மையங்களை அடையாளம் கண்டு அவற்றையும் அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதற்கான நடவடிக்கைகளை சுற்றுலாத்துறை அமைச்சும் யாழ்.செயலகமும் இணைந்து ஆரம்பித்துள்ளன.

யாழ். குடா நாட்டுக்கு அண்மைக் காலமாகச் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வரும் நிலையில் இந்தப் புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளன.

குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் வேலணை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலேயே இந்த செயற்றிட்டம் முதற்கட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஐ–53)

## சாயி பாபாவின் அவதார தினம்


யாழ்ப்பாணம்,நவ.21

யாழ்.திருநெல்வேலி இராமநாதன் வீதியிலுள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் புதன் கிழமை பாபாவின் 91 ஆவது அவதார தின விழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வுகள் மாலை 5.45 மணிக்கு மங்களாராத்தியுடன் நிறைவு பெறும்.

பிரசாந்திக் கொடியேற்றம் வேதபாராயணத்துடன் ஆரம்பமாகி நாம ஜெபம், பரத நமஸ்காரம், நாம சங்கீர்த்தனம் போன்றவற்றைத் தொடர்ந்து 'இசை அர்ப்பணம்' நடைபெறும். அதை அடுத்து யாழ். வைத்தியசாலை கண்வைத்திய சிகிச்சை நிபுணர் மு.மலரவன் 'சத்திய சாயி நிறுவனமும் சேவைகளும்' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

மாலை நிகழ்வாக 2 மணிக்கு சாயி இசைக் கலைஞர்களின் 'வாத்திய இசைச் சங்கமம்' நிலைய இளைஞர்களின் 'தெய்வத்தில் அன்பு' என்ற நாடகம் இடம்பெறும். தொடர்ந்து 'நவீன காலத்தில் சத்



திய சாயி காட்டும் ஆன்மீகம்' என்ற தலைப்பிலான சிறப்புரையை தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் மருத்துவ அதிகாரி அனுஸ்யந்தன் நிகழ்த்துவார். (இ






யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் முன்னரங்க உத்தி யோகத்தர்களில் ஒரு தொகுதியினருக்கு விசேட பயிற்சித் திட்டம் ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. தொடர்பாடல் திறன், சமூக வலுவூட்டல், நல்லாட்சி, சமூகத் திட்டமிடல் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தியின் அடிப்படைகள் போன்ற விடயப் பரப்புக்குள் இந்த விசேட பயிற்சித் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிற பத்து முழுநாள்களைக்கொண்ட இந்தப் பயிற்சித்திட்டத்தின் ஓர் அங்கமாக வெளிக்களப் பயிற்சியும் கடந்த வாரம் இடம் பெற்றது. இதன் போது பயிற்சியாளர்கள் பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (ஐ–53)

காலைக்கதிர் Kalaikkathir


# தங்கள் மீது வீசப்பட்ட குண்டுகளுக்கும் வரி செலுத்தினர் தமிழ் மக்கள்



*2017ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.*

யுத்தம் முடிவடைந்து ஏழரை வருடங்கள் நிறைவடைந்த பின்னரும் வழமைபோலவே பாதுகாப்புச் செலவினம் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் குறைக்கப்பட்டிருப்பதாகக் காட்டப்பட்டிருந்தாலும் ஜனாதிபதி, பிரதமருக்குரிய செலவீனங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்பது கசப்பானது.

நிதி நெருக்கடிக்குள் உள்ளாகியிருக்கும் நாடு சர்வதேசக் கடனை அடைப்பதற்கே தள்ளாடிக்கொண்டிருக்கின்றது. உள்நாட்டு உற்பத்தியில் 80 வீதம் வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டிக்குப் போக, 20வீதத்தில் இந்த நாட்டை இந்த அரசு எவ்வாறு அபிவிருத்தி செய்யப் போகின்றது? இதனால் மீண்டும் உலக வங்கியிடம் கடன், உலக வங்கியின் ஆலோசனைக்கேற்ப ஒரு வரவு–செலவுத் திட்டம், இதனோடு இலங்கை அரசு அபிவிருத்தி பற்றிப் பேசுகின்றது என்றால் அது மக்களுக்கு நம்பிக்கையளிக்கும் செயற்பாடல்ல.

நாட்டில் அபிவிருத்தி ஏற்படவேண்டுமாக இருந்தால் நாட்டிலுள்ள பிரச்சினைகள் சரியான முறையில் அணுகப்பட்டு தீர்வளிக்கும் வகையில் கையாளப்பட வேண்டும். யுத்தம் முடிந்து ஏழரை வருடங்களுக்குப் பின்னரும் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை என்பது தீர்க்கப்படாத பிரச்சினையாகவே இருக்கின்றது.

பல இனங்கள், பல மொழிகள், பல மதங்கள் இருக்கக்கூடிய பன்மை சமுதாயம் உள்ள ஒரு நாட்டில் – குறிப்பாக ஆயிரக்கணக்கான வருடங்களாகப் பல இனங்கள் ஒன்றாக இருக்கக்கூடிய ஒரு நாட்டில் – அவர்களுடைய வரலாற்றுத் தொன்மை, அந்த இனங்களின் பாதுகாப்பு, தனித்துவம், அவர்களின் இருப்பு இவற்றைப் பாதுகாக்கக்கூடிய வகையிலான ஓர் அரசியல் சாசனம் உருவாகுவதன் அடிப்படையில்தான் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் என்பது ஏற்பட முடியும்.

## நல்லிணக்கம் எப்படி வரும்?

ஆனால், நல்லாட்சியை நிலை நிறுத்துவதற்காக ஆட்சிப்பீடமேறிய தேசிய அரசு என்று சொல்லக்கூடிய ஆட்சியாளர்கள், இந்தநாட்டில்தமது உரிமைகளுக்காகப் பல வருடங்களாகப் போராடி பல லட்சம் உயிர்களை இழந்திருக்கும் ஒரு சமுதாயத்தை இன்றும் இராணுவ ஆக்கிரமிப்புக்குள் வைத்திருக்க வேண்டும் என்றே சிந்திக்கின்றார்கள்.

இன்றும் தமிழர்களின் இருப்புக்கு வேட்டு வைக்க முயல்கின்றார்கள். அவர்களது தனித்துவத்தை இல்லாதொழிக்க செயற்படுகின்றார்கள். இவ்வாறு ஆட்சியில் இருப்பவர்கள் தொடர்ச்சியாகச் செயற்படுவார்களானால் இந்த நாட்டில் உள்ள தேசிய இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் எவ்வாறு உருவாகும்? அது மாத்திரமல்லாமல், இவ்வாறான செயற்பாடுகள் தமிழ் மக்களின் பாரம்பரிய பூமியில் சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தை நிறுவுவதற்கான அடிப்படையை மையப்படுத்திய திட்டமிட்ட செயற்பாடுகளாகவே அமைகின்றன.

ஒரு பாரிய யுத்தம் நிகழ்ந்து, பல லட்சம் மக்களை இழந்து, பெரும் அழிவுகள் ஏற்பட்டு, பொருளாதாரத்தில் முடங்கிப் போயிருக்கக்கூடிய வடக்கு–கிழக்கு அபிவிருத்திக்கு உங்களிடம் சிறப்பான திட்டங்கள் ஏதாவது உள்ளனவா? இராணுவத்துக்கும் அரசின் அதியுச்ச பதவிகளில் இருப்பவர்களுக்கும் பல்லாயிரம் கோடி ரூபாய்களைத் தொடர்ந்தும் ஒதுக்கிவரும் அரசு, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு எத்தனை ஆயிரம் கோடியை அதிகரித்து வழங்கியுள்ளது? எத்தனை சதவீதத்தை அதிகரித்துள்ளது என்பதைக் கூறமுடியுமா? ஒருபோதும் நியாயமான பதிலை அளிக்க முடியாது. அத்தகைய நிலையில் வரவு – செலவுத் திட்டத்தைப் பார்க்கும்போது மக்கள் வரவு – செலவுத் திட்டம் என்று உதட்டளவில் அடிக் கடி கூறுவது வெட்கமாக இல்லையா?

மனிதாபிமான நடவடிக்கைகள் என்ற போர்வையில் முன்னெடுக்கப்பட்ட யுத்தம் காரணமாக 80ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் வடக்கு,கிழக்கில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. வாழ்வாதாரங்களைக் கட்டியெழுப்பக்கூடிய பல லட்சம் மக்களை வடக்கு, கிழக்கு இழந்திருக்கிறது. பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள் மற்றும் பெரியோர்கள் அங்கவீனமுற்றவர்களாக இருக்கின்றார்கள். இன்னும் பல ஆயிரக்கணக்கான குழந்தைகள் அநாதைகளாக நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

இவர்களுடைய வாழ்வாதாரம், பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் இவற்றுக்காக எந்தவிதமான பிரத்தியேகத் திட்டங்களை வகுத்துள்ளீர்கள்? இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு தமிழ் மக்களும் வரி செலுத்துகின்றார்கள் என்பதை மறந்து விடாதீர்கள். தங்களின் மீது வீசப்பட்ட ஒவ்வொரு குண்டுக்கும் கூட அவர்கள் வரிசெலுத்தியுள்ளார்கள் என்பதையும் மறந்துவிடாதீர்கள்.

அதுமட்டுமன்றி, எங்களைக் கொல்வதற்காக நீங்கள் வாங்கிய யுத்த விமானங்களுக்கும், யுத்த தாங்கிகளுக்கும், படகுகளுக்கும், கப்பல்களுக்கும் அரசு செலுத்த வேண்டிய கடனுக்குத் தமிழ் மக்களும் வரிசெலுத்திக் கொண்டிருக்கின்றார்கள். நீங்கள் விதித்துள்ள தற்போதைய அதிகரித்த வற்வரியையும் கூட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களும் கட்டிக்கொண்டுதான் இருக்கின்றார்கள்.

உலகமெல்லாம் சென்று நல்லாட்சியைப் பற்றிப் பேசிவரும் அரசு, இந்த நிலைமையைப் பற்றி எப்பொழுதாவது சிந்தித்ததுண்டா? குறைந்த பட்சம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிக அளவு நிதியை ஒதுக்கி அவற்றினூடாக, பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்கான புனர்வாழ்வு முயற்சிகளைக் கூட அரசு எடுக்கத் தயங்குவது ஏன்?

நுண்நிதிக் கடன் என்ற பொறி உருவாக்கப்பட்டுள்ளது. அதிக வட்டிவீதத்துக்குக் கடன் கொடுக்கும் இத்தகைய நிதி நிறுவனங்களுக்குத் தாம் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களையே இலக்கு வைக்கின்றோம் என்பது தெரியாதா? வன்னி மண்ணில் ஏராளமான தனியார் மற்றும் அரச வங்கிகள் இருக்கையில் இத்தகைய நிதி நிறுவனங்கள் எதற்கு? அவர்களது வாழ்வாதாரத்துக்காகக் கடன்கொடுப்பதாக இருந்தால் வட்டிவீதம் குறைவாக அல்லவா இருக்க வேண்டும்? இவர்களின் சுரண்டலுக்கு எமது ஏழை மக்களா கிடைத்தார்கள்? இத்தகைய அனைத்து நிதிநிறுவனங்களும் வன்னி மண்ணிலிருந்தும் வடக்கு, கிழக்கு மாகாணத்திலிருந்தும் அப்புறப்படுத்தப்பட வேண்டும். வாழ்வாதாரத்துக்கான உதவிகளை வங்கிகளினூடாகவே மேற்கொள்ள வேண்டும்.

## கொள்ளை அடிக்கும் நிதி நிறுவனங்கள்

எக்காரணம் கொண்டும் அதிக வட்டி வீதத்தில் கடன்களை வழங்கிக் கொள்ளை இலாபம் ஈட்டும் நிதி நிறுவனங்கள் வன்னி மண்ணில் செயற்பட அனுமதிக்கக் கூடாது. இந்த நிலை தொடர்ந்தால் மக்களை அணி திரட்டி வீதிகளில் இறங்கி போராட வேண்டிய சூழல் தவிர்க்க முடியாததாகிவிடும்.

வடக்கில் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது பலருக்கு உடலின் பல பாகங்களில் செல் துகள்கள் மற்றும் துப்பாக்கிரவைகள்போன்ற இன்னோரன்ன உலோகத் துண்டுகள் இன்னமும் அகற்றப்படாமல்கூட உள்ளன. இந்த அவையில் அது குறித்து 2010ஆம் ஆண்டு முதல் தொடர்ந்தும் தெரிவித்து வருகின்ற போதிலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் இந்த ஆட்சியிலும் மேற்கொள்ளவில்லை என்பதை இந்தச் சபையின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு, சக்திக்கு மீறிய கவர்ச்சிகரத் திட்டங்கள் ஒருபோதும் பயனளிக்கா. அந்நிய முதலீட்டைக் கவர்தலை நோக்கமாகக் கொண்டு இந்த வரவு–செலவுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தொலைபேசிக் கட்டணங்களும், இணையத்தள பாவனைக்கான கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளன. வளியில் மிதக்கும் மின்காந்த அலைகளை ஒருமுறை முதலீட்டின்மூலம் ஒலி அலைகளாக மாற்றும் தொழில் நுட்பத்தை நிறுவி, அதைக் கொண்டு இலாபம் ஈட்டும் முயற்சியில் அரசு சார்ந்த தொலைபேசி நிறுவனமும் தனியார் நிறுவனமும் கொள்ளை இலாபம் ஈட்டுவது எத்தகைய அபிவிருத்தியாகும்? இது எவ்வாறு அந்நிய முதலீட்டாளர்களைக் கவரும்?

அதே நேரம், கல்விப் பொதுத் தராதர உயர்தர மாணவர்கள் அனைவருக்கும் 'லப்' வழங்குவதாக அரசு அறிவித்துள்ளது. நவீன கற்கை நெறிகளையும் அரசு அறிவித்துள்ளது. கற்கைகளில் நவீனத்துவத்தை நாம் வரவேற்கின்றோம். ஆனால், தொலைபேசி, இணையத்தளக் கட்டணங்களை அதிகரித்து விட்டு இலவசமாக 'லப்'களை வழங்குவதால் இலாபமடையப் போவது யார்? என்பதை மக்கள் உணராமலிருப்பார்கள் என்று கருதாதீர்கள். நாளுக்கு நாள் இவற்றின் தாக்கம் சாதாரண குடும்பங்களில் வெளிப்பட ஆரம்பிக்கும்.

## மாணவர்களுக்கு 'லப்' கிடைத்தால் போதுமா?

மறுபக்கத்தில் வன்னி மண்ணில் இன்றும் கூட ஓலைக்குடிசையில் மெழுகுவர்த்தியிலும், மண்ணெண்ணெய் விளக்கிலும் உயர்கல்வியைத் தொடரும் மாணவர்கள் இருக்கின்றார்கள். பாடசாலைக்குச் செல்வதற்கு உரிய வசதிகளின்றி வாடிக்கொண்டிருக்கின்றார்கள். இவர்களுக்கு 'லப்'களை வழங்கக் கூடாது என நாம் கூறவில்லை. ஆனால் இவர்களின் அடிப்படைத் தேவைகளை முதலில் வழங்கிவிடுங்கள் என்று தான் மீண்டும் மீண்டும் சபையின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றுகின்றவர்களில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற பிள்ளைகள் எத்தனைபேர்? புலமைப்பரில் பரீட்சையின் வெட்டுப்புள்ளிகளை அதிகரிப்பதன் மூலம் அவர்களது கல்வி கற்கும் உரிமை மறுக்கப்படுகிறது என்பதை இந்த அரசு தற்போதாவது உணர்ந்துள்ளதா?

வெட்டுப்புள்ளிகளை அதிகரிப்பது பிரசித்தி பெற்ற பாடசாலைகளுக்கான அனுமதிக்காக என்று அந்தப் பரீட்சைக்குப் பெயரிடப்பட்டிருப்பதிலிருந்தே அரசின் மோசடியைப் புரிந்து கொள்ள முடியும். புலமைப்பரிசிலுக்குத் தகுதியுடையவர்கள் மட்டுமே இந்தச் சோதனையை எழுத வேண்டும் என்றும் இந்தச் சோதனையை மாணவர்களின் பாடப் புத்தகத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டும் நடத்துவதற்கு இந்த அரசு எதிர்காலத்தில் முன்வருமா?

தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்துச் செயற்படக்கூடிய வகையில் இந்தத் தேசிய அரசு செயற்படுகிறதா என்பதை ஒரு தடவையேனும் சுயபரிசோதனை செய்ய வேண்டும். இராணுவ ஆக்கிரமிப்பும் புலனாய்வுத்துறை, பொலிஸ் அச்சுறுத்தல்களுக்கு ஊடாகவும் மக்களைக் கட்டிப்போட முடியாது என்பதைத் தயவு செய்து புரிந்துகொள்ளுங்கள். 30 வருட யுத்தத்துக்கான முகாந்தரத்தை உருவாக்கியவர்கள் நீங்கள்.

அதை நீங்கள் பலமுறை ஒப்புக் கொண்டும் இருக்கின்றீர்கள். மக்களை அச்சத்துடன் கூடிய நெருக்கடிக்குள்ளாக்கும் உங்களது தொடர் நடவடிக்கைகள் என்பது மீண்டும் ஒரு யுத்த சூழலுக்குள் தமிழ் மக்களைத் தள்ளுகிறீர்களா? என்ற சந்தேகத்தை எங்களுக்கு ஏற்படுத்துகின்றது. தயவு செய்து உங்களது வரட்டுத்தனமான சிந்தனைகளை மாற்றுங்கள். இது பல இனங்கள் வாழும் ஒரு நாடு என்பதை ஏற்றுக் கொண்டு, அவர்களை சமத்துவமாக நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுங்கள்.

தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழக்கூடிய வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, அதற்கான அரசியல் நிர்வாக அதிகாரங்கள் வழங்கப்பட்டு, ஒருமித்த நாட்டுக்குள் அதனைச் சுயாதீனமாக இயங்க வழி திறக்கப்படுமாக இருந்தால் இந்த நாட்டின் அபிவிருத்திக்கு மிகப்பெரிய அளவில் அந்நிய முதலீடுகளைக் கொண்டு வருவது மட்டுமன்றி, தமிழ் மக்கள் பங்களிப்பையும் செய்ய முடியும். வடக்கு, கிழக்கு வாழ் மக்களுக்கு மட்டுமன்றி, தென்பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கும் கூட வேலை வாய்ப்பை வழங்க முடியும். இவற்றையெல்லாம் இப்போதாவது கருத்தில் கொள்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் தான் இந்த உயரிய சபையில் நான் முன்வைக்கின்றேன்.

தற்போது நாடாளுமன்றம் அரசமைப்புச் சபையாக மாற்றப்பட்டுள்ளது. புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன எனக் கூறப்படுகின்றது. இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் புதிய அரசமைப்பின் ஊடாக வழங்கப்படும் எனவும் உங்களால் எங்களுடைய தலைமைக்கு உறுதி அளிக்கப் பட்டிருக்கின்றது.

## அரசின் உறுதிமொழி

ஆனால், தற்போது வரையில் இந்த சபையில் ஆளும் தரப்பாக இருக்கும் இரண்டு பிரதான கட்சிகளைச் சேர்ந்த எந்தவொரு முக்கியஸ்தர்களும் புதிய அரசமைப்பொன்று உருவாக்கப்படுவதாக வெளிப்படையாகக் கூறவில்லை.

புதிய அரசமைப்பு உருவாக்கமா அல்லது தற்போதைய அரசமைப்பில் சீர்திருத்தமா என்பது கூடத் தெளிவற்ற நிலையில்தான் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் நாமே இருக்கின்றோம். 2016இற்குள் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை எமது தலைமையால் எமக்கும் எமக்கு ஆணையளித்த மக்களுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றது.

அந்த நம்பிக்கையின் பெயரில் தான் நாம் இதுவரையில் பொறுமையாக அமைதியாக இருக்கின்றோம். ஆனால் தற்போது தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கான திட்டம் டிசெம்பர் மாதம் வெளியிடப்படும் வழிநடத்தும் குழுவின் இடைக்கால அறிக்கையில் வெளியாகும் என்று கூறப்படுகின்றது. கடந்த ஆட்சியாளர்கள் எம்மையும் எமது மக்களையும் தொடர்ச்சியாக ஏமாற்றி வந்ததன் விளைவாலேயே அரியாசனத்தை விட்டு அசைக்க முடியாத நிலையில் இருந்தவர்கள் ஒரே இரவில் அனைத்தையும் இழந்து நின்றார்கள்.

ஆகவே, மக்கள் சக்திக்கு முன்னால் அனைத்துமே காணமற்போய்விடும் என்பதற்கு எம் கண்முன்னேயே தக்க உதாரணம் இருக்கின்றது. எனவே, எமது மக்களை ஏமாற்ற நினைப்பீர்களானால் மக்கள் வீதியில் இறங்குவதற்கு எள்ளளவேனும் தயங்கமாட்டார்கள்.

கடந்த ஆட்சியாளர்களை காரணம் காட்டிநழுவல்போக்குநீடிக்குமாகவிருந்தால் இந்த நாட்டை சுபீட்சமாகக் கட்டியெழுப்பும் இலக்கு சூன்யமாகிப்போய்விடும் என்பதே யதார்த்தம்.

# ஐ.நாவும் உலக நாடுகளும் தமிழர் படுகொலையை வேடிக்கை பார்த்தன!



நவநீதம்பிள்ளை

தமிழினத்துக்கும் மனித குலத்துக்கும் ஆற்றிய தொண்டைப் பாராட்டி, இலங்கைத் தமிழ்ச் சங்கம் தன்னுடைய வரலாற்றில் முதல் முறையாக 'வாழ்நாள் தொண்டு விருது' என்ற மிக உயரிய விருதை நீதியரசர் நவநீதம்பிள்ளைக்கு வழங்கிக் கௌரவித்தது.

சங்கத்தின் 39 ஆவது ஆண்டு விழா கடந்த 5 ஆம்திகதி சனிக்கிழமை நியூஜெர்சி மாநிலத்தின் 'மோன்றோ' நகரில் நடைபெற்றது.

இவ்விழாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் முன்னாள் ஆணையர் நீதியரசர் நவநீதம்பிள்ளை பங்கேற்று, சிறப்புரையாற்றினார். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகிறது.

நான் சிறுமியாக இருந்தபோது தமிழ் பாடசாலைக்குச் சென்றுள்ளேன். வீட்டில் தமிழ் மொழியில்தான் பேசுவோம். நான் தமிழாசிரியராகவும் பணியாற்றியுள்ளேன். என்னுடைய பெற்றோர்கள் தமிழர் பண்பாடு, மதிப்பீடுகளை அறிவுறுத்தி வளர்த்தார்கள்.

இலங்கைத் தமிழர்களுக்குப் புலம் பெயர்ந்த தமிழர்கள் அளிக்கும் மன ஒத்துழைப்பு, பொருளாதார உதவிகள் பாராட்டப்பட வேண்டியவை. அப்படியான உதவிகளை நான் இலங்கைக்கு நேரில் சென்றபோது கண்டேன். அது அவர்களுக்கு மிகுந்த ஊக்கமளிக்கின்றது. தமிழர் வாழ்வியலில் அடுத்தவர்களுக்கு உதவும் கொடைப்பண்பு மிகவும் சிறந்தது.

என்னுடைய தாய், தந்தைவழித் தாத்தாக்கள் தமிழ்நாட்டில் இருந்து தென்னாபிரிக்காவுக்குக் கரும்புத் தொழிற்சாலையில் பணிபுரியக் கொண்டுவரப்பட்டவர்கள். தந்தை ஐந்தாம் வகுப்புவரை மட்டுமே படித்தவர். என் தாய் படிக்காதவர். ஆனால் நானும் என்னுடைய சகோதரர்களுமாக நான்கு பெண்களில் இருவர் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்கள், இருவர் நீதியரசர்கள்.

காந்தியடிகளின் போராட்டம் அடிமைத்தனத்தைப் போக்கியது. அதன்பின்னர், தாம் கல்விக் கற்கவில்லை என்றாலும், அடுத்தத் தலைமுறை கல்விகற்க வேண்டும் என்று கல்வி நிலையங்களைத் தமிழர்கள் தொடங்கினார்கள்.

தமிழ் மக்கள் பலர் நான் கல்லூரிக்குச் செல்லப் பொருளாதார உதவிகளை வழங்கினார்கள். அவர்களுக்கு அண்மையில் கூட ஒரு கூட்டத்தில் நன்றி கூறினேன். அப்படியான உதவிகளால்தான் நான் பல தொண்டுகள் செய்ய முடிந்தது.

நான்தான் முதல் வெள்ளையரல்லாத பெண் நீதியரசராகத் தென்னாபிரிக்காவில் பணியாற்றினேன். அப்பணியாணையை அப்போதைய அதிபர் நெல்சன் மண்டேலா வழங்கி இருந்தார். அது மறக்கவியலாத பசுமையான நினைவாக உள்ளது. நம்முடைய பண்பாட்டுக் கூறுகளையும், அறநெறிகளையும் மதிப்பீடுகளையும், அடையாளங்களையும் பாதுகாப்பது மிகவும் முதன்மையானது.

திடீரென நிகழும் இனக்கலவரங்களால் ஏற்படும் பாதிப்புகளை நான் நேரில் கண்டுள்ளேன். இப்படியான சூழல்களில் நடப்பில் உள்ள சட்டங்களில் இருந்து குற்றம் புரிபவர்கள் எளிதில் தப்பிவிடுவதையும் கண்டேன். செர்பிய பெண் மருத்துவர் தன்னுடன் பணியாற்றுவோரால் இப்படியான ஒரு தாக்குதலுக்கு ஆளானார். இப்படியான குற்ற நடவடிக்கைகளில் மனிதர்கள் ஏன் திடீரென ஈடுபடுகின்றனர், அவற்றை எப்படித் தடுப்பது என்று ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினேன்.

நான் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவராக இருந்தபோது எனது கவனத்தை இலங்கையின் மீது செலுத்தியதற்குக் காரணம், நமது கண்முன்னே மக்கள் கொல்லப்பட்டனர். பொதுமக்கள் போரில் கொல்லப்பட்டதை உலகநாடுகள் அனைத்தும் வேடிக்கைப் பார்த்தன. எந்த உதவியும் செய்யவில்லை. ஐ.நாவும் வேடிக்கைப் பார்த்தது.

போருக்குப் பின்னர் இலங்கைக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாதவாறு, பல தரவுகளைப் போர் நடந்த காலக்கட்டத்தில் இலங்கை அரசு முன்வைத்தது. இது உள்நாட்டுப்போர் என்றும், ஐ.நாவோ மற்ற நாடுகளோ தலை யிடுவது இறையாண்மைக்கு எதிரானது என்றும் கூறப்பட்டது. ஐ.நா. பொதுக்குழுவும், ஐ.நா. பாதுகாப்பு அவையும் இதில் தலையிடாதவாறு பார்த்துக்கொண்டது. இதை அவர்கள்தான் தடுத்திருக்க முடியும்.

இலங்கையில் வாழும் ஊடகவியலாளர்களும், லண்டனில் உள்ள எம்முடைய அலுவலகத்தைச் சார்ந்தவர்களும் இணைந்து பணியாற்றிப் பல தரவுகளைப் பெற்றனர். அதேநேரம் இலங்கை அரசு அங்குள்ள தொண்டு நிறுவனங்களுக்கு எதிரான நடவடிக்கையில் இறங்கியது. ஜெனீவாவில் உள்ள இலங்கைத் தூதர் அங்குள்ள மனித உரிமை ஆர்வலர்களின் புகைப்படங்களை எடுத்து, மறைமுகமாக அச்சுறுத்தினார்.

இச்சிக்கலை ஜெனீவாவுக்குக் கொண்டு வந்ததில் பொதுமக்களின் பங்கு பெருமளவில் உள்ளது. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தாம் வாழும் நாட்டில் உள்ள அரசுகளைப் போர்க்குற்றங்களுக்கு எதிராகக் குரல்கொடுக்கத் தொடர்ந்து வலியுறுத்தி வெற்றியும் கண்டார்கள். இது மிகவும் பாராட்டப்பட வேண்டிய நடவடிக்கை. ஆனால் என்னுடைய தென்னாபிரிக்க அரசு இதனை இலங்கையின் உள்நாட்டுச் சிக்கலாகக் கருதிச் செயற்பட்டது மிகவும் கவலைக்குரியது.

ஐ.நா. பொதுச் செயலாளர் இலங்கையில் நடந்ததை ஆய்வுசெய்ய ஒரு குழுவை அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தினோம். ஆனால் அவருக்கு அந்த அதிகாரம் இல்லை என்று இலங்கை வாதிட்டு, அவருக்கு எதிராக உரக்கக் கத்திக் கடுமையாக நடந்துகொண்டது.

ஆனால், அப்படியான குழுவை அமைக்க ஐ.நா பொதுச் செயலாளருக்கு அனைத்துச் சட்ட உரிமையும் உள்ளது, ஏற்கனவே இப்படியான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை எடுத்துரைத்தோம். எந்த நாட்டின் துணையும் இல்லாமல், பொதுச்செயலாளரால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுதான் இலங்கையில் நடந்த போர்க் குற்றங்களை ஆய்வு செய்தது.

இலங்கைக்குள் நுழைய அந்த நாட்டு அரசு அவர்களுக்குத் தடைவிதித்தது. ஆனாலும் அரசுசாரா அமைப்புகளும், ஊடகவியலாளர்களும், செயற்பாட்டாளர்களும் சரியான தரவுகளுடன் உண்மைகளை வெளிக்கொணர்ந்தனர். மக்கள் பலர் முன்வந்து தகவல்களைத் தராமல் போயிருந்தால் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்க முடியாமல் போயிருக்கும். இலங்கை அரசு மாபெரும் குற்றங்கள் இழைத்திருப்பதை அக்குழு கண்டறிந்தது. போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் புரிந்துள்ளது என்று கூறியது.

இலங்கைப் போரின்போது தமது கடமைகளை ஐ.நா. சரிவரச் செய்ததா என ஆய்வு செய்வதற்கு மேலும் ஒரு குழு அமைக்கப்பட்டது. ஐ.நா. மக்களைப் பாதுகாக்கத் தவறியது, அங்கேயே தங்கியிருந்து தமது கடமைகளைச் செய்திருக்க வேண்டும் என்று அந்த அறிக்கை கூறியது.

அந்த அறிக்கை வெளியான பின்பு ஐ.நா. அவையின் மேல்மட்டத்தில் பல விவாதங்கள் நடந்தன. இப்படியான சூழலில் மக்களுக்குத் தஞ்சம் அளித்துப் பாதுகாக்க வேண்டுமே ஒழிய ஐ.நா. வெளியேறக் கூடாது என்ற கொள்கை முடிவு எடுக்கப்பட்டது. இப்படியான குழுக்களை அமைத்து உண்மைகளை ஆராய வேண்டி, போர் நடந்து முடிந்து ஆறு ஆண்டுகள் இலங்கைத் தமிழர்கள் குருதிக் கறையுடன் காத்திருக்க வேண்டியிருந்தது. பின்னர் தெற்கு சூடானில் இப்படியான உள்நாட்டுப் போரின் போது, ஐ.நா. அலுவலகத்தில் தொண்ணூறாயிரம் மக்கள் தஞ்சம் புகுந்தனர். அவர்களின் உயிர்கள் பாதுகாக்கப்பட்டன. இல்லையெனில் மாபெரும் இனஅழிப்பு நடந்திருக்கும் இலங்கைத்தமிழர்களின் குருதி, பன்னாட்டரங்கில் பல உயிர்களைக் காக்க உதவியது.

# 2017 வரவு, செலவிலும் பற்றாக்குறையே ...



அங்கஜன் ராமநாதன் ஆற்றிய உரையின் ஒரு பகுதி

நாட்டின் வரவு - செலவுத் திட்டம் வெறுமனே எண்ணிக்கையல்ல. எமது விழுமியங்கள் மற்றும் எதிர் பார்ப்புக்களை வெளிப்படுத்தி எமது நோக்கைச் செயற்படுத்தும் விடயமாகும்.

எமது தலைமைத்துவத்தின் தூர நோக்கு ஆசிய பிராந்தியத்தில் பலமான உயர் வருமானத்தை, பொருளாதாரத்தை கொண்ட நாடு என்பதை பிரதிபலிக்கின்றது.

அத்துடன் பத்து லட்சம் வேலைவாய்ப்பு வருமான மட்டம் அதிகரித்தல் மற்றும் கிராமியப் பொருளாதார அபிவிருத்தி மற்றும் காணி உரிமையை உறுதிப்படுத்தல் என்பவற்றை குறித்து நிற்கின்றது.

கடந்த காலத்தில் இருந்து மீண்டும் புத்தாக்க அடிப்படையிலான பொருளாதாரத்தைப் பெறும் எமது நோக்கத்தை அடைவதே எமது அணுகு முறையாகும். 2016 ஆம் ஆண்டு வரவு, செலவுத் திட்டத்தில் காணப்பட்ட 5.4 சதவீதத்திலும் பார்க்க 4.6 சதவீதம் பற்றாக்குறையையே 2017ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் காணமுடிகின்றது. வரவு, செலவுத் திட்டத்தில் குறைந்து காணப்படும் பற்றாக்குறை, அதிகரித்து வரும் தேசிய கடன் தொகையை தாமதப்படுத்தி கடன் தொகை மற்றும் வட்டியை செலுத்தும் தேசிய வருமானத்தில் தாக்கம் செலுத்துகிறது.

சவால்களுடனான பொருளாதாரம், வேலை வாய்ப் பின்மை மற்றும் மீண்டும் இலங்கையில் பொருளாதார கட்டமைப்பை இயக்குதல் என்பவற்றை மேம்படுத்தும் பொறுப்பை நோக்கமாகக் கொண்டு இலங்கை மக்கள் இந்த அரசைத் தெரிவு செய்திருக்கின்றனர்.

புதிய சிறந்த எதிர்காலத்தை நோக்கி செயற்படுவதற்கான மாற்றுத்திறனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான அரசு ஏற்படுத்தி வருகின்றது. சர்வதேச மட்டத்தில் எமக்கு அளப்பரிய கீர்த்தியை பெற்றுள்ளதோடு எமது ஜனாதிபதி சிதறிக்கிடந்த எமது சர்வதேச உறவை மீளமைத்துள்ளார். ஆனால், இது முழுமையடையாவிடினும் செயற்பாடுகள் திருப்தியாகவே காணப்படுகின்றன.

பல தசாப்தங்களாக முரண்பட்டிருந்த இருபெரும் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணைந்து தேசிய அரசை அமைத்தது மட்டுமல்லாமல், தமது சிறந்த எண்ணக் கருத்துக்கள் கொண்ட தேசிய வரவு, செலவுத் திட்டத்தையும் முன்மொழிந்துள்ளன. இலங்கையர்களாகிய எங்களுக்கு இது ஒரு புதிய அனுபவமாகும்.

இந்த வரவு, செலவுத் திட்டம் பல பிரச்சினைகள் அதாவது விவசாயம், கைத்தொழில், உல்லாசத்துறை, வர்த்தகத் துறை, முதலீடு, கல்வி, உட்கட்டமைப்பு, அபிவிருத்தி மற்றும் புத்தாக்கச் செயற்பாடுகளைப் பிரதிபலிக்கின்றது. இந்த வகையில் பொருளாதாரம் ஒரு பலமான நீடிக்கத்தக்க வகையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

கல்வி சுகாதாரத்தில் ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டுள்ளமை பற்றிய உரையாடல்கள் இடம்பெறுகின்ற போதிலும் முதலீடு மற்றும் செலவீட்டு செலவீனங்களுக்கு இடையேயான நுட்பமே முக்கியம். முதலீட்டு செலவீனங்களின் அதிகரிப்பு சதவீத்தை செலவீட்டு செலவீன குறையுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இது நீடித்து நிலைக்கும் பொருளாதாரத்தை வளர்க்கின்றது.


நாட்டில் வடக்கிலும் ஏனைய கிராமப் புறங்களிலும் நாங்கள் முகம் கொடுக்கும் பெரிய பிரச்சினைகளுக்கு இந்த வரவு, செலவுத் திட்டம் தீர்வைக் கொடுக்கின்றது. விஞ்ஞானம், கணிதம், ஆங்கில ஆசிரியர் பற்றாக் குறைகளால் உயர் தரத்தில் இத்தகைய பாடங்களில் சித்தி பெறாமையால் தொழில் வாய்ப்புகள் பெற முடியாது இளைஞர்கள் உள்ளனர். இது வடக்கை மிகவும் பாதித்துள்ளது. எமது குழந்தைகளின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கு 4.5 மில்லியன் மாணவர்களுக்குக் காப்புறுதித் திட்டம் வழங்கவிருப்பது சிறந்த ஒரு முன்மொழிவாகும்.

3ஆயிரத்து 500 பாடசாலைகளுக்கு கணினிகளை வழங்கித் தொழில்நுட்ப வசதிகளைப் பலப்படுத்துவற்கான முன்மொழிவுக்காக நான் நிதி அமைச்சரை பாராட்ட விரும்புகின்றேன். தொழில் நுட்பம் எவ்வளவு தூரம் எமக்கும் எமது நாட்டுக்கும் உதவுகின்றது என்பதை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகின்றேன். இந்த முன்மொழிவில் ஒரு லட்சத்து 75 ஆயிரம் உயர்தர மாணவர்களும் 28 ஆயிரம் உயர்தரத்துக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் நன்மை அடைவார்கள்.

இளைஞர்களின் எதிர்காலத்துக்கு அளப்பரிய நன்மை பயக்கக் கூடிய தந்திரோபாயத்தை இந்த வரவு செலவுத் திட்டம் கொண்டுள்ளது.

இளம் சந்ததியினரை வலுப்படுத்தி ஆற்றலைக் கட்டியெழுப்பி புதிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி மேம்படுத்தலாம். எதிர்கால நன்மைகளைக் கருத்தில் கொண்டு நாட்டையும் எமது மக்களையும் உட்கட்டமைப்பு கல்வி கொள்கைகள் மற்றும் கட்டமைப் புக்களையும் தயார் செய்ய வேண்டும். *


# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?" 09



பொன்.வேணு கிருஷ்ணா

## ரஷ்யாவுடன் தேன் நிலவு சாத்தியமா?

தொடக்கத்திலிருந்தே ரஷ்யாவுடன் மோதல் போக்கை விடுவது குறித்துப் பேசி வந்த ட்ரம்ப், சிரிய போர் அமெரிக்காவின் மிகப் பெரிய தவறு என விமர்சித்து வந்தார். தற்போது ட்ரம்ப் வெற்றி பெற்றுள்ள நிலையில், அமெரிக்காவின் மத்திய கிழக்குக் கொள்கை யிலோ, ரஷ்யாவுக்கு எதிரான போக்கிலோ ஏதாவது மாற்றம் ஏற்படுவதற்கான அடிப்படை உள்ளதா? இல்லை. ஏனெனில் அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை என்பது அதன் ஏகாதிபத்திய பொருளாதார நலன்களை அடிப்படையாக கொண்டது. ஒரு நாட்டுடன் போர் வேண்டுமா வேண்டாமா என்பதை முதலாளிகளின் பிரதிநிதிகளால் கட்டுப் படுத்தப்படும் அமெரிக்க ஆளும் வர்க்கமே





தீர்மானிக்கிறது - அதை அறிவிக்கும் உரிமை மட்டுமே அதிபருக்கு உண்டு.

எனினும், ட்ரம்ப் தனது பிரசாரங்க ளில் போர்களுக்கு எதிராகவும், அமெரிக்க பொருளாதார நலன்களுக்கு எதிராகவும் (ரஷ்யாவுடன் இணக்கமாகச் செல்வது) எப்படிப் பேசினார்? இது அமெரிக்க ஆளும் வர்க்கம் மற்றும் அதன் நலன்களைப் பிரதிபலிக்கும் அமெரிக்க அரசு கட்ட மைப்புக்கும் எதிரானதாயிற்றே? அவர் ஏன் சொந்தச் செலவில் சூனியம் வைத்துக் கொள்ள வேண்டும்? இங்கேதான் டிரம் பின் தனிப்பட்ட பண்புகள் முன்னுக்கு வருகின்றன.

டொனால்ட் ட்ரம்ப், ஹிலாரி கிளிண்ட னைப்போல் 'அனுபவம்' வாய்ந்த அரசி யல்வாதி அல்லர். பிறக்கும் போதே வாயில்வெள்ளிக் கரண்டியோடு பிறந் தவர். அவரது வாயிலிருந்து கரண்டியை உருவும் போது என்னவெல்லாம் வழி கிறதோ அதெல்லாம் கட்டளைகள். அந்தக் கட்டளைகளை நிறைவேற்றும் கடமை அந்தக் கட்டளைகளுக்கு உட்பட்ட அனை வருக்கும் உண்டு என நம்புகிறவர்.

### மலைப் பாம்புகளின் கால்களை மலைப்பாம்பே அறியும்

தானே ஒரு பெருமுதலாளி என்பதால், அந்த உலகத்தின் இருண்ட பக்கங்கள் ட்ரம்புக்கு தெள்ளத் தெளிவாகத் தெரியும். அரசின் திரைமறைவு இயக்கம், அது எந்தளவுக்கு முதலாளி களின் நலனோடு பிணைக்கப்பட்டுள்ளது, அரசுக்கு முதலாளிகள் அளிக்கும் உத்தரவுகள் கொள்கை முடிவுகளாக எவ்வாறு அமுல்படுத்தப்படுகின்றன, இதில் மக்களுக்கு சொல்லப்படுபவை எவை - சொல்லப்படாத உண்மைகள் எவை, போர்கள் ஏன் நடக்கின்றன - அதன் பின் உள்ள சொல்லப்படாத காரணங்கள், மக்கள் நலன் என்பதாக முன்வைக் கப்படும் திட்டங்களின் உண்மை நோக்கம் என்ன - என்பதெல்லாம் மக்களை விட மிகத் தெளிவாக அதே உலகத்தில் இயங்கும் ட்ரம்புக்குத் தெரியும்.

ஹிலாரி ஓர் அனுபவம் வாய்ந்த அரசியல்வாதி (Seasoned Politician) என்பதால் எதைக் குறித்தும் வாக்குறுதி அளிப்பதற்கு முன் அதன் சாதக பாதகங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பேசவேண்டியிருந்தது. ஆனால், ட்ரம்ப் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப் படும் சாத்தியப்பாடுகள் குறித்து அவருக்கு எந்த அக்கறையும் இல்லை. வேலையிழப்புக்கு என்ன காரணம்? வந்தேறிகள். அதற்கு என்ன செய்யலாம்? அவர்களை விரட்டியடித்து விடலாம். இதைத்தான் படிப்பறிவும், உலக ஞானமும் இல்லாத வெள்ளையின தொழிலாளர் வர்க்கம் விரும்பியது. ஹிலாரி கிளிண்டன் மற்றும் அவரது பிரசாரக் குழுவினர் மினக் கெட்டு கட்டமைத்த ரஷிய பூதம், இஸ்லா மிய வேதாளம். மூன்றாம் உலக காட்டு மிராண் டிகள் போன்றவற்றை வெறும் வெற்றுச் சவடால்களின் மூலமாகவே ஊதித் தள்ளி விட்டார் ட்ரம்ப்.

கடந்த ஓராண்டாகக் குடியரசுக் கட்சியின் தேர்தல் பிரசாரங்களைத் தொடர்ந்து வரும் ஆவணப்பட இயக்குநர் மைக்கேல் மூர், ட்ரம்ப் வெல்லப் போகிறார் என்பதை முன்னரே யூகித்து விட்டார். குடியரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டதுக்கு வந்த வாக்காளர் ஒருவர், மைக்கேல் மூரிடம் நாம் ட்ரம்புக்கு வாக்களிக்க வேண் டும். அனைத்தையும் தலைகீழாக வீழ்த் திப் போடவேண்டும் (Shake things up) என்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஏகாதிபத்திய மூலதனம் தனது லாப வேட்டைக்காக உள்நாட்டிலிருந்து உற்பத்தி ஆலைகளை மூன்றாம் உலக நாடுகளுக்குக் கடத்திச் சென்ற தால் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளது அமெரிக்க தொழிலாளர் வர்க்கம். இந்தப் போக்கால் பொதுவில் குற்றச் செயல் களை அதிகரித்திருந்தாலும், குறிப்பாக கறுப்பினத்தவரிடம் அது அதிகரித்தளவில் காணப்படுகின்றது. மாறாக, வெள்ளை யினத்தவரிடம், வேலையிழப்புகள், நம்பிக்கையற்ற நிலையைத் தோற்று வித்து போதைப் பழக்கத்தை அதிகரிக்கச் செய்துள்ளன. எனவே, வழமையான ஆளும் வர்க்கப் பசப்பல்களை அவர்கள் நம்ப மறுக்கின்றனர். மறுபுறம் இதே பிரி வினர் கல்வியறிவற்றவர்களாகவும், அரசியல் அறிவற்றவர்களாகவும் இருப் பதால் ட்ரம்ப் முன்மொழியும் எளிமை யான தீர்வுகளுக்குப் பலியாகினர். இதோடு கூடவே, வெள்ளையினத்தின் இறுதி




மீட்பராக ட்ரம்ப்பை முன்வைத்து பிரசாரம் மேற்கொண்டனர் இனவெறி அமைப் பினர்.

தற்போது அமெரிக்கா ஓர் அதி தீவிர வலதுசாரிப் பாதைக்குள் அடியெடுத்து வைத்திருப்பதாகவும், கூகிளக்ஸ் கிளான் போன்ற இனவெறி அமைப்புகள் குடியர சுக் கட்சியைக் கைப்பற்றும் அபாயம் இருப்பதாகவும் லிபரல் ஜனநாயகவாதி கள் அச்சப்படுகின்றனர். ட்ரம்ப் போன்ற ஓர் அரை வேக்காட்டின் விரல்நுனியில் அமெரிக்க அணுகுண்டுகளை இயக்கும் சிவப்புப் பொத்தான் இருப்பதை நினைத் தாலே நடுக்கமாக உள்ளது எனப் பதறு கிறது நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை.

தாராளவாத ஜனநாயகக் காதலர்கள் அச்சப்படுவதைப் போல் அணுகுண்டின் சிவப்புப் பொத்தானின் மேல் ட்ரம்பின் விரல்கள் தாளமிட்டுவிடுமா? என்று உறுதியாகச் சொல்ல முடியாது. அரசுக் கட்ட மைவுக்கு உள்ளே வானளாவிய அதி காரத்துடன் நுழைந்துள்ள ட்ரம்ப்பை அது தனக் கேற்றபடி மறு வார்ப்புச் செய்யுமா இல்லையா என்பதைப் பொறுத்தது. ஒரு வேளை அரசுக் கட்டமைவின் தேவை களுடன் டொனால்ட் ட்ரம்பின் சிந்தனைப் போக்கு பொருந்தி வர வில்லை என்றால்? ஹிலாரிக்கு இருப்பதைப் போல் திட்ட மிட்ட கொடூர (systematic cruelty) மனம் ட்ரம்புக்கு இல்லை என்பதால் - அச்சச்சோ மக்கள் பாவம் என்றும் சிந் திக்கலாம்; அல்லது ஹிலாரியைப் போல் விளைவுகளைக் கணக்கிட்டுப் பார்க்கும் பொறுமை இல்லாததால் - மூன்றாம்



உல கக் குரங்குப் பயல்கள் செத் தொழி யட்டும் என்றும் சிந்திக்கலாம். எனினும் இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலான அனுபவம் வாய்ந்த அமெரிக்க அரசுக் கட்டமைவு தனக்கேற்றபடி ட்ரம்ப்பை தகவமைத்துக் கொள்ளும் வாய்ப்புகளே அதிகம் என்பதையும் நாம் கணக்கி லெடுத்துக் கொள்ள வேண்டும்.


அடுத்து, பெண்களைக் குறித்து இழி வாகச் சிந்திக்கும் ஒரு பொறுக்கியை எப் படி அமெரிக்க வாக்காளர்கள் தெரிவு செய்தனர் எனக் கலங்குகின்றனர் மேற் கத்திய பாணி பெண்ணுரிமை ஆர்வலர் கள்.

அதுதான் அமெரிக்கா. பசிபிக் மற்றும் அட்லாண்டிக் கடற்கரையோர மாநிலங்க ளைத் தாண்டி அமெரிக்காவின் மத்திய பகுதி மொத்தமும் தீவிர கத்தோலிக்க அடிப்படைவாதக் கருத்துக்களுடனும் மத்திய கால கலாச்சார விழுமியங்களுட னுமே உள்ளது. ட்ரம்ப்புக்கு வாக்களித்த பெண்ணிடம் வாஷிங்டன் போஸ்ட் பத் திரிகையின் நிருபர் ஒருவர் பெண்களை இழிவாக பேசும் ட்ரம்ப்புக்கு ஏன் வாக்க ளித்தீர்கள்? எனக் கேட்டமைக்கு அவர் அளித்த பதில், 'அவர்தான் உண்மை யான' ஆம்பிள்ளை.

ஆணாதிக்க எதிர்ப்பு, எல்.ஜி.பி.டி. இயக்கங்கள், ஒருபாலினத்திருமணங்கள் என்பவை எல்லாம் நகரங்களில் உள்ள படித்த, உயர் நடுத்தர வர்க்க அமெ ரிக்கர்களின் உலகத்துடன் முடிந்து விடு கின்றன. உண்மையான அமெரிக்காவோ தீவிர வலதுசாரி முதலாளிய சித்தாந்தத் தில் லயித்துக் கிடக்கிறது.

இறுதியாக, ட்ரம்ப் இஸ்லாமியர் களுக்கு எதிரானவர் என்பதால் இந்தி யாவுக்கும் இந்தியர்களுக்கும் எதாவது எலும்புத் துண்டுகள் கிடைக்கும் என வாயில் எச்சிலூறக் காத்திருக்கின்றனர் அமெரிக்க வாழ் இந்தியர்கள்.

உண்மையில் ட்ரம்ப் குடியரசுக் கட்சியை வெளியிலிருந்து வந்து கைப்பற்றியவர் என்பதால் உட்கட்சி யிலிருந்து எழும் கலகக் குரல்களை எதிர்கொள்ள வெள்ளையின வெறியர் களையே நம்பியுள்ளார். வெள்ளையின வெறியர்களை அவர் தனது ஏவல்



நாய்களாகப் பராமரிக்க வேண்டிய கட்டா யம் இருக்கிறது. இன வெறியர்களைப் பொறுத்த வரையில் தலையிலிருப்பது குல்லாவா குடுமியா என்பதல்ல பிரச் சினை தோலின் நிறம் கறுப்பா வெளுப்பா என்பதே முக்கியம்.

எனவே, முதலில் நாஜிகள் தாக்கப் போவது இந்தியர்களான உங்களை யல்ல - ஆனால் உங்கள் பாதுகாப்பும் உறுதியல்ல.

(கேள்வி தொடரும்..)




# உலக வரலாறும் மனித விடுதலையும்

07

சமூகம் என்பது சிக்கலான மனித உறவுகளைக் கொண்ட ஒரு புதிரான உலகம். எத்தனையோ எதிர்வு சக்திகள் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து, ஒன்றோடு ஒன்று முரண்பட்டு, அந்த முரண்களின் முகங்கள் தெரியாதவாறு ஒன்றோடு ஒன்று ஒன்றித்து நின்று, ஒரு பொய்யான தோற்றப்பாட்டுடன் சமூகம் இயங்குகிறது. இந்தத் தோற்றப்பாட்டிற்கு அப்பால், மறைபொருளாக ஒளிந்திருக்கும் சமூக மெய்யுண்மைகளை இனங்கண்டு அறிவதற்கு இயங்கியல் ஆய்வு இன்றியமையாதது. இதில் முரணிய விதி முக்கியமானது. அதுவே சமூக இயக்கத்தின் இரகசியங்களை வெளிக்காட்டவல்லது. இந்த முரணியம் ஒருமுகத் தன்மை கொண்டதல்ல; அது பல்முகப் பரிமாணங்களைக் கொண்டது என விளக்குகிறார் மாவோ.

சிக்கலான வர்க்க உறவுகளால் பின்னப்பட்டிருக்கும் சமூக உலகத்தில், முரண்பாடுகளும் சிக்கலானவையாகப் பின்னப்பட்டிருக்கின்றன. இவை ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாக, ஒன்றன் மீது ஒன்று தாக்கம் விளைவிப்பனவாக, சமூக இயக்கத்தின் நீரோட்டமாக அசைகின்றன. இந்த சமூக முரண்பாட்டு உலகத்தைப் பல ரகங்களாக வகைப்படுத்துகிறார் மாவோ. பிரதான முரண்பாடு என்றும், இரண்டாம் தர முரண்பாடு என்றும், பகை முரண்பாடு என்றும், சிநேக



> காள் மாக்ஸின் எழுத்துக்களில் ஒரு சிந்தனைத் தொடர்ச்சி இருக்கிறது. ஒரு பரிணாம வளர்ச்சி இருக்கிறது. இளம் பிராயத்தில் அவர் தத்துவம் பற்றி எழுதினார். முதிய காலத்தில் பொருண்மியம் பற்றி எழுதினார். ஆனாலும் அவரது தத்துவப் பார்வை, உலகப் பார்வை, அவரது முதிர்ந்த கால எழுத்துக்களிலும் ஆழமாக வேர்பதித்து நிற்கின்றன. கேஹலின் இயங்கியல் தத்துவமானது மாக்ஸின் சிந்தனைத் தொடர்ச்சிக்கு ஆதாரமாக நிற்கிறது.

முரண்பாடு எனறும, சமநிலையற்ற வளர்ச்சிப் போக்குடைய முரண்பாடு என்றும் இவை நிரைப்படுத்தி வகைப்படுத்தப்படுகின்றன. நதிகள் சமுத்திரத்தில் சங்கமமாவது போன்று, எல்லா முரண்பாடுகளுமே பிரதான முரண்பாட்டைச் சந்திக்கின்றன. அதற்கு முண்டு கொடுத்து நிற்கின்றன. இந்தப் பிரதான முரண்பாடு முக்கியமானது. அது முற்றிக் கனியும் போது புரட்சிகரப் புறநிலை பிறக்கிறது. இந்தப் பிரதான முரண்பாட்டையும் அதோடு பிணைந்து நிற்கும் ஏனைய முரண்பாடுகளையும் இனங் கண்டு கொள்வதன் மூலமே சமூக உலகத்தை ஆழமாகத் தரிசித்துக் கொள்ள முடியும் என்கிறார் மாவோ.

முரணியக் கோட்பாட்டை விரிவுபடுத்தி, அதனைச் செழுமைப்படுத்த மாவோ, லெனின் போன்றோர் நிகழ்த்திய சமூக ஆய்வுகளை உதாரணம் காட்டி, கேஹலின் இயங்கியலுக்கும் மாக்ஸிய இயங்கியலுக்கும் அடிப்படையான, அமைப்பு ரீதியான வேறுபாடு உண்டு என வாதிடுகிறார் பிரபலநவமாக்ஸிய அறிஞரான அல்தூசர்.

கேஹகலின் தத்துவம் கருத்துலகம் சார்ந்தது. ஆன்மீக மயமானது. ஆனால் மாக்ஸின் ஆய்வு வரலாற்றுடன் பிணைந்து நிற்கிறது. சமூக வரலாற்றுக்கு அறிவியல் ரீதியான விளக்கத்தைக் கொடுக்கிறது என்பது அல்தூசரின் வாதம்.

மாக்ஸியத்தை ஒரு வரலாற்று விஞ்ஞானக் கோட்பாடாக நிறுவுவதாயின் மாக்ஸின் சிந்தனை உலகிலிருந்து கேஹகலின் 'ஆவியை' விரட்ட வேண்டும் என்கிறார் அல்தூசர். அவரது தத்துவார்த்த எழுத்துக்கள் இந்தக் காரியத்தையே செய்ய முனைகின்றன. அல்தூசரின் எழுத்துக்கள் நவ மாக்ஸிய சிந்தனை உலகில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளன. இந்தச் சர்ச்சையையும் அதன் வாதப் பிரதிவாதங்களையும் விளக்கிக் கூறுவது இக் கட்டுரையின் நோக்கமல்ல. நாம் இங்கு எடுத்துக்கொண்ட விடயம், கேஹலின் தத்துவம் மாக்ஸின் சமூக வரலாற்றுக் கோட்பாட்டில் ஏற்டுத்திய தாக்கம் பற்றியதாகும். கேஹலின் சிந்தனையை மாக்ஸியம் எந்த அளவுக்கு உள்வாங்கியிருக்கிறது என்பது பற்றியே நாம் இங்கு பார்ப்போம். இந்தச் சிந்தனை வரம்பிற்குள் நின்றே இந்தக் கட்டுரை எழுதப்படுகிறது.

காள் மாக்ஸின் சிந்தனையுலகை இரு கால கட்டங்களாகப் பிரித்து, ஒன்றை இளம் மாக்ஸின் தத்துவார்த்த எழுத்துக்கள் என்றும், மற்றதை முதிர்ந்த மாக்ஸின் அறிவியற் கோட்பாடுகள் என்றும் இரு வகைப்படுத்கிறார் அல்தூசர். முன்னது சித்தாந்த உலகம் சார்ந்தது. பின்னது அறிவியல் உலகம் சார்ந்தது. முன்னதில் கேஹலின் தத்துவப் பிசாசு குடிகொண்டிருக்கிறது. பின்னதில் அது விரட்டப்பட்டு விட்டது. முன்னது தத்துவ விமர்சனம். பின்னது சமூக வரலாற்று விஞ்ஞானம்.

இப்படியாக மாக்ஸின் எழுத்துலகை இரு கூறுகளாகப் பிரித்து, இடையே ஒரு சிந்தனை முறிவு ஏற்பட்டுள்ளதாக வாதாடுகிறார் அல்தூசர்.

இந்த வாதம் வலிமையற்றது; ஏற்றுக் கொள்ள முடியாதது. ஏனென்றால் அல்தூசர் கூறுகின்றமைபோல மாக்ஸின் எழுத்துக்களில் ஓர் அடிப்படையான சிந்தனை முறிவு (Epistemological break) ஏற்பட்டதாகச் சொல்லிவிட முடியாது. அவரது எழுத்துக்களில் ஒரு சிந்தனைத் தொடர்ச்சி இருக்கிறது. ஒரு பரிணாம வளர்ச்சி இருக்கிறது. இளம் பிராயத்தில் அவர் தத்துவம் பற்றி எழுதினார். முதிய காலத்தில் பொருண்மியம் பற்றி எழுதினார். ஆனாலும் அவரது தத்துவப் பார்வை, உலகப் பார்வை, அவரது முதிர்ந்த கால எழுத்துக்களிலும் ஆழமாக வேர்பதித்து நிற்கின்றன. கேஹலின் இயங்கியல் தத்துவமானது மாக்ஸின் சிந்தனைத் தொடர்ச்சிக்கு ஆதாரமாக நிற்கிறது.

ஜேர்மானிய தத்துவம், பிரெஞ்சு அரசியல், பிரித்தானிய பொருண்மியம் என்ற ரீதியில், காலத்திற்குக் காலம் அந்தந்த நாடுகளில் வாழ்ந்தபோது, அந்தந்த நாடுகளின் வரலாற்றுப் புறநிலைகளாலும் சிந்தனைப் போக்குகளாலும் ஈர்க்கப் பட்டு, அந்தந்தத் துறைகள் பற்றி மாக்ஸ் எழுதினார். அவர் எங்கு சென்றாலும், எதனை எழுதினாலும், கேஹகலின் 'ஆவி'. அவரைப் பின்தொடர்ந்தது. அதே 'ஆவிதான்' கேஹலின் இயங்கியல் தத்துவம். அது அவரது எல்லா எழுத்துக்களிலும் ஆட்கொண்டு நிற்கிறது.

முதிர்ந்த பருவத்தில் அவர் பிரித்தானியாவில் வாழ்ந்தபொழுது, ஆங்கிலேய முதலாளிய உற்பத்தி உலகின் அராஜகப் போக்கு அவரை ஆழமாகப் பாதித்தது.பல வருடங்களை லண்டன் 'மியூசியம்' நூலகத்தில் செலவிட்ட அவர், 'மூலதனத்தை' எழுதினார். புரட்சிகரமான பொருண்மியக் கோட்பாடுகளைப் படைத்தார். முதலாளிய உற்பத்தி உலகின் முரணியத் தன்மைகளையும் இயங்குவிதிகளையும் எடுத்து விளக்கினார். வரலாற்றுப் பொருளியத்தின் அத்திபாரத்தை அமைத்தார். அல்தூசரால் சமூக வரலாற்று விஞ்ஞானமாகச் சித்திரிக்கப்படும் சமூக வரலாற்றுப் பொருளியமும் இயங்கியல் தத்துவத்தின் அத்திவாரத்தில் தான் கட்டப்பட்டிருக்கிறது. கேஹலின் இயங்கியல் விதிகளே



அல்தூசர்

மாக்ஸிய வரலாற்றியலின் தூண்களாக நிற்கின்றன.

இயங்கியல் ஆய்வுமுறைக்கு இலக்கணமாகத் திகழும் காள் மாக்ஸின் 'மூலதனம்', முதலாளிய பொருளுற்பத்தி உலகை ஆழமாக விசாரணை செய்கிறது. தற்கால சமூகத்தின் பொருண்மிய இயங்கு விதிகளைப் பிட்டுக்காட்டுவதே இந்த ஆய்வு நூலின் இறுதி நோக்கம் என 'மூலதனத்தின்' முன்னுரையில் அவர் குறிப்பிடுகிறார்.

சமூகக் கட்டமைப்பின் அடித்தளமாகப்பொருண்மியக்கட்டமைப்பு அமைந்திருக்கிறது. பொருண்மிய அமைப்பின் இயங்கு விதிகளே சமூகக் கட்டமைப்பின் அசைவியக்கத்துக்குப் பிரதான காரணிகளாகவிளங்குகின்றன. ஆகவே,பொருண்மிய அமைப்பின் இயங்கு விதிகளைக் கண்டுகொண்டால் சமூக இயக்கத்தின் போக்கிகை, அதன் வரலாற்று நகர்வைக் கண்டுகொள்ளலாம். இந்தநோக்கிலேயே முதலாளிய சமூகத்தின் உற்பத்தி வடிவத்தை 'மூலதனம்' அறுவை செய்து பார்க்கிறது.

இந்த ஆய்வில், முதலாளிய உற்பத்தி முறையில் நிலவும் முரணியங்களை மிகவும் நுட்பமான முறையில் வெளிப்படுத்திக் காட்டுகிறார் காள் மாக்ஸ். இந்த முரணியங்கள் முதலாளியத்தைப் பெரும் நெருக்கடிக்குள் தள்ளிக்கொண்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார். இது முதலாளியத்தின் சிதைவுக்கு வழிகோலும் என அவர் நம்பினார்.

உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற பேரவாவில், முதலாளியமானது கட்டுக்கடங்காத வளர்ச்சிப் பாதையில் செல்கிறது. இதன் விளைவுகளில் ஒன்றாக இலாப விகிதாசாரத்தில் தவிர்க்க முடியாத வீழ்ச்சி ஏற்படும். இது முதலாளியத்தின் உள்முரண்பாடாக எழுந்து, முதலாளிய உற்பத்தி முறையை ஸ்தம்பிக்கச் செய்யும். மறுபுறத்தில், முதலாளியத்தின் பெருவளர்ச்சி, முதலாளிய தொழிலாள வர்க்கங்களை இருதுருவப் பிளவில் இட்டுச் செல்லும். பெருமீன்கள் சிறுமீன்களை விழுங்குவதைப் போல பெருமுதலாளிகள் சிறு முதலாளிகளை ஏப்பம் விட முதலாளிகளின் தொகை சுருங்கும். அதேவேளை, தொழிலாள வர்க்கத்தின் தொகை பெருகும்; சுரண்டல் அதிகரிக்கும். தொடர்ச்சியாக வறுமையின் விளிம்பிற்கு பாட்டாளி வர்க்கம் தள்ளப்படும். சகித்துக்கொள்ள முடியாத துன்பத்தில் உழைக்கும் வர்க்கம் உழலும். இதனால் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெடிக்கும். இவ்விதம் உள்முரண்பாடாக எழும் நெருக்கடியால் முதலாளியமானது தனது புதைகுழியைத் தானாகவே தோண்டிக் கொள்ளும். அதன் புதை குழியிலிருந்து ஒரு புதிய சமூகம் பிறக்கும். புதிய உற்பத்தி உறவுகளைக் கொண்ட ஒரு புதிய உற்பத்தி வடிவம் தோன்றும். இவ்வாறு 'மூலதனத்தில்' தீர்க்கதரிசனம் சொல்கிறார் காள் மாக்ஸ். (தொடரும்...)

## தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்

*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*



*'விடுதலை' என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.*

# முஸ்லிம் மக்களைச் சீண்டி விட்டு இனவாத அழிவுக்கு சதித் திட்டம்

## எச்சரிக்கிறார் வட மாகாண உறுப்பினர் அஸ்மின்

யாழ்ப்பாணம், நவ.21

முஸ்லிம்களைச் சீண்டி இன்னும் ஓர் இனவாத அழிவை ஏற்படுத்தும் ஒரு சதித் திட்டம் தற்போது அரங்கேற்றப் படுகின்றது என்று வடக்கு மாகாணசபை உறுப்பினர் அ.அஸ்மின் சாடியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்,

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் நீண்டகாலமாகப் புரை யோடிப்போயிருக்கின்ற இனப் பிரச்சினைத் தீர்வுக்கு ஒரு வழி ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் என்ன விலை கொடுத்தாவது இதனைக் குழப்பியடிக்க நாட்டின் இனவாதசக்திகள் முயற்சிக்கின் றன. அவர்கள் சிறுபான்மை இனங்கள் மேலோங்குகின்றார் கள் என்ற கருத்தை மிக இலகு வாகச் சிங்கள மக்களிடம் விற்று விட முயற்சிக்கின்றார்கள். அதற் கான ஒவ்வொரு சந்தர்ப்பத்தை யும் மிகவும் கச்சிதமாகப் பயன் படுத்துகின்றார்கள். தமிழ் மக்கள் மீது பழிசொல்வதை இன்னமும் அவர்கள் விட்டுவைக்க வில்லை. பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழ் மக்கள் மீதான வன்முறைக ளைக் கட்டவிழ்த்து நாட்டில் மீண்டும் ஓர் அமைதியற்ற சூழ் நிலையை அவர்கள் ஏற்படுத்த முனை கின்றார்கள்.

அத்தகைய இனவாத சக்தி களுக்குத் தூபமிடுகின்ற தமிழ்த் தலைவர்கள் இருந்தாலும், அவர் களது கருத்துக்களைவிட நிதா னமாகச் செயற்படுகின்ற தமிழ்த் தலைவர்களின் கருத்துக்கு தமிழ் மக்கள் கட்டுப்படுவதால் அவ்வளவு வேகமாக தமிழ்மக் களை அவர்களால் தமது நிகழ்ச்சி நிரலுக்குப் பயன்படுத்த முடியா மல் போய் விடுகின்றது. உதாரண மாக யாழ். பல்கலைக் கழகத் தில் இடம்பெற்ற ஒரு சில அசம் பாவிதங்களை திசைதிருப்ப முனைந்த நிகழ்வுகளைக் குறிப் பிடமுடியும்.

அதேபோன்று இப்போது முஸ் லிம் சமூகத்தைத் தூண்டி விட்டு அதன் மூலம் இன ரீதியான அடைவுகளை ஈட்டிக் கொள்ள முடியுமா என்பது பேரினவாதி களின் எண்ணமாகவும் முயற் சியாகவும் இருக்கின்றது. இதற் குப்பக்க வாத்தியம் வாசிக்கும் வகையில் ஒரு சில முஸ்லிம் அரசியல் தலைவர்களும், அமைப்புகளும் செயற்படுகின் றமை மிகவும் வருத்தமளிக் கின்றது. அதே சந்தர்ப்பத்தில் முன்மாதிரி முஸ்லிம் அரசியல் குறித்துப் பேசுகின்ற புத்திஜீவிகள் எவ்விதமான திட்டமிடல்களும் இன்றி திகைத்து நிற்கின்ற சூழல் மேலும் வருத்தமளிக்கின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களி லேயே முஸ்லிம் மக்கள் மிகவும் பொறுப்புணர்வோடு செயற்படக் கடமைப் பட்டிருக்கின்றனர்.

மேலும் நாடாளுமன்ற உரை ஒன்றில் நாட்டின் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ முன் வைத்த கருத்துக்களும் நான் மேலே சுட்டிக்காட்டிய சதி நடவடிக்கைகளின் ஓர் அங்க மாக இருக்கின்றதோ என்ற ஐயமும் முஸ்லிம் மக்கள் மத்தி யில் எழுகின்றது. எல்லாவகை யான மத ரீதியான தீவிரவாதங் களும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்ற கருத்தை முன் வைக்க முனைந்த அமைச்சர் முஸ்லிம் மக்கள் குறித்து முன் வைத்த கருத்துக்கள் முஸ்லிம் மக்களுக்கும் அமைப்புகளுக் கும் எதிராக இனவாதிகளைத் தூண்டிவிடும் செயலாகவே அமைந்திருக்கின்றது."-என்றார். (ஏ)

## மூளைக் காய்ச்சல் பரப்பும் நுளம்பு கொழும்பில் எச்சரிக்கை

கொழும்பு, நவ.21

மூளையில் காய்ச்சலைப் பரப்பும் ஒருவகை நுளம்பு கொழும்பை அண்டிய பிர தேசங் களில் காணப்படுவதாக சுகாதா ரப் பிரிவு பொது மக்களுக்கு எச் சரிக்கை விடுத்துள்ளது.

மாலை 6 மணிக்கும் இரவு 10 மணிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் இந்த நுளம்பின் தாக்கம் கூடுதலாகக் காணப் படுவதாக கொழும்பு மாநகர சபையின் பிரதான வைத்திய அதிகாரி வைத்திய நிபுணர் றுவான் விஜயமுனி தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அந்த நுளம்பு கடித்ததன் பின் னர் எரிவு, அரிப்பு, தேகம் சிவந்து போதல் முதலான அறிகுறிகள் தென்படுகின்றன என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ஏ)

## பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, நவ.21

வரவு - செலவுத் திட்டத்தில் இலவசக் கல்வி மற்றும் பொதுச் சுகாதார துறைகளுக்கு குறைந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் நண்பகல் கொட்டகல நகரத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டோர் தெரிவித்தவை வரு மாறு:-

"இலங்கையில் சுதந்திரமான இலவசக் கல்வி முறைமையே காணப்படுகின்றது. ஆனால், தற்போது பாடசாலைக்கு ஒரு மாணவன் உள்வாங்கப்படும் போது பாடப் புத்தகம், கதிரை, மேசை உட்பட பணம் வழங்கப்பட வேண்டியுள்ளது. கல்வித்துறை வியாபாரமாக்கப்பட்டு வருகின் றது. அதேபோல் சுகாதாரத் துறையும் வியாபார மயமாக்கப் பட்டு வருகின்றது.

கடந்த கால வரவு - செலவுத் திட்டத்தில் கல்விக்கும் சுகாதாரத் துக்கும் ஒதுக்கப்பட்ட நிதியை விட 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நிதி குறைவாகவே ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இலவசக் கல்வி முறைமை இல்லாதொழி யும் நிலைமை உருவாகின்றது.

இதுதொடர்பில் நல்லாட்சி அரசு கவனம் செலுத்த வேண் டும்.- என்றனர். (ஏ)

## தினசரி ராசி பலன் 21.11.2016

| | | |
|---|---|---|
| சுபநேரம் | : காலை : 6.15 - 7.15 | |
| | மாலை : 4.45 - 5.45 | |
| ராகு காலம் | : 7.30 - 9.00 | ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார் |
| குளிகன் | : 1.30 - 3.00 | ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம் கும்பகோணம், தமிழ்நாடு. |
| எமகண்டம் | : 10.30 - 12.00 | (maruthi_jaya2003@yahoo.co.in) |

சுபமுகூர்த்த நாள் - மேல்நோக்கு நாள்

**மேஷம்** : மேன்மை - எதிர்பாராத வரவால் மேன்மை அடையும் நன்னாள்.

**ரிஷபம்** : நஷ்டம் - அளவான ஆசைகள் இருப்பது இழப்பின் அளவைக் குறைக்கும்.

**மிதுனம்** : ஓய்வு - உழைப்பால் உண்டான களைப்பு நீங்கி ஓய்வு கிடைக்கும்.

**கடகம்** : பயம் - எடுத்த காரியங்களில் தளர்வு கண்டு மனம் சோர்வடையும்.

**சிம்மம்** : சுகம் - மனதில் மகிழ்ச்சி நிறையும் நன்னாள்.

**கன்னி** : துணிவு - துணிவுடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள்.

**துலாம்**: ஆர்வம்- செய்யும் செயல்களில் கூடுதல் ஈடுபாடுகொண்டு வாழ்வில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்**: முயற்சி - நம்பிக்கையுடன் ஈடுபடும் அனைத்துக் காரியங்களிலும் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு**: பணிவு - வீண்கோபத்தைக் குறைத்து பணிவுடன் செயற்பட்டால் நலம் நல்கும்.

**மகரம்**: தனம் - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் நிதானத்துடன் செயற்பட்டால் லாபம் நல்கும் நன்னாள்.
சந்திராஷ்டமம்: உத்திராடம் 2,3,4ஆம் பாதங்கள், திருவோணம்.

**கும்பம்**: பக்தி - தெய்வ வழிபாடுகள் செய்ய முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும்.

**மீனம்**: கோபம் - அனைவரிடத்திலும் அமைதியுடன் விலக நலம் நல்கும் நன்னாள்.

## பெருந்தோட்டப் பகுதிகளில் குடிதண்ணீர்த் திட்டம்

### உலக வங்கியின் நிதியுதவியில்

ஹற்றன், நவ.21

உலக வங்கியின் நிதியுத வியில் பெருந்தோட்டப் பகுதிக ளில் குடிதண்ணீர் மற்றும் மல சலகூடக் கட்டமைப்பை ஏற்படுத் துவதற்கான திட்டம் முன்னெடுக் கப்பட்டு வருகின்றது என தொழி லாளர் தேசிய சங்கத்தின் தேசிய அமைப்பாளரும் மத்திய மாகா ணசபை உறுப்பினருமான சோ.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

மலையக புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் ஊடாக உலக வங்கியின் நிதியுத வியில் மேற்கொள்ளப்பட்டுவரும் தோட்டப்பகுதிகளுக்கு சுத்தமான குடிதண்ணீர் மற்றும் மலசலகூட வசதிகளை ஏற்படுத்தும் திட்டத் துக்கான ஹற்றன் பிராந்திய பணிமனையைத் திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரி வித்தவை வருமாறு:-

"மலையகத் தோட்டப்பகுதி களில் சுத்தமான குடிதண்ணீர் வழங்குதல், மலசலகூட கட்ட மைப்பை ஏற்படுத்துதல் என்பன இன்றியமையாத தேவைகளாக வுள்ளன. இந்தத் தேவைகளை 2020ஆம் ஆண்டுக்குள் பூர்த்தி செய்வதற்கு உலக வங்கி நிதியு தவி வழங்கவுள்ளது. மலையக புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் ஊடாக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

அமைச்சர் பழனி திகாம்ப ரத்தின் ஆலோசனைக்கு ஏற்ப முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இந்த வேலைத்திட்டத்தில் முதற் கட்டமாக ஹற்றன் பிராந்தியத்தி லுள்ள ஹற்றன்-ஸ்டெதன், பொகவந்தலாவை, பொகவான ஆகிய தோட்டங்களில் சகலருக் கும் சுத்தமான குடிதண்ணீரை வழங்கும் வகையில் வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன. தொடர்ந்து வரும் காலங் களில் ஏனைய தோட்டங்களிலும் இந்த வேலைத்திட்டம் முறை யாக நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இதற்காக அமைச்சர் திகாம்பரத்துக்கு எமது நன்றி யைத் தெரிவித்துக் கொள்கின் றோம்"-என்றார். (ஏ)

## நீரில் மூழ்கி மாணவன் சாவு

மட்டக்களப்பில் காத்தான் குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பூநொச்சிமுனை பகுதியில் நேற்று முன்தினம் மாலை நீரில் மூழ்கி மாணவன் ஒருவன் இறந் தான் என்று பொலிஸார் தெரி வித்தனர். அந்த மாணவன் புதிய காத்தான்குடியின் றிஸ்வி நகர் பகுதியைச் சேர்ந்த முஹம் மது பாஹிம்(வயது16) என அடை யாளம் காணப்பட்டுள்ளான்.

சிறுவனின் ஜனாஸா காத் தான்குடி ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டு பின் னர் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தி யசாலைக்கு மாற்றப் பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஏ)

## புராதன கல்லறை கண்டுபிடிப்பு





பொலநறுவை, நவ.21

பொலநறுவையில் புராதன காலத்து மிகப் பழைய கல்லறை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள் ளது. 2600-3000 ஆண்டு களுக்கு இடையேயான காலப் பகுதிக்குச் சொந்தமான பண் டைய காலத்தின் கல்லறை இது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலநறுவை, எலஹெர, சிறிகதுயாய, கட்டுவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போதே இந்த மிகப்பழைய கல்ல றையைக் கண்டுபிடித்தோம் என மத்திய கலாசார நிதியப் பணிப் பாளர் நாயகம் பேராசிரியர் பிரி ஷாந்த குணவர்தன தெரிவித் துள்ளார். அதனைப்பாதுகாக்கும் நடவடிக்கை தற்போது மேற் கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலநறுவையில் அறி வியல்படி கிடைத்த முதலாவது மிகப்பழைய கல்லறையாக இத னைப் பெயரிடுவதற்கு நடவ டிக்கை மேற்கொள்ளப்படும் என் றும் அவர் மேலும் தெரிவித்துள் ளார். (ஏ)

# போதைப்பொருள் பாவனை கட்டுப்பாட்டு விழிப்புணர்வு

## யாழ். எச்.என்.பி வங்கியில் நடைபெற்றது






யாழ்ப்பாணம்,நவ.21


வடமாகாணத்தில் அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனையை குறைப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சர்வதேச றோட்டறிக் கழகமும் லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்திய இந்தக் கருத்தரங்கில், பொலிஸார், மதுவரித் திணைக்கள அதிகாரிகள், ஆசிரியர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் போன்றோர் பங்குபற்றினர்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கு ஆஸ்திரேலிய றோட்டறி சமூக சேவை அமைப்பு, ஆஸ்திரேலிய மெடிக்கல் எயிட் நிறுவனம் மற்றும் கில்ஸ் றோட்டறிக் கழகம் ஆகியன இணைந்து நிதியுதவியை வழங்குகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

2016, 2017 ஆம் ஆண்டுகளுக்கான இந்தச் செயற்றிட்டம், மது போதையிலிருந்து விடுபடுவதற்கும், எச்.ஐ.வி. தொற்றிலிருந்து பாதுகாப்பான வாழ்வை முன்னெடுப்பதற்குமான விழிப்புணர்வை வழங்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மேற்படி நிகழ்ச்சித்திட்டம் முதற் தடவையாக நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது. தொடர்ந்து, கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும். எதிர்வரும் டிசெம்பர், ஜனவரி, பெப்ரவரி ஆகிய மாதங்களில் மாணவர்களுக்கான விழிப் புணர்வுகள் ஆரம்பிக்கப்படும். – என்றும் ஏற்பாட்டாளர்கள் கூறினர். (ம -18)




வடக்கு மாகாணத் கல்வித்திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண சபையின் வழிகாட்டலின் கீழ் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர். கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் யாழ். இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நிகழ்வு ஆரம்பமாகியது. தொடர்ந்து 3 நாள்கள் தொடர்ச்சியாக நடைபெறவுள்ள இந்த நிகழ்வின் முதலாம் நாள் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும்,சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா,நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தவராசாவும் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட விஞ்ஞான, கணித,சமூகவியல் வினாடிவினாப் போட்டிகள்,சுற்றாடல் சார்ந்த கட்டுரைப் போட்டிகள்,உலக உணவு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட ஓவியப்போட்டி ,முதலமைச்சர் கிண்ணத்துக்கான சதுரங்கப் போட்டிகள் போன்றவற்றில் வெற்றியீட்டிய மாணவர்களும், விசேடமாக தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்ட ரீதியாக வெற்றி பெற்ற மாணவர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 700 இற்கும் அதிகமான மாணவர்கள் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-12)

# ஆசிரியர்களைக் கௌரவிப்பதற்கு மாணவரிடம் நிதி சேர்க்க முடியாது

## கல்வி அமைச்சு விரைவில் சுற்றுநிருபம் வெளியிடும்

கொழும்பு,நவ.21

பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு பரிசுப் பொருள்கள், நினைவுச் சின்னங்களை வழங்குவதற்காக மாணவர்களிடம் நிதி சேகரிக்க முடியாது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு நிதி சேகரிப்பதைத் தடுப்பதற்காக புதிய சுற்றுநிருபம் ஒன்றை வெளியிட இருப்பதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

குளியாபிட்டிய, நக்காவத்தை மஹிந்த தேசிய பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

மாணவர்களிடம் நிதி சேகரிப்பது இலவசக் கல்விக்கு அச்சுறுத்தலாக அமைவதுடன் பாடசாலைகளில் மாணவர்கள் மன அழுத்தத்திற் கும் உள்ளாக நேர்கின்றது. இவற்றைத் தடுக்கும் நோக்கிலேயே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பெற்றோர்களிடம் இருந்து கிடைத்த கோரிக்கைகளை ஆராய்ந்து பார்த்ததன் பின்னரே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. – என்றார். (ம)





யாழ். பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் டிப்ளோமா ஊடகக் கற்கை பயிற்சி நெறிகளை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமாகத் திகழும் ஊடகக் கற்கைப் பயிற்சியில் தமது கற்கை நெறிகளை மேற்கொண்ட மாணவர்களுக்கே சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பயிற்சி மையத்தின் பணிப்பாளர் தே.தேவானந்த் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி கலாநிதி க.சுதாகரும் பங்கேற்றனர்.

இதழியல் டிப்ளோமா பயிற்சி நெறியை நிறைவு செய்த ஐந்தாம் மற்றும் ஆறாம் பிரிவு முழு நேர மாணவர்கள் 15 பேர் மற்றும் மூன்றாம் அணி பகுதி நேர மாணவர் ஒருவர் உட்பட 16 பேர் இதில் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர்.

இதில் முழுநேர ஐந்தாவது பிரிவு மாணவர்களான கலைவாணி சிறிகணேசன், புவிதாஸ் பரஞ்சோதி, விஜயஜந்தினி ராஜதுரை, கோவிந்தபிள்ளை அச்சுதன், செல்வநாயகம் உமாசுதன், இராஜரட்ணம் யுகநாத், நியாமுடீன் முகமட் பர்ஷான் ஆகியோரும் முழுநேர ஆறாம் அணி மாணவர்களான கந்தசாமி பரதன், கணேசர் சக்திவேல், சின்னப்பு கலாராஜ், சிவபாலன் திவாகரன், பத்மநாதன் பார்த்தீபன், வரதராஜா ரஜிந்தன், செபஸ்தியான் பிள்ளை கலிஸ்டன், கிருத்திகா கிருஷ்ணபாலன் போன்றோரும் மூன்றாம் அணி பகுதிநேர மாணவனான தம்பித்துரை பிரதீபனும் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர். (ஜ-12)

# ஆடுகள் திருட்டு

பருத்தித்துறை,திக்கம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் பின் பக்கத்தில் கட்டியிருந்த இரு மறி ஆடுகள் திருட்டுப்போயுள்ளன என்று பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மழையைச் சாதகமாகப் பயன்படுத்தி வீட்டு வளவுக்குள் வந்த திருடர்கள் ஆடுகளையும் திருடிச் சென்றுள்ளனர். நேற்று முன்தினம் காலை ஆடுகளுக்கு உணவு வைக்க வீட்டு உரிமையாளர் சென்ற போது ஆடுகள் கட்டியிருந்த கயிறு அறுத்தெடுக்கப்பட்டுக் களவாடப்பட்டமை தெரியவந்துள்ளது. (ஜ-ம)

# கௌரவிப்பு நிகழ்வு நேரத்தில் மாற்றம்

வடமராட்சி,நவ.21

வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது. முன்னர் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இத்தகவலை பாடசாலை மாணவர்கள், சாதனையாளர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு முன் கூட்டியே நிகழ்வுக்கு வருகை தருமாறு வேண்டுகோள் விடுக்கின்றார் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் இ.நந்தகுமார். (ஜ-ம)

## இந்திராகாந்தி புகைப்பட கண்காட்சி இன்று ஆரம்பம்

லக்கோ, நவ.21

மறைந்த முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் சிறப்பு புகைப்படக் கண்காட்சியை காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி இன்று ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்திரா காந்தியின் நூற்றாண்டு விழாவை பிரமாண்டமாகக் கொண்டாட காங்கிரஸ் கட்சி திட்டமிட்டுள்ளது.

அதில் ஒருகட்டமாக, சட்டசபைத் தேர்தலை விரைவில் சந்திக்கவுள்ள உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள அலகாபாத் நகரில் இந்திராகாந்தியின் சிறப்புப் புகைப்படக் கண்காட்சியை காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி இன்று ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்த புகைப்படக் கண்காட்சி அலகாபாத் நகரில் ஜவஹர்லால் நேரு மற்றும் இந்திரா காந்தி வாழ்ந்த பூர்விக வீடான ஆனந்தபவன் மாளிகையை ஒட்டியுள்ள சுவராஜ் பவனில் இன்று நடைபெறும்.

இதன் ஆரம்ப விழாவில் காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல் காந்தி, அவரது சகோதரி பிரியங்கா வதேரா, உத்தரப் பிரதேச மாநில காங்கிரஸ் தலைவரும் நடிகருமான ராஜ்பப்பர் மற்றும் காங்கிரஸ் கட்சியின் முக்கிய, மூத்த தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இந்த விழாவையொட்டி, அலகாபாத்தில் தேர்தல் பிரசாரத்தையும் ஆரம்பிக்க காங்கிரஸ் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஏ)

## தனி அறைக்கு மாற்றப்பட்டார் ஜெயலலிதா!



சென்னை, நவ.21

அப்பலோ மருத்துவமனையில் உடல்நலக் குறைவு காரணமாக தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைப் பெற்று வந்த முதல்வர் ஜெயலலிதா நேற்றுமுன்தினம் தனி அறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி இரவு உடல்நலம் குன்றியமையால் அப்பலோ மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார் முதல்வர் ஜெயலலிதா.

நேற்று முன்தினம் மாலை அவர் தனி அறைக்கு மாற்றப்படுகிறார் என்று வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்தது.

நேற்று முன்தினம் காலை, ஜெயலலிதா சிகிச்சைகள் முடிவடைந்து வீட்டுக்கு அனுப்பப்படுவார் என்று தகவல்கள் வெளியான நிலையில், தற்போது அவர் தனி அறைக்கு மாற்றப்படுகிறார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

# தடம் புரண்டது ரயில் 100 பயணிகள் பலி!!

## உத்தரப் பிரதேசத்தில் துயரம்; 150 இற்கும் மேற்பட்டோர் காயம்



லக்னோ, நவ.21

உத்தரப்பிரதேசத்தில் நேற்றுக் காலை இந்தூர்-பாட்னா விரைவு ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. இதில் 100 பேர் உயிரிழந்தனர். 150 இற்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்தனர். மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மத்திய பிரதேச மாநிலமான இந்தூரில் இருந்து பீஹார் மாநிலத் தலைநகர் பாட்னாவுக்குச் சென்று கொண்டிருந்த இந்தூர்-பாட்னா விரைவு ரயில் உத்தரப் பிரதேசத்தில் கான்பூரில் உள்ள புக்கரையான் அருகே நேற்று அதிகாலை திடீரெனத் தடம் புரண்டது.

அந்த ரயிலின் 14 பெட்டிகளும் ஒன்றன் மீது ஒன்றாக மோதி நொறுங்கின. இதில், உயிரிழந்த பயணிகளின் 100 பேரின் உடல்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. 150 இற்கும் அதிகமான பயணிகள் படு காயம் அடைந்து 100 கி.மீ தொலைவிலுள்ள கான்பூர் மற்றும் சுற்றியுள்ள பல்வேறு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

லக்னோவில் முகாம் இட்டுள்ள தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் உடனடியாக புக்கரையான் அடைந்து தீவிர மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களுக்கு உதவியாக, உத்தரப் பிரதேச பொலிஸ், மத்திய பாதுகாப்புப் படை, ரயில்வே பொலிஸ் ஆகியன மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

இந்திய ராணுவத்தின் 250 வீரர்களும் மீட்புப் பணியில் இறங்கியுள்ளனர்.

அவர்களுக்கு உதவியாக ஐம்பதுக்கும் மேற்பட்ட அம்புலன்ஸ்கள் செயற்பட்டு வருகின்றன.

**விசாரணைக்கு உத்தரவு**

இந்த பயங்கர ரயில் விபத்து தொடர்பில் மத்திய ரயில்துறை அமைச்சர் சுரேஷ் பிரபு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதற்குக் காரணமானவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமது உத்தரவில் அவர் கூறி உள்ளார்.

ரயில்வே உயர் அதிகாரிகள் குழுவை உடனடியாக விபத்து நடைபெற்ற இடத்துக்குச் செல்ல உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

**ரூ. 5 லட்சம் இழப்பீடு**

இதையடுத்து உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 5 லட்சம் ரூபா நிவாரண உதவி வழங்கப்படும் என்று உத்தரப் பிரதேச மாநில அரசு அறிவித்துள்ளது.

மேலும், படுகாயம் அடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவும், சாதாரண காயம் அடைந்தவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் என்று முதல்வர் அகிலேஷ் யாதவ் தெரிவித்துள்ளார்.

**மோடி இரங்கல்**

இந்த விபத்தில் பலியானோரின் குடும்பங்களுக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பவை வருமாறு:-

'ரயில் விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்துக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன். இது குறித்து ரயில்வே அமைச்சர் சுரேஷ் பிரபுவிடம் பேசியுள்ளேன். துரித நடவடிக்கை எடுக்கப்படும்' என்று அவர் அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார். (ஏ)

# தமிழகம் முழுவதும் நாளை உணவு தவிர்ப்புப் போராட்டம்

## இந்துக்களின் உரிமைகள் மறுக்கப்படுவதைக் கண்டித்து

சென்னை, நவ.21

இந்துக்களின் உரிமைகள் மறுக்கப்படுவதைக் கண்டித்து இந்து ஒற்றுமை மையம் தமிழகத்தில் நாளை உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நடத்தவுள்ளது.

இந்து ஒற்றுமை மையம் சார்பில் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்றது.

இதன்போது சட்டத்தரணி ஜி.கார்த்திகேயன் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:

"தமிழகத்தில் பயங்கரவாதிகளால் இந்து இயக்க சகோதரர்கள் இதுவரை 230 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். குற்றவாளிகளும், அவர்களுக்கு உடந்தையாக இருந்தவர்கள் எவரும் கைது செய்யப்படவும் இல்லை. தண்டிக்கப்படவும் இல்லை.

தமிழகத்தில் பயங்கரவாதம், தீவிரவாதம் என்பன அதிகரித்து வருகின்றன. அதற்கு ஆதாரமாக இறுவட்டு ஒன்றை நாங்கள் வெளியிட்டு இருக்கிறோம்.

இந்துக்களின் அடிப்படை உரிமைகள், வசதிகள் மறுக்கப்படுகின்றன. இந்து இயக்கங்கள் ஆர்ப்பாட்டம் செய்வதற்கு அனுமதி கேட்டாலும் மறுக்கப்படுகிறது.

இதுபோன்ற செயல்களைக் கண்டித்தும், இதனைத் தமிழக அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்லும் வகையிலும் நாளை தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் ஒரு நாள் உணவுதவிர்ப்புப் போராட்டம் நடத்த உள்ளோம்.

சென்னையில் வள்ளுவர் கோட்டம் அருகே இந்தப் போராட்டம் நடைபெற உள்ளது.

இந்தப் போராட்டத்தில் இந்து இயக்கங்கள், அமைப்புகள் மட்டுமல்லாமல் ஆன்மீக கலாசார அமைப்புகள் மற்றும் சமுதாய அமைப்புகளைச் சேர்ந்த தலைவர்களும் கலந்து கொள்ள உள்ளனர்."– என்றார். (ஏ)

## மாவோயிஸ்ட்டுகள் 5 பேர் சுட்டுக்கொலை

ராஞ்சி, நவ.21

இந்தியாவின் மத்திய பகுதியான சதீஸ்கர் மாநிலத்தில் மாவோயிஸ்ட்டுகளின் வலு விடமான ஒரு பகுதியில் நேற்றுமுன்தினம் பாதுகாப்புப் படையினருடன் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் மாவோயிஸ்டுகள் 5 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 6 மாவோயிஸ்ட்டுகள் கொல்லப்பட்ட சில தினங்களுக்கு பின்னர் நடைபெற்ற சண்டையில் இந்த ஐவரும் பலியாகியுள்ளனர்.

இந்தியாவின் மத்திய பகுதிகளில் தீவிரமாகச் செயற்படும் நக்ஸலைட்டுகள் என்றும் அறியப்படும் மாவோயிஸ்ட்டுகள் ஏழைகளுக்காகவும், நிலம் இல்லாதவர்களுக்காகவும் போராடி வருகின்றோம் என்று கூறிக் கொள்கின்றனர். நக்ஸலைட்டுகள் என்ற பெயரில் சாதாரண பழங் குடியின மக்களும் இதில் இலக்கு வைக்கப்படுகின்றனர் என்று சத்தீஸ்கர் மாநில எதிர்க் கட்சி அரசியல்வாதிகள் சிலர் கூறிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

## இடைத்தேர்தல் முடிவு நாளை

சென்னை, நவ.21

தமிழகத்தில் தஞ்சை, திருப்பரங்குன்றம், அரவக்குறிச்சி புதுவையில் நெல்லித்தோப்பு ஆகிய நான்கு தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் வாக்குப் பதிவு நேற்று முன்தினம் மாலை 5 மணியுடன் நிறைவு பெற்றது. இதன் முடிவுகள் நாளை அறிவிக்கப்படவுள்ளன.

தேர்தல் நடைபெற்ற 4 தொகுதிகளில் பதிவான வாக்குப்பதிவு விவரம் வருமாறு;

தஞ்சாவூர்- 69.02%, திருப்பரங்குன்றம்- 70.19%, அரவக்குறிச்சி- 81.92%, நெல்லித்தோப்பு-85.76%

எந்த தொகுதியிலும் பெரிய அளவிலான அசம்பாவிதங்கள் இன்றி அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடைபெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மக்கள் எந்தவித பிரச்சினையுமின்றி அமைதியான முறையில் வாக்களிக்க ஏதுவாக பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

வாக்குப் பதிவு நிறைவு பெற்றதை அடுத்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் 'சீல்' வைக்கப்பட்டு வாக்கு எண்ணிக்கை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டன.

தேர்தல் முடிவுகள் நாளை அறிவிக்கப்படவுள்ளன. (ஏ)

# மூன்றாவது வல்லரசு நாடாக உருவாகிறது பாகிஸ்தான்!

## அமெரிக்கா தகவல்

வொஷிங்டன், நவ.21
உலகின் மூன்றாவது வல்லரசாக பாகிஸ்தான் உருவாகி வருகின்றது என்று அமெரிக்கா தகவல் வெளியிட்டுள்ளது .

பாகிஸ்தான் தனது அணு ஆயுத அளவை 130-140 ஆக விரிவுபடுத்தி உள்ளதாக அமெரிக்கா அறிக்கை வெளியிட்டுள்ளது.

அமெரிக்க அணு ஆயுத விஞ்ஞானிகளான ஹன்ஸ் எம் கிறிஸ்டன்சன், ரோபர்ட் எஸ் நோரீஸ் ஆகியோர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

'பாகிஸ்தான் தனது அணு ஆயுத அளவை 130-140 ஆக விரிவுபடுத்தி உள்ளது.

அவற்றில் சிலவற்றை போர் ஜெட்களாகவும் மாற்றி வருகிறது. பாகிஸ்தானின் இராணுவ முகாம்கள் மற்றும் விமானப்படைத் தளங் களின் செயற்கைக்கோள் படங் களை ஆய்வு செய்ததில் இது உறுதி செய்யப்பட்டுள்ளது.

3 ஆவது பெரிய நாடாக பாகிஸ்தான், போர் ஆயுத உற்பத்தியையும் அதிகரித்து வருகிறது. அமெரிக்காவின் பாதுகாப்பு உளவுத்துறை 1999 ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் 2020ஆம் ஆண்டில் பாகிஸ்தானின் அணு ஆயுத எண்ணிக்கை 60 - 80 ஆக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போதே 130 - 140 அணு ஆயுதங்களைப் பாகிஸ்தான் வைத்திருக்கின்றது. அடுத்த 10 ஆண்டுகளில் மேலும் அதிகப்படுத்த வாய்ப்புள்ளது. இதே நிலை தொடர்ந்தால் அணு ஆயுதம் வைத்திருக்கும் உலகின் 3 ஆவது பெரிய நாடாக பாகிஸ்தான் உருவாகும். கடந்த 20 ஆண்டுகளில் மட்டும் பாகிஸ்தானின் அணு ஆயுத உற்பத்தி மற்றும் சேமிப்பு 2-3 மடங்காக மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது'- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# 'பீப்பாய்க்' குண்டு தாக்குதல்; அப்பாவி மக்கள் 27 பேர் சாவு!

டமாஸ்கஸ், நவ.21
உள்நாட்டுப் போரால் உருக்குலைந்துப் போயுள்ள சிரியாவின் அலெப்போ நகரில் போராளிகள் வசமுள்ள கிழக்கு பகுதியைக் கைப்பற்றுவதற்காக அரச படைகள் நேற்றுமுன்தினம் நடத்திய 'பீப்பாய் குண்டு' தாக்குதலில் அப்பாவி மக்கள் 27 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவில் போராளிகள் மற்றும் ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் உள்ள சில முக்கிய பகுதிகளை மீண்டும் கைப்பற்றும் நடவடிக்கைகளை அரச படைகள் தீவிரப்படுத்தி வருகின்றன.

சிரியாவின் இரண்டாவது பெரிய நகரமான அலெப்போவைக் கைப்பற்ற அந்த நாட்டு ஜனாதிபதி அல் ஆசாத் தலைமையிலான படைகள் உச்சக்கட்டப் போரில் ஈடுபட்டு வருகின்றன.

போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ள அலெப்போ நகரின் கிழக்குப் பகுதியை மீட்பதற்காக

அலெப்போ நகரை கைப்பற்றும் சமரில்!!



கடந்த ஒருவார காலமாக அரச படைகள் தீவிரமாகத் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில், நேற்று முன்தினம் அந்த நாட்டின் விமானப்படைகள் பீப்பாய் குண்டுகள் மற்றும் வெடி குண்டுகளை வீசி நடத்திய தாக் குதலில் அப்பாவிப் பொது மக்கள் 27 பேர் உயிரிழந்தனர் என்று அங்குள்ள மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித் துள்ளது.

கடந்த 5 தினங்களாகத் தொடர்ந்து நடைபெற்றுவரும் இதுபோன்ற தாக்குதல்களில் 92 பேர் பலியாகினர் என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (எ)

# முதலாவது செயற்கை இதய மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் சாவு



ஹுஸ்டன், நவ.21
உலகின் முதலாவது செயற்கை இதய மாற்று அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்த நிபுணர் டென்டன் கூலி (வயது96) அமெரிக்காவில் காலமானார். அவரது மனைவி லூயிஸ் சில வாரங்களுக்கு முன்னர் தனது 92 ஆவது வயதில் இயற்கை எய்தினார்.

1920 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 22 ஆம் திகதி அமெரிக்காவின் டெக்ஸாஸ்மாகாணம், ஹுஸ்டன் நகரில் பிறந்த டென்டன் ஆர்தர் கூலி, ஆஸ்டினில் உள்ள டெக்ஸாஸ் பல்கலைக்கழகத்தில் விலங்கியல் பட்டப்படிப்பை முடித்தார்.

பின்னர் அறுவைச் சிகிச்சை மருத்துவத்தில் ஆர்வம் கொண்ட இவர் ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தில் மருத்துவம் பயின்றார்.


உலகின் முதலாவது செயற்கை இருதய மாற்று அறுவை சிகிச்சையை 1969 ஆம் ஆண்டு இவர் வெற்றிகரமாகச் செய்துள்ளார்.

இருதய அறுவைச் சிகிச்சையின் முன்னோடி என்று பெயர்பெற்ற அவர் கடைப்பிடித்த நுட்பமுறைகளே இன்றுவரையும் பல்வேறு இதய நிபுணர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. டென்டன் கூலி மற்றும் அவரது தலைமையிலான மருத்துவர் குழு ஒரு லட்சத்து 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இதய அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக மேற்கொண்டு சாதனை படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (எ)



ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கும் மலேசியப் பிரதமர் நஜிப் ரசாக்கை பதவி விலகக்கோரி அந்தநாட்டின் முதுபெரும் தலைவர் மஹதிர் முஹம்மது தலைமையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பேரணியாகச் சென்று தலைநகர் கோலாலம்பூரில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது மஞ்சள் நிற ஆடைகள் அணிந்து ஆயிரக்கணக்கானவர்கள் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

# ஜனாதிபதி ட்ரம்ப் மனைவிக்கு ஆடை வடிவமைக்க மறுத்த பிரான்ஸ் நிபுணர்



வொஷிங்டன், நவ.21
அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மனைவி மெலானியாவுக்கு ஆடை வடிவமைக்க பிரான்ஸ் நிபுணர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப்பின் மனைவி மெலானியா (வயது 45) முன்னாள் மொடல் அழகி. இவர் மிச்செல் ஒபாமாவுக்கு அடுத்தபடியாக அமெரிக்காவின் முதலாவது பெண்ணாக இருக்கிறார். பொதுவாக அமெரிக்க ஜனாதிபதியின் மனைவிக்கு அந்த நாட்டு ஆடை வடிவமைப்பாளர்கள் புதுவிதமான நாகரிக உடைகளை வடிவமைத்துத் தந்து பெரும் புகழ் பெறுவார்கள்.

அந்தவகையில்தற்போதைய முதல் பெண்மணி மிச்செல் ஒபாமா, முன்னாள் ஜனாதிபதியின் மனைவியும் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சருமான ஹிலாரி கிளிண்டன் ஆகியோரும் அமெரிக்காவின் முன்னணி ஆடை வடிவமைப்பாளருமான ஷோபி தெலாட் (வயது 52) தயாரித்து வழங்கியுள்ளார். இவர் பிரான்ஸைச் சேர்ந்தவர். புதிய ஜனாதிபதி ட்ரம்பின் மனைவி மெலானியாவுக்கு ஆடை வடிவமைத்து தயாரித்துக் கொடுக்க அவர் மறுத்துள்ளார். தனது முடிவையே மற்றைய நிபுணர்களும் பின்பற்ற வேண்டும் என்று கோரிக்கையும் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு;

'ஒருவருக்குஆடைதயாரித்துக் கொடுப்பது அவரது தனிப்பட்ட உரிமை மற்றும் சுதந்திரம். என்னைப் பொறுத்தவரை நான் ட்ரம்பின் மனைவி மெலானியாவுக்கு ஆடை தயாரித்து வழங்கமாட்டேன்.

ஏனெனில் தேர்தல் பிரசாரத்தின் போது அவரது கணவர் ட்ரம்ப் இனவெறி, பாலியல் பிரச்சினை, வெளிநாட்டினர் மீதான எதிர்ப்புக் கொள்கை என்பவற்றைக் கொண்டிருந்தார். என்னைப் பொறுத்தவரை எனக்கு பணம் முக்கியமல்ல'- என்றுள்ளது. இந்தக் கடிதம் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. (எ)

# உலகம் வெப்பமயம்; அமெ.தடுக்க வேண்டும்

## பிஜி தீவுகள் பிரதமர் கோரிக்கை

உலகம் வெப்பமயமாவதைத் தடுக்க அமெரிக்கா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜி தீவுகளின் பிரதமர் பிராங் பெயினிமரமா கோரிக்கை விடுத்துள்ளார்.

உலகம் வெப்பமயமாவதால் பசுபிக்தீவுகளுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்களைத் தவிர்க்க அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

மாராகெச்சில் நடைபெற்ற உலக காலநிலை மாநாட்டில் பங்கேற்றபோது பிஜி பிரதமர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.


இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

"இரண்டாம் உலகப் போரில் பசுபிக் தீவுகளுக்கு அமெரிக்கா வழங்கிய உதவியை தற்போதும் எதிர்பார்க்கின்றேன். அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறுவதைப் போன்று காலநிலை மாற்றம் பற்றிய தகவல்கள் பொய்யானவை அல்ல"- என்றார்.(எ)

# 4 ஆவது வாரமாக போராட்டம்

சியோல், நவ.21
தென்கொரிய ஜனாதிபதி பார்க் ஜியூன்-ஹை பதவி விலக வேண்டும் என்று கோரி, தொடர்ந்து நான்காவது வாரமாக நேற்றுமுன்தினம் சியோலின் வீதிகளில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டு வருகின்றனர். தென்கொரியாவின் பெண் ஜனாதிபதி பார்க் ஜியூன்-ஹையின் நண்பரும், ஆலோசகருமான கோல் ஒன்-சில் பல்வேறு முறைகேடுகள் மூலம் ஊழலில் ஈடுபட்டார் என்று முறைப்பாடு பெறப்பட்டது.


ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பயன்படுத்தி இவர் ஊழல் செய்தார் என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது. எனவே ஜனாதிபதி பார்க் தனது பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ)


மரநடுகை மாதத்தை முன்னிட்டு புங்குடுதீவு 'புங்கையின் புதிய ஒளி' என்னும் இளைஞர் அமைப்பால் பனம் விதைகள் அண்மையில் நடப்பட்டன.

இதனையடுத்து புங்குடுதீவு கண்ணகை அம்மன் மண்டபத்தில் மரம் நடுகை தொடர்பான விழிப்புணர்வும் வினா விடைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில் வழங்கலும் இடம்பெற்றன.


இந்த நிகழ்வில் வடமாகாண சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டார். (ஐ)



வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்தின் முன்னாள் தலைவர் காலஞ்சென்ற கலக் விசு வநாதனின் ஞாபகார்த்தமாக அவரின் . 6 ஆம் மாத நினைவாக, அந்த இந்து மயானத்தில் ஒரு தொகை பயன் தரும் மரக் கன்றுகள் நடப்பட்டன. இந்த மயானத்தின் தற்போதைய பொருளாளர் சி.ஶ்ரீஜீவா மேற்படி திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (ஐ-53)




குருநாகல் இந்து தமிழ் மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக சுப்பிரமணியம் ரமேஷ் நியமிக்கப்பட்டுள்ளார். 1969 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலையின் பத்தாவது அதிபரான இவர் அதே பாடசாலையினதும் யாழ். மத்திய கல்லூரியினதும் பழைய மாணவராவார். இலங்கை அதிபர் சேவையில் முதலாம் தரத்தைக் கொண்ட இவர் ஆசிரியராக, பிரதி அதிபராக, ஆசிரிய ஆலோசகராக பணியாற்றியுள்ளார். இவர் சிறந்த ஊடகவியலாளரும் விளையாட்டு வீரரும் மும்மொழி உரை பெயர்ப்பாளரும் ஆவார். புதிய அதிபரை பாடசாலைச் சமூகத்தினர் வரவேற்றபோது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம். (இ-30)



முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் சாதாரண தர மாணவர்களின் முன்னேற்றத்துக்கான பாடப் பயிற்சிப் பட்டறை 'உதவும் இதயங்கள்' நிறுவனத்தின் அனுசரணையில் முல்லை சிலாவத்தை வித்தியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இப்பயிற்சிப் பட்டறையில் கொக்குளாய் அ.த.க பாடசாலை, கொக்குத்தொடுவாய் அ.த.க பாடசாலை, செம்மலை மகா வித்தியாலயம், அளம்பில் மகா வித்தியாலயம், உடுப்புக்குளம் வித்தியாலயம், குமுழமுனை மகா வித்தியாலயம், சிலாவத்தை தமிழ் வித்தியாலயம், முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, முல்லைத்தீவு மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 165 மாணவர்கள் கலந்து கொண்டனர். (ஐ-10)



அவசிய தேவைகளை உடையவர்களை இனங்கண்டு தம்மால் ஆன உதவிகளை வழங்கும் நோக்கோடு வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தனது 2016 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியிலிருந்து கிளிநொச்சி, மாவட்டத்தைச் சேர்ந்த 3 பேருக்கு சைக்கிள்களை வழங்கியுள்ளார். கடந்த வியாழக் கிழமை மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (ஐ-81)



யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மற்றும் விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டிலும் வவுனியா பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டிலும் வவுனியா வாரிக் குட்டியூர் கணேஸ்வரா மகா வித்தியாலயத்தில் அண்மையில் ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்களுக்கான கருத்தமர்வு ஒன்று இடம்பெற்றது.

வவுனியா வாரிக்குட்டியூர், பூவரசங்குளம், தாலிக்குளம் ஆகிய பகுதி மாணவர்கள் பலர் இதில் பங்கு பற்றியிருந்தனர். தேசிய வளங்கள் இல்லாத நிலையில் தமது கல்வியைத் தொடரும் அந்தப் பிரதேச மாணவர்களுக்கு இந்தக் கருத்தமர்வு பெரும் வரப்பிரசாதமாகும். (இ-8)

# பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டி: நியூசிலாந்து 8 விக்கெட்டுக்களால் வெற்றி



கிறிஸ்ட்சர்ச், நவ.21

பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

நியூசிலாந்து – பாகிஸ்தான் அணிகள் மோதிய முதல் டெஸ்ட் போட்டி கிறிஸ்ட்சர்ச் நகரில் இடம்பெற்றது. பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸில் 133 ஓட்டங்களில் சுருண்டது. நியூசிலாந்து முதல் இன்னிங்ஸில் 200 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. 67 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2 ஆவது இன்னிங்ஸை விளையாடிய பாகிஸ்தான் நேற்று முன்தினம் 3 ஆவது நாள் ஆட்டத்தின் முடிவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 129 ஆட்டங்களை எடுத்து இருந்தது.


நேற்று 4 ஆவது நாள் ஆட்டம் நடந்தது. தொடர்ந்து விளையாடிய அந்த அணி 78.4 ஓவர்களில் 171 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதனால் நியூசிலாந்து அணிக்கு 105 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

பாகிஸ்தான் தரப்பில் சோகைல்கான் அதிகபட்சமாக 40 ஓட்டங்களை எடுத்தார். வாக்னர், போல்ட் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

105 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் நியூசிலாந்து 2 ஆவது இன்னிங்ஸை விளையாடியது. தொடக்க வீரர் வாதம் 9 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். 2 ஆவது விக்கெட்டான ராவல்– வில்லியம்சன் ஜோடி சிறப்பாக விளையாடி அணியை வெற்றி பெற வைத்தது. நியூசிலாந்து அணி 31.3 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 108 ஓட்டங்களை எடுத்து, 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. வில்லியம்சன் 66 ஓட்டங்களையும், ராவல் 36 ஓட்டங்களையும் (ஆட்டம் இழக்காமல்) எடுத்தனர்.

இந்த வெற்றி மூலம் 2 போட்டிகள் கொண்ட தொடரில் நியூசிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இரு அணிகள் மோதும் 2 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் எதிர்வரும் 25 ஆம் திகதி ஹேமில்டனில் ஆரம்பமாகவுள்ளது.

# 405 ஓட்டங்களை நோக்கி இங்கிலாந்து கிரிகெட் அணி



இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணிக்கு 405 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விசாகப்பட்டினத்தில் நடைபெறும் இந்த டெஸ்ட் ஆட்டத்தின் நான்காம் நாளான நேற்று ஆட்டம் முடிவடைந்த போது பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இனிங்ஸில் 2 விக்கெட் இழப்புக்கு 87 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆட்டத்தின் இறுதி நாளான இன்று இன்னும் 318 ஓட்டங்களைப் பெற வேண்டிய இக்கட்டில் இங்கிலாந்து அணி சிக்கியுள்ளது.

நேற்று தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை 3 விக்கெட் இழப்புக்கு 98 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆரம்பித்த இந்திய அணி சகல விக்கட்டுக்களையும் இழந்து 204 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டுள்ளது.

இந்திய அணி சார்பில் அணித்தலைவர் விராட் கோஹ்லி 81 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றுக்கொண்டார். பந்துவீச்சில் அடில் ரிஷாட் மற்றும் ஸ்டுவர்ட் போர்ட் தலா 4 விக்கட்டுக்களைக் கைப்பற்றினர்.

இந்நிலையில் இரண்டாவது இன்னிங்ஸ் ஆரம்பித்துள்ளது.

முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 455 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், இங்கிலாந்து அணி 255 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சீன ஓபன் சம்பியன் பட்டத்தை வென்றார் சிந்து



பீஜிங், நவ.21

சீன ஓபன் சூப்பர் சீரிஸ் பட்மின்டன் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் சீனாவின் சன் யூவை வீழ்த்திய இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை பி.வி.சிந்து சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.


இந்தியாவின் முன்னணி பட்மிண்டன் வீராங்கனையான பி.வி. சிந்து, ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்று இந்தியாவுக்கு பெருமை சேர்த்திருந்தார்.

இதையடுத்து, சீன ஓபன் போட்டியில் பங்கேற்று விளையாடிய சிந்து, மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் சீனாவின் ஹி பிங்ஜியாவோவை எளிதில் வென்று நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் கொரிய வீராங்கனை சங் ஜி யுன் ஐ எதிர்த்து விளையாடினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் சிந்து, 11-21, 23-21, 21-19 என்ற செட்கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

சாம்பியன் பட்டத்துக்காக நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில், சீனாவின் சன் யூ வை எதிர்த்து ஆவேசமாக மோதிய சிந்து 21-11, 17-21, 21-11 என்ற செட்கணக்கில் வெற்றிபெற்று சீன ஓபன் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

# செலிபிரட்டி கிரிக்கெட் லீக்கில் சங்கக்காரா



இந்தியாவின் சினிமா நட்சத்திரங்கள் பங்கேற்கும் செலிபிரட்டி கிரிக்கெட் லீக்கில் சங்கக்காரா உள்ளிட்ட முன்னணி கிரிக்கெட் வீரர்களும் பங்கேற்க உள்ளனர்.




இதேவேளை, சர்வதேச அளவில் ஓய்வு பெற்ற வீரர்கள் மட்டும் பங்கேற்கும், 'ஆல் ஸ்டார்' கிரிக்கெட் தொடர் அமெரிக்காவில் நடத்தப்பட்டது.

இதில் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் குமார சங்கக்காரா, இந்தியாவின் அதிரடி மன்னன் வோக், லாரா, முரளிதரன் என பல முன்னணி வீரர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் இந்திய சினிமா நட்சத்திரங்கள் பங்கேற்கும் செலிபிரட்டி கிரிக்கெட் லீக் தொடரில் ஓய்வு பெற்ற பல கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்க உள்ளனர்.

இத்தொடரில் ஜாகிர் கான், பிரைன் லாரா, காலிஸ், ஜாண்டி ரோட்ஸ், சைமண்ட்ஸ், டேனியல் வெட்டோரி, சங்கக்காரா,வோக் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த தொடர் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### ஸிம்பாப்வே, மேற்கிந்திய தீவுகள், இலங்கை அணிகளுக்கிடையிலான முத்தரப்புப் போட்டி:

# போராடி போட்டியை சமநிலைப் படுத்தியது ஸிம்பாப்வே!




புலவாயோ, நவ.21

ஸிம்பாப்வேயில் நடைபெற்று வரும் முத்தரப்பு ஒருநாள் தொடரில், தொடர்ந்தும் தனது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள வெற்றி பெற வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கிய ஸிம்பாப்வே அணி இறுதிவரை போராடி போட்டியைச் சம நிலைப்படுத்தி மேற்கிந்தியத் தீவுகள் அணியை அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸிம்பாப்வே அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. இதன்படி களமிறங்கிய ஸிம்பாப்வே அணி 50 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 257 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் ப்ரைன் சாரி (15) மற்றும் சம்மு சிபாபா (25) முதல் விக்கெட்டுக்காக 38 ஓட்டங்களை தமக்கிடையே இணைப்பாட்டமாகப் பகிர்ந்து கொண்டு சிறந்த ஆரம்பத்தினை ஸிம்பாப்வே அணிக்காக பெற்றுக்கொடுத்தனர். சம்மு சிபாபா 25 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை துரதிஷ்டமாக ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

மூன்றாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த கிரேக் எர்வின் மற்றும் சிக்கந்தர் ராசா தங்களுக்கிடையே 144 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்று ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். கிரேக் எர்வின் 6 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 92 ஓட்டங்களையும், சிக்கந்தர் ராசா 7 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 77 ஓட்டங்களையும் பெற்றனர். எனினும் ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாகப் பந்து வீச்சில், கார்லோஸ் பரத்வைட் 48 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் தான் வீசிய சிறந்த பந்து வீச்சாகப் பதிவு செய்து கொண்டார். ஷெனனோன் கப்ரியல் மற்றும் ஜேசன் ஹோல்டர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்த, ஆஷ்லி நர்ஸ் 55 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினை மாத்திரமே பெற்றுக்கொண்டார்.

258 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப் பாட்டத்தை ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக களமிறங்கிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்க ளான ஜோன்சன் சார்ல்ஸ் மற் றும் கிரேக் பரத்வைட் முதல் விக்கெட்டுக்காக 33 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றிருந்த வேளை ஜொன்சன் சார்ல்ஸ் 19 ஓட்டங்களுக்கு டொனல்ட் திரிபனோவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து சென்றார்.

இரண்டாம் விக்கெட்டுக்காக எவின் லுவிஸ் அதிரடியாக 17 பந்துகளில் 18 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டாலும் ஸிம்பாப்வே அணித்தலைவர் கிராம் கிரிமரின் பந்து வீச்சில் சம்மு சிபாபாவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் துடுப்பாடிக் கொண்டிருந்த கிரேக் பரத்வைட்டுடன் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த ஷாய் ஹோப் இருவரும் நிதான ஆட்டத்தினை வெளிப்படுத்தி 162 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றதோடு மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். சிறப்பாகத் துடுப்பாடிய ஷாய் ஹோப் தனது முதலாவது கன்னிச் சதத்தினை பெற்றுக் கொண்டார். எனினும் 120 பந்துகளில் 101 (4 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள்) ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை துரதிஷ்டமாக கிரீஸ்ஸின் பந்து வீச்சில் விக்கெட் காப்பா ளரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

வெற்றி பெறும் வாய்ப்புக்கு மிக அருகில் வந்திருந்த நிலையில் கிரேக் பரத்வைட் துரதிஷ்டமாக 78 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது வில்லியம்சின் பந்து வீச்சில் எர்வினிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய துடுப்பாட்ட வீரர்கள் ஸிம்பாப்வே அணியின் அதிரடிக் களத்தடுப்பில் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து சென்றனர்.

இறுதி ஓவரின் போது, மேற்கிந்தியத் தீவுகள் அணி 255 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 6 பந்துகளுக்கு 4 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இருந்தது. ஸிம்பாப்வே அணி மிகச் சிறப்பாகப் பந்து வீசியும், களத்தடுப்பில் மாற்றங்களை செய்தும் குறிப்பிட்ட ஓவரில் வெறும் 3 ஓட்டங்களைக் கொடுத்து, அதிரடியாக மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தி போட்டியைச் சமநிலைப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி, 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 257 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டதால் போட்டி சமநிலையில் முடிவுற்றது.

ஸிம்பாப்வே அணி சார்பாகப் பந்து வீச்சில் டொனல்ட் திரிபனோ மற்றும் சோன் வில்லியம்ஸ் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக ஷாய் ஹோப் தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை மற்றும் ஸிம்பாப்வே அணிகளுக்கிடையிலான நான்காவது போட்டி இன்று புலவாயோவில் நடைபெறவுள்ளது.

## 22 ஆவது முறையாக 5 விக்கெட்டுகள்; அஸ்வினின் புதிய சாதனை




விசாகப்பட்டினம், நவ.21

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஆர்.அஷ்வின் டெஸ்ட் போட்டிகளில் 22ஆவது முறையாக 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி பாகிஸ்தான் வீரர் வக்கார் யூனிஸ், மால்கம் மார்ஷல், கார்ட்லி அம்புரோஸ், கோர்ட்னி வால்ஷ் (மேற்கிந்தியத் தீவுகள்) ஆகியோரது சாதனையை சமன் செய்துள்ளார்.

அவர் தனது 41 ஆவது டெஸ்ட் போட்டியிலேயே இந்த மைல்கல்லை எட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. உலக அளவில் மொத்தம் 14 பந்துவீச்சாளர்கள் இதில் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்தியப் பந்து வீச்சாளர்களில் அனில் கும்ப்ளே (132 டெஸ்டில் 35 முறை), ஹர்பஜன் சிங் (103 டெஸ்டில் 25 முறை), கபில்தேவ் (131 டெஸ்டில் 23 முறை) ஆகியோர் அஷ்வினைவிட அதிக முறை 5 விக்கெட்டுக்களை வீழ்த்தி உள்ளனர். இவர்கள் அனைவரின் சாதனையையும் அஷ்வின் முறியடிப்பார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.



## ஜோகோவிச் – நிஷிகோரி அரை இறுதியில் மோதல்

லண்டன், நவ.21

உலக ஆண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டித் தொடரின் அரை இறுதியில் செர்பியாவின் நோவாக் ஜோகோவிச்சுடன் ஜப்பான் வீரர் கெய் நிஷிகோரி மோதுகிறார்.

தரவரிசையில் முன்னிலையில் உள்ள வீரர்கள் மட்டுமே பங்கேற்கும் ஏ.டி.பி. உலக சுற்றுலா இறுதிச் சுற்று என்று அழைக்கப்படும் ஆண்கள் டென்னிஸ் சாம்பியன் ஷிப் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது.

ஜோன் மெக்கன்ரோ பிரிவில் இங்கிலாந்தின் அண்டி மூர்ரே 3 போட்டிகளிலும் வென்று முதலிடம் பிடித்து அரை இறுதிக்குத் தகுதி பெற்றார். வாவ்ரிங்கா (சுவிஸ்), நிஷிகோரி, மரின் சிலிச் (குரோஷியா) ஆகியோர் தலா 1 வெற்றி, 2 தோல்வி கண்டனர். மூவரும் சமநிலை வகித்ததால், ஒவ்வொரு செட்டிலும் வென்ற போட்டிகளின் சராசரி அடிப்படையில் முன்னிலை வகித்த நிஷிகோரி 2 ஆவது இடம் பிடித்து அரை இறுதிக்கு முன்னேறினார்.

இவான் லெண்டில் பிரிவில் ஜோகோவிச் 3 வெற்றிகளுடன் முதலிடம் பிடித்தார். கனடா வீரர் மிலோஸ் ரயோனிச் 2 ஆவது இடம் பிடித்தார் (2 வெற்றி, 1 தோல்வி). இதையடுத்து முதலாவது அரை இறுதியில் அண்டி முர்ரே (1) மிலோஸ் ரயோனிச் (4), 2 ஆவது அரை இறுதியில் நோவாக் ஜோகோவிச் (2) கெய் நிஷிகோரி (5) மோதுகின்றனர்.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்குஅவர்மேலும்கூறியவை வருமாறு:-

தம்பி ரவிராஜ் கொலை செய்யப்பட்டு பத்து வருடங்களாகி விட்டன. அந்தக் கொலை ஏன் செய்யப்பட்டது, யாரால் செய்யப்பட்டது என்பது தொடர்பில் ஒரு தெளிவற்ற நிலைமை இன்னும் தொடருகின்றது. அவர் கொலை செய்யபட்டு இரண்டொரு மணித்தியாலயங்களுக்குப் பிறகு, அப்போது ஜனாதிபதியாகவிருந்த மஹிந்த ராஜபக்ஷ தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொண்டு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தார்.

"நீங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து என்ன பிரயோசனம்? அவர் கொலை செய்யப்பட்டிருக்கின்றார். இது ஏன் இப்படி நடந்தது? யார் கொலை செய்தார்கள்?" – என்று நான் அவரிடம் கேட்டேன். அவரால் பதில் சொல்ல முடியவில்லை.

ரவிராஜினுடைய பூதவுடல் மரணசாலைக்குக் கொண்டு வரப்பட்ட பிறகு, என்னுடன் அவர் தொடர்புகொண்டு " என்னால் வரக் கஷ்டமாக இருக்கின்றது. சில, பல காரணங்களால் என்னால்வரமுடியாதுள்ளது. ஆனால் ரவிராஜ்க்கு அஞ்சலி செலுத்துவதற்கு என் மனைவியை நான் அனுப்புகிறேன்." – என்று எனக்கு அறிவித்தார்.

ரவிராஜ் அரசியல் காரணங்களுக்காகத்தான் கொலை செய்யப்பட்டார். அவருக்குத்தனிப்பட்ட முறையில் யாரும் எதிரிகளாக இருக்கவில்லை. அவர் எவரையும் புண்படுத்தவில்லை.

அரசியல் ரீதியாக மிகவும் நிதானமாகச் செயற்பட்டார். எமது மக்களின் உரிமைகளைப் பொறுத்தவரை அவர் மிகவும் உறுதியான நிலையில் இருந்தார். அது மட்டுமல்ல, எமது மக்களின் உரிமைப் பிரச்சினைக்கு ஒரு நியாயமான, நிரந்தரமான தீர்வு வருவதாக இருந்தால், அந்தக் கருமத்தில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிங்கள மக்களும் பங்காளிகளாக இருக்க வேண்டும் என்று அவர் கருதினார்.

### சிங்கள மக்களுக்கு புரிய வைத்தார்

ஒரு புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கி, அவ்விதமான தீர்வை நாங்கள் காண்பதாக இருந்தால் அத்தகைய பங்களிப்பு அவசியம் என்பதை உணர்ந்திருந்தார். அந்தக் கருமத்தின் நிமித்தம், விசேடமாகத் தொலைக்காட்சி மூலம் பல்வேறு விவாதங்களில் ஈடுபட்டார். தமிழ் மக்களின் உரிமைகள் சம்பந்தமாக சிங்கள மக்களுக்கு எடுத்து விளக்கி, நாங்கள் அவர்களுடைய எதிரிகள் அல்லர், நாங்கள் அவர்களுடைய சகோதரர்கள், நண்பர்கள், ஒரே நாட்டில் வாழ்கின்றவர்கள், உங்களுடைய உரிமைகளை நாங்கள் பறிக்க முயற்சிக்கவில்லை, உங்களுக்கு இருக்கின்ற உரிமைகள் எங்களுக்கும் இருக்க வேண்டும், நாங்கள் இந்த நாட்டில் சக பிரஜைகளாக வாழ்வதாக இருந்தால் அது அவசியம் என்ற கருத்தை தெளிவாக, ஆக்கபூர்வமாக, அவர்களை (சிங்களமக்களை) வெல்லக்கூடிய வகையில், அவர்களுக்கு முன்னால்வைத்து, அவர்கள்சிந்தனையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி, எமதுமக்களின்பிரச்சினைகளை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு ஒரு வழியை அமைப்பதில் அவர் மிகவும்தீவிரமாகச்செயற்பட்டார்.

அந்தப்புனிதமான கடமையை நிறைவேற்றிய காரணத்தின் நிமித்தம்தான் அவர் கொலை செய்யப்பட்டார் என்பது ஒரு கருத்து. அந்த காரணத்துக்காக அவர் கொலை செய்யப்பட்டிருந்தால் அதற்கு ஓர் அரசியல் பின்னணி இருக்கின்றது.

ரவிராஜ் தமிழ் மக்களுடைய அன்பைப் பெற்றிருந்தார். தமிழ் மக்களுடைய ஆதரவைப்பெற்றிருந்தார்.

அவர் இறப்பதற்கு முதல் நாள் நாங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்துக்குமுன்னால் ஒரு போராட்டம் நடத்தினோம். அப்போது கிழக்கில் உக்கிரமான யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒரு தாக்குதலில் ஏறத்தாழ நாற்பது, ஐம்பது பொதுமக்கள் கொலை செய்யப்பட்டிருந்தார்கள். அதன் காரணமாகத்தான் அந்தப் போராட்டம் நடைபெற்றது. அன்று காலை நாங்கள் தயாரித்திருந்த மகஜரை ரவிராஜ் பல விதங்களில் திருத்தி, என்னுடன் தொலைபேசியில் பேசி, அந்தப் போராட்டத்தை நாங்கள் நடத்தினோம். தம்பி ரவிராஜும் நானும்தான் ஒன்றாக அலுவலகத்துக்குள் சென்று அந்த மகஜரை ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதியிடம் கையளித்தோம்.

எமது மக்களுடைய உரிமைகளைப் பொறுத்தவரை, எமது மக்களின் தேவைகளைப் பொறுத்தவரை அவர் மிகவும் கடமையுணர்வுடன்செயற்பட்டார்.

### துணிச்சல் மிக்கவர்

எனக்கு நன்றாக நினைவு இருக்கின்றது. வடக்கு மாகாணத்தில் கடுமையான யுத்தம் நிகழ்ந்த போது – மக்களுக்குப் பல விதமான கஷ்டங்கள் ஏற்பட்ட போது – இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த ஒரு மூத்த ஊடகவியலாளரான குல்தீப் நாயருடன் எமக்கு சந்திப்பு நடந்தது. அந்தச் சந்திப்பில் தம்பி ரவிராஜ் அவர்களும் பங்குபற்றினார். அடுத்த நாள் காலை தாம் யாழ்ப்பாணம் போகின்றார் என்றும் தான் போய் தனது மக்களைப் பார்க்க வேண்டும் என்றும், மக்களுக்கு பலவிதமான உணவுப் பொருட்களைத் தாம் எடுத்துக் செல்கின்றார் என்றும் அவர் சென்னார். அதில் அவர் மிகவும் ஆர்வமாக இருந்தார்.

அப்போது நான் "ரவி நீங்கள் போவது – இப்போது போவது – பாதுகாப்பானதாக இருக்குமா? கொஞ்சம் யோசித்துப் போங்கள்" – என்று நான் சொன்னேன்.

" இல்லை. இல்லை நான் கட்டாயம் போகத்தான் வேண்டும்" என்றார் அவர். கடைசியில் போய் விட்டுத்தான் வந்தார்.

அந்த வகையில் அவர் தமது கடமையைச் செய்வதில் பின் நிற்கவில்லை. எதைக் செய்ய வேண்டுமோ அதைச் செய்தார். எந்தக் காரணம் நிமித்தமும் தமது கடமையில் தவறாதவராக அவர் இருந்தார்.

### சிங்களத் தலைவர்களும் அவரை மதித்தனர்

அவருக்குச் சிங்கள மக்கள் மத்தியில் மாத்திரமல்ல, சிங்களத் தலைவர்கள் மத்தியிலும் பெரும் மதிப்பு இருந்தது. சில தலைவர்களை நான் சந்தித்தபோது பல தடவைகள் அவர் என்னுடன் வந்திருக்கின்றார். மிக நிதானமாக, பக்குவமாக நடந்து கொள்வார்.

எங்களுடைய மக்களுடைய பிரச்சினைக்கான நியாயமான, நிரந்தரமான தீர்வை – என்ன நடைபெற்றாலும் – இறுதியில் சமாதானமாக, பேச்சு மூலமே காணலாம், அந்த முயற்சியை நாங்கள் கைவிடக்கூடாது, அந்த முயற்சியில் நாம் தீவிரமாகச் செயற்படவேண்டும் என்ற கருத்தில் அவர் மிகவும் உறுதியாக இருந்தார்.

தற்போது அவர் உயிருடன் இருந்திருந்தால் அது பாரிய பங்களிப்பாக இருந்திருக்கும். அவரது இறப்பு தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்த வரையிலும் பாரிய இழப்பாகக் கருகிறேன். அவரது குடும்பத்தினருக்கும் பாரிய இழப்பாக கருதுகிறேன். இந்த நினைவுக் கூட்டத்தில் கலந்துகொண்டமைக்குத் திருப்தியடைகின்றேன்.

### முக்கிய காலகட்டம்

இன்று முக்கிய காலகட்டத்தில் நாங்கள் இருக்கின்றோம். நீண்ட காலமாக கிடைக்கப்பெற முடியாத எமது பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தற்போது ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் உருவாகியுள்ளது.

நீண்ட காலமாகக் கிடைக்கப் பெறமுடியாத – எமது பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான – சந்தர்ப்பம் இப்போது எமக்கு கிட்டியிருக்கின்றது.

அந்தத் தீர்வினை அடைவதற்கு நாங்கள் மிக விரைவானதும் கடினமானதுமான பயணத்தை முன்னெடுக்க இருக்கும். 2105 ஆம் ஆண்டு ஜனநாய ரீதியாக ஏற்பட்ட மாற்றம் அரசியல் தீர்விற்கான சந்தர்ப்பமாக உருவாகியுள்ளது.

அரசியல் சாசனம் சம்பந்தமாக 6 உப குழுக்கள் நியமிக்கப்பட்டு அரசியல் சாசன சபை உருவாக்கப்பட்டு அரசியல் தீர்வு சம்பந்தமான கருமங்களை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் பிரதமர் தலைமையில் ஆராயப்பட்டு வருகின்றன.

சில விடயங்கள் முழுமையாக ஆராயப்படவில்லை. சில கருமங்கள் ஆராயப்படவில்லை. அவை பிறகு ஆராயப்படுமென நினைக்கின்றேன். பலவிடயங்கள் குறித்து இன்னும் இறுதி முடிவுகள் எடுக்கப்படவில்லை. பல விடயங்கள் இன்னும் சேர்க்கப்படவில்லை. சேர்க்கப்படவேண்டும் என எதிர்பார்க்கிறோம். ஆனால் ஆக்கபூர்வமான பேச்சுக்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்தப் பேச்சுக்களில் பல கட்சியைச் சேர்ந்தவர்கள் பங்குபற்றி வருகின்றார்கள்.

ஐ.தே.க., ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி, ஏனைய முஸ்லிம் கட்சிகள், மலையகக் கட்சிகள் அனைவரும் ஆக்கபூர்வமாக முழு அரசியல் சாசனத்தினை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில் ஒருமித்துச் செயற்பட்டு வருகின்றோம். மஹிந்தராஜபக்ஷவின் எதிரணியினரும் அந்தக் குழுவில் பங்காளிகளாக இருக்கின்றார்கள். அவர்களின் நிலைப்பாட்டினை 14 அம்சங்கள் அடங்கிய அறிக்கையாக முன்வைத்துள்ளனர். அவர்கள் பேச்சுக்களில் பங்குபற்றுகின்றனர். காலப்போக்கில் அவர்களின் நிலைப்பாடு என்னவாக இருக்கும் என்பது எமக்குத் தெரியவில்லை.

எதிர்ப்பு இல்லாமல் இல்லை. இன்னும் எதிர்ப்புகள் ஏற்படவாய்ப்புகள் இருக்கின்றன. இவற்றைக் குழப்புவதற்கு சில, பல முயற்சிகள் நாட்டில் நடைபெறுகின்றன.

தற்போதைய மாற்றங்கள், தற்போதைய நிலைமை எமது பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய வகையில் புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கக்கூடிய சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தி தந்துள்ளன. அந்தச் சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களை இழந்துள்ளோம். – சுதந்திரத்துக்கு முன்பும் சுதந்திரத்துக்குப் பின்பும்.

சுதந்திரத்துக்கு முன்பாக டொனமூர் ஆணைக்குழுவுக்கு முன்னாலும், சோல்பரி ஆணைக்குழுவுக்கு முன்னாலும், கண்டிய சிங்களத் தலைவர்கள் சென்று இந்த நாட்டில் ஒரு சமஷ்டி ஆட்சி ஏற்படவேண்டும் என்று கேட்ட போது அதை நாம் ஆதரிக்கவில்லை. டொனமூர் ஆணைக் குழுவுக்கு முன்னால் நாங்கள் பூரண சுயராஜ்யம் கேட்டோம். ஒரு சமஷ்டி ஆட்சி முறைமையை நாம் ஆதரிக்கவில்லை.

அம்மையார் சந்திரிகா பண்டார நாயக்காவின் அரசில் ஒரு சந்தர்ப்பம் இருந்தது. – ஓர் அரசியல் தீர்வை ஏற்படுத்துவதற்கு. ஆனால் துரதிஷ்டவசமாக அரசிடம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருக்கவில்லை. அந்தச் சந்தர்ப்பம் நழுவிப் போய்விட்டது. அது யுத்தம் நடத காலம். அந்தக் காலத்தில் நாங்களும் ஆக்கபூர்வமாக நடந்து கொண்டோம் என்று நாங்கள் சொல்ல முடியாது.

### ரணிலின் காலத்தில்

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது 2002 மார்கழி மாதம் ஒஸ்லோ பிரகடனம் செய்யப்பட்டது. உள்ளக சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில் நாங்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த பிரதேசங்களுக்கு சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வை ஆராய்வது என்று முடிவெடுக்கப்பட்டு, அது அறிக்கையாக அந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டது. ஆனால் அந்த முயற்சி ஆக்கபூர்வமாகத் தொடரப்படவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தையும் நாங்கள் இழந்தோம்.

அதற்குப் பிறகு மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் அவர் சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்துவதற்காக சில, பல வாக்குறுதிகளைக் கொடுத்திருந்த போதிலும் கூட, நாங்கள் அவருடன் பேசி இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமாகச் செயற்பட்ட போதிலும் கூட, முன்னேற்றகரமாக எதுவும் நடைபெறவில்லை. எங்களை ஏமாற்றுவதற்கும், ஒரு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு எங்களை அழைத்துத் தாம் ஏதோ ஆக்கபூர்வமாகச் செயற்படுகிறார் எனக்காட்டுவதற்கும் கடும் முயற்சி எடுத்தார். அது கைகூடவில்லை. நாங்கள் ஏமாற்றப்பட வில்லை. ஆனால் அரசியல் தீர்வு சம்பந்தமாக எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை.

### மீண்டும் சந்தர்ப்பம்

நீண்ட காலத்துக்குப் பிறகு தற்போது ஒரு சந்தர்ப்பம் வந்திருக்கின்றது.

எல்லாம் முடிந்து விட்டது என நாங்கள் சொல்லமுடியாது. ஆனால் ஒன்றும் நடைபெறவில்லை என்றும் நாங்கள் சொல்ல முடியாது.

அரசியல் தீர்வு சம்பந்தமாக ஜனாதிபதியும் பிரதமரும் – இந்தக் கருமத்தை நிறைவேற்றுவதற்காக செயற்படுகின்ற பல்வேறு குழுக்கள், நடவடிக்கைக் குழு, உப குழுக்கள், நிபுணர் குழுக்கள், தயாரிப்புக் குழுக்கள் எல்லோரும் – உறுதியுடன் செயற்பட்டுக் கொண்டு வருகின்றார்கள்.

அடுத்த வாரத்தில் கூட நான்கு, ஐந்து கூட்டங்கள் நடைபெற விருக்கின்றன.

எதிர்வரும் 10ஆம் திகதி நடவடிக்கைக் குழுவினது ஓர் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படலாம் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

ஜனவரி 9,10,11ஆம் திகதி தற்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற உப குழுக்களின் அறிக்கையின் அடிப்படையிலும் நடவடிகக குழுவினது இடைக் கால அறிக்கையினது அடிப்படையிலும் அரசமைப்பு சபையில் ஒரு விவாதம் நடைபெறும். தேவையாக இருந்தால் அந்த விவாதம் தொடரும்.

இந்தத் திட்டம் தெரியவந்த பிறகு இந்தக் கருமங்களில் எமது மக்களும் பங்குகொள்ள வேண்டும். எல்லோருடைய கருத்தையும் நாம் அறிய விரும்புகின்றோம். எவருடைய கருத்தையும் நாம் உதாசீனம் செய்ய மாட்டோம்.

ஆகையால் இலங்கையில் அரசியல் தீர்வு சம்பந்தமாக நீண்ட காலமாக பல முயற்சிகள் நடைபெற்று வந்திருக்கின்றன. இது ஒரு புதுவிடயமல்ல.

பல அறிக்கைகள், பல சிபார்சுகள், பல நிபுணர் குழுக்களின் அறிக்கைகள் எல்லாம் எமது அரசியல் முயற்சி வரலாற்றில் பலரால் செய்யப்பட்ட பங்களிப்புகள் எல்லாம் பதியப்பட்டிருக்கின்றன. பல்வேறு நாடுகளில் அரசியல் தீர்வு சம்பந்தமாக

பல்வேறு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. ஐரோப்பாவில், அமெரிக்காவில், ஆசியாவில், ஆபிரிக்காவில், ஆஸ்திரேலியாவில் எமது அரசியல் தீர்வு சம்பந்தமாக பல்வேறு ஒழுங்குகள் இருக்கின்றன. பல்வேறு நாடுகளில் பல்வேறு உதாரணங்கள் இருக்கின்றன.

ஐக்கிய இராஜ்ஜியத்தில் கூட ஒரு காலத்தில் ஒற்றையாட்சி முறையில் ஆட்சி நடைபெற்றது. எல்லா அதிகாரமும் வெஸ்ட்மினிஸ்டரில் தங்கியிருந்தது. இன்றைக்கு நிலைமை மாறி ஸ்கொட்லாந்திலும், வட அயர்லாந்திலும் தனிப்பட்ட சட்ட சபைகள், தனிப்பட்ட அமைச்சுச் சபைகள், தனிப்பட்ட அதிகாரங்கள் நிலவி அந்த மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய நிலை இருக்கிறது.

எல்லாம் முடிந்து விட்டது என எண்ணாமல், கருமத்தில் வெற்றி கொள்வது என்றால் அந்தக் கருமத்தில் நாங்களும் நிதானமாகச் செயற்பட வேண்டும். நம்பிக்கையுடன் நிதானமாகச் செயற்படாது விடின் எதையும் அடைய முடியாது.

"நாங்கள் ஏமாற்றப்பட்டோம். இனியும் ஏமாற்றப்படுவோம். இதில் ஒரு பிரயோசனமும் இல்லை." – என்று நாம் எண்ண முடியாது.

இந்த நாட்டில் இன்று ஒரு தீர்வு தமிழர்களுக்கு மட்டும் தேவையானது அல்ல. இந்த நாட்டுக்கும் அது தேவையானது.

இது தவிர தனது கடன் சுமையிலிருந்து மீட்கப்பட்டு, பொருளாதாரத்தை கட்டி எழுப்பி, இந்த நாடு முன்னேறுவதாக இருந்தால் ஓர் அரசியல் தீர்வு அரசுக்கு மாத்திரமல்ல, இந்த நாட்டில் வாழும் சகல மக்களுக்கும், பெரும்பான்மை மக்களுக்கும் முக்கியமான தேவை.

### சர்வதேச ஆதரவு

இந்த நாடு, மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலிருந்து மீட்கப்படவேண்டுமாக இருந்தால் ஓர் அரசியல் தீர்வு இந்த நாட்டுக்குத் தேவை.

மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். நீதி வழங்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

இவ்விதமான சம்பவங்கள் இனிமேல் இடம்பெறாது இருக்க ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவையெல்லாம் நிறைவேற்றப்படுவதாக இருந்தால் – இவை எல்லாவற்றையும் நிறைவேற்றக் கூடிய வல்லமையை இலங்கை அரசு பெறுவதாக இருந்தால் – ஓர் அரசியல் தீர்வு எமக்கு மட்டுமல்ல, அரசாங்கத்துக்கும் தேவைப்படுகின்றது.

இதற்கு முன் எப்போதும் ஒரு காலத்தில் சர்வதேச சமூகத்தின் ஆதரவு, ஒத்துழைப்பு தற்போது இருக்கின்ற அளவுக்கு எமக்கு இருக்கவில்லை.

இவையெல்லாவற்றையும் பயன்படுத்தி, நாங்களும் மிக நிதானமாக, பக்குவமாக, ஒற்றுமையாக செயற்பட வேண்டும். கருத்து வேறுபாடுகள் இருக்கலாம், அது சகஜம், அது தவிர்க்க முடியாதது. ஆனால், இயன்ற அளவுக்கு எமது மக்களின் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்கு நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாகச் செயற்பட்டு இக் கருமத்தை முன்னெடுக்க வேண்டும். அது எமது கடமை.


ரவிராஜ் இன்று இருந்திருந்தால் இந்தக் கருமத்தில் முக்கிய பங்களிப்பு வழங்கியிருப்பார்.

இருக்கின்றவர்கள் நாங்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து இந்தக் கருமத்தை நிறைவேற்ற வேண்டும். தவறவிடக் கூடாது இது புனிதமான கடமை – என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

*'பஷன் பக்' எரிந்த சமயம்*

## பொலிஸாரால் தாக்கப்பட்ட ஊழியர்கள் ஆஸ்பத்திரியில்!



கொழும்பு நவ.21

நேற்று முன்தினம் இரவு கொழும்பு பெப்லியானவில் 'பஷன் பக்' ஆடையகம் தீயில் எரிந்தசமயம்அங்குகடமையில் இருந்த நிறுவன ஊழியாகள் சிலர் பொலிஸாரின் தாக்குதலுக்குஇலக்காகினர்என்றுகூறப்படுகிறது.

களுபோவிலை வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட அந்த ஊழியர்களை முஸ்லிம் அமைச்சர்களான ரிஷாத் பதியுதீனும், பைசர்முஸ்தபாவும்நேற்றுநேரில் சென்று பார்வையிட்டனர்.

தீப்பற்றிக் கொண்ட சமயம் அங்கிருந்த கண்காணிப்புக் கருவிகளைபொலிஸார்பலந்தமாகப்பிடுங்கிச்சென்றனர்என்று கூறப்படுகின்றது.

அதனைத்தடுத்துபொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட ஊழியர்களே கடும் தாக்குதலுக்கு இலக்காகினர் என்றும் –

பின்னர்வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர்களை முஸ்லிம் அமைச்சர்கள் இருவரும் நேரில் சென்று பார்த்தனர் என்றும் கூறப்பட்டது. (உ)

## சிங்கள மக்களைப் போல தமிழருக்கும் முழு உரிமைகளையும் வழங்குவோம்!

### *சாவகச்சேரியில் ராஜித முழக்கம்*

சாவகச்சேரி, நவ.21

சிங்களமக்கள்அனுபவிக்கும் அனைத்து உரிமைகளையும் தமிழ் மக்களும் அனுபவிக்கக் கூடிய வகையில் அவர்களுக்கு முழு உரிமைகளையும் வழங்குவோம் என சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ராஜித சேனரட்ண தெரிவித்தார்.

சாவகச்சேரியில் நேற்று நடைபெற்ற அமரர் நடராஜா ரவிராஜின் நினைவு தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

ரவிராஜ்எனதுநல்லநண்பன். தமிழ்மக்களின்பிரச்சினைகளை தென்னிலங்கை மக்களுக்கு, விளங்கக்கூடிய வகையில் தெரிவித்து வந்தார். தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக அவர் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட்டார்.

சிங்கள மக்களும் அவரைப் புரிந்து கொண்டிருந்தார்கள். தீவிரவாத அமைப்புக்களுடன் அவர் தொடர்பைக் கொண்டிருக்கவில்லை. தென்னிலங்கை மக்களுக்கு வடபகுதி மக்களின் பிரச்சினைகளைக் சொல்வதில் அக்கறை கொண்டிருந்தார்.

தென்னிலங்கையில் இருந்து வந்த அரசியல்வாதிகளில், நான் சிறுபான்மை இனங்களின் உரிமைகளில் கவனமாக இருந்துள்ளேன்.

அமரர் ரவிராஜ் சிங்கள பிரதேசத்திலும் செல்வாக்குடையவராக திகழ்ந்தார். ரவிராஜ் பேசும் சிங்களத்தை சிங்கள மக்கள் ரசித்தனர்.

அவர் ஓர் இனவாதி அல்லர். தமிழ் மக்களின் சமவுரிமைக்காக போராடிக்கொண்டிருந்தார். அவ்வாறான ஒரு நிலைமையினை ஏற்படுத்துவதற்காக சம்பந்தனும் சுமந்திரனும்எம்முடன்இணைந்து செயற்படுகின்றார்கள்.

ரவிராஜ் மற்றும் யோசப் பரராஜசிங்கம் ஆகியோர் பற்றி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசியிருக்கின்றேன். ரவிராஜ் உயிருடன் இருந்திருந்தால் இனப்பிரச்சினையினைத் தீர்ப்பதற்கு மிதவாதமின்றி பலவழிகளில்செயற்பட்டிருப்பார். இவற்றைப் பற்றி எனக்குப் புரிகின்றது. ஆனால், இராணுவத்தினருக்குப் புரிவதில்லை.

மாமனிதர்ரவிராஜ்உயிருடன் இருந்திருந்தால், இன்னும் பல விடயங்களை அடைய முடிந்திருக்கும். அவர் இல்லாமையால் பல விடயங்களை இழந்து கொண்டி ருக்கின்றோம்.

விக்கிரமபாகு கருணாரட்ண மற்றும் நானும் அமைதியான இலங்கையைக் காண வேண்டும் என்பதற்காக தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கின்றோம். இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 6 பேர் கொண்ட குழுக்கள் செயற்படவுள்ளன. அந்த குழுவின் அறிக்கையைச் செயற்படுத்துவதற்கு பல செயற்பாடுகளைமுன்னெடுத்துவருகின்றோம்.

1988 ஆம் ஆண்டும் இதே போன்ற நிலைமையைச் சந்தித்தோம். அன்று இருந்த சிங்கள இனவாதிகள் போன்று இன்றும் தீவிரவாத போக்குடையவர்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதனால் நாம் சில விடயங்களை செய்வதில் மெதுவாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம்.

அமரர் ரவிராஜ் என்ன நோக்கத்திற்காக பாடுபட்டாரோ அதே இலட்சியத்தை அடைவோம். இந்த நாட்டின் இனப்பிரச்சினையை புதிய அரசமைப்பின் மூலம் தீர்த்து வைப்போம். அப்போது, ரவிராஜ் மீண்டும் பிறந்து எம்மோடு இருப்பார். – என்றார். (ம–18)

## டொனால்ட் ட்ரம்பின் புதிய அரசில் வெளியுறவுச் செயலாளராக ரோம்னி

அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் தன்னை மிகவும் தீவிரமாக விமர்சனம் செய்தவர்களில் ஒருவரான மிட் ரோம்னியை சந்தித்துள்ளார். இதனால், மிட் ரோம்னி அமெரிக்க வெளியுறவுச் செயலாளராக நியமனம் செய்யப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தனது தலைமையிலான அமைச்சரவை மற்றும் நாட்டின் முக்கிய துறைகளுக்கான தலைமை அதிகாரிகளை தெரிவு செய்யும் பணியில் தற்போது மும்முரமாக ஈடுபட்டுவரும் ட்ரம்ப், தினந்தோறும் புதிய அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தின் போது ட்ரம்பை ஒரு மோசடி பேர்வழி என்று ரோம்னி விவரித்திருந்தார். ட்ரம்ப் வெற்றிபெறக்கூடாது என்பதாகவே ரோம்னியின் நிலைப்பாடு இருந்தது. இந்த நிலையில், ட்ரம்ப் வெற்றிபெற்ற பின்னர் தற்போது ரோம்னியைச் சந்தித்துள்ளார்.

ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நீடித்த இந்த சந்திப்பு, மிகவும் சிறப்பாக அமைந்தது என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

### இராணுவப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தில்உரையாற்றியபோது, நாட்டில் இராணுவ புரட்சியொன்று ஏற்படுதவற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக எச்சரிக்கை செய்திருக்கின்றமை குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், அத்தகைய நிலைமை எதுவும் நாட்டில் இல்லையென அமைச்சர் ராஜித, சேனாரத்ன பதிலளித்தார்.

வவுனியா மாவட்டச் செயலகத்தில் சிறுநீரக தடுப்பு நடவடிக்கைக்கான அலுவலகம் ஒன்றை, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்ஹெட்டியாராச்சிகருணாரத்ன சகிதம்ஆரம்பித்துவைத்தஅமைச்சர் ராஜித சேனாரத்ன, வவுனியா பொலிஸ் நிலையத்தில் சிறுநீரக நோய்த்தடுப்புக்கு வசதியாக தூய குடிநீர் நிலையம் ஒன்றையும் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

இராணுவப் புரட்சியொன்று ஏற்படலாம் என்பது, தேர்தலில் மக்களுடைய ஆதரவைப் பெற்று அதிகாரத்துக்கு வரமுடியாமல் போனவர்களின் கனவேயொழிய வேறு ஒன்றுமில்லை. – என்றார் அவர்.

வடமாகாணத்தில் அண்மைக் காலமாக 'ஆவா குழு' என்ற பெயரில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்ற குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் கீழ் பலர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதாக மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டிருக்கின்றதே இது ஏன் என செய்தியாளர்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்கள்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன, கொள்ளைச் சம்பவங்களும், பயங்கரவாதச்செயற்பாடுகளும்பொது மக்களைப் பாதிப்படையச் செய்கின்ற நடவடிக்கைகளாகும். எனவே, இச் செயல்களில் ஈடுபடுபவர்களை எந்தவொரு சட்டத்தின் கீழாவது கைது செய்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியதும், நிலைமையைக் கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டியதும் முக்கியமாகும்.

சட்டத்தை மீறிச் செயற்படுபவர்களைக் கைது செய்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியது என்பதே இதில் முக்கியமாகும். – என்று கூறினார்.

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஏனைய மாகாண சபைகளுக்கான நிதியொதுக்கீட்டைக் குறைத்து, வட மாகாண சபைக்கு அதிக நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருப்பது குறித்து கருத்து வெளியிட்ட அமைச்சர், அவ்வாறு இடம்பெற்றிருந்தால், நிதியொதுக்கீடு குறைக்கப்பட்ட மாகாண சபைகளுக்கு உரிய அளவு நிதி வழங்கப்பட வேண்டியது அவசியம் என்றார்.

அதேவேளையில், புதிதாக உருவாக்கப்படவுள்ள அரசமைப்பில் நாட்டின் வருமானத்தில் 40 வகையான நிதியை மாகாண சபைகளுக்கு ஒதுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது, எனவே உருவாக்கப்படவுள்ள அரசமைப்பு செயற்படுத்தப் படும்போது, இத்தகைய நிதியொதுக்கீட்டுப் பிரச்சினைக்கு இடமில்லாமல் போகும் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

### தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு வருவதை முழுமையாக எதிர்க்கிறோம் என நாம் தெளிவாகக் கூறியுள்ளோம்.

30 வருட யுத்தத்தின் பின்னர் ஒன்றிணைத்த நாட்டை மீண்டும் துண்டு துண்டாக பிளவுபடுத்தும் செயற்பாடே சமஷ்டி ஊடாக இடம்பெறும். இதற்கு எங்களால் இடம்கொடுக்க முடியாது. ஆகவே அதற்காக எமது பலத்தைக் கொண்டுநடவடிக்கை எடுப்போம்.

அவர்கள் (தமிழர்கள்) அனைத்து அதிகாரங்களையும் கேட்கின்றனர். பகிரப்பட்ட அதிகாரம், பொலிஸ் அதிகாரம் உள்ளிட்ட அனைத்து அதிகாரங்களையும் கேட்கின்றனர். இதுவொரு சிறிய நாடு, அவ்வாறு பிரிப்பதற்கு முடியாது. அமெரிக்கா போன்று இந்தியா போன்று இது மிகப் பெரிய நாடு அல்ல.

ஸ்ரீலங்கா அவர்களின் நாடு என இந்தியாவிலுள்ள சிலர் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். அதனால் வேண்டியவாறு பிளவுபடுத்தி, பிரிக்க முடியும் என அவர்கள் நினைக்கின்றார்கள். – என்றார். (ம–81)

### சிலை திறப்பிற்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின்தலைவரும்எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ண, லங்கா நவ சம சமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் விக்ரமபாகு கருணாரட்ண ஆகியோர் இணைந்து திறந்துவைத்தனர்.

திறந்து வைக்கப்பட்ட சிலைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர்மாவை சேனாதிராஜா மலர் மாலை அணிவித்தார்.

அதனைத் தொடர்ந்து அமரர் ரவிராஜின் திருவுருவப் படம் சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நினைவுக் கூட்டம் இடம்பெற்றது.

வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ண, நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, எம்.ஏ. சுமந்திரன், லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் துணைச் செயலாளர் நிஸாம் காரியப்பர், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்த சங்கரி, வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா ஆகியோர் நினைவுரை ஆற்றினர்.

சிலையினை வடிவமைத்த யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீட விரிவுரையாளர் மா.மனோகரன், உருவச்சிலை தாங்கிய பீடத்தை அமைத்த கட்டடக் கலை ஞர் நந்தகுமார் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

ரவிராஜ் நினைவாக நவீல்ட் பாடசாலை மாணவி ஒருவருக்கு கல்வி ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், வட மாகாண சபைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண சபை உறுப் பினர்களான சிவாஜிலிங்கம், ஆனோல்ட், சர்வேஸ்வரன், பரஞ்சோதி மற்றும் ரவிராஜின் குடும்பத்தினர் பொதுமக்கள் எனப் பலநூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். (ம–18)

### எம்.பிக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டார்.

மாவட்ட ரீதியான விகிதாசார பிரதிநிதித்துவம் மூலம் 40 வீத எம்.பிக்களையும் (96 எம்.பிக்களையும்) தேர்தல்தொகுதிவாரியானபிரதிநிதித்துவம்மூலம்60 வீத எம்.பிக்களையும் (144 பேரையும்) தெரிவு செய்யும் ஒரு புதியகலப்புத்தேர்தல்முறைமையைக் கொண்டு வரவேண்டும் என்றயோசனையையேபிரதமர் வெளியிட்டார்.

### ஊடக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஊடகங்கள் மீது சத்தம் சந்தடியின்றி அடக்குமுறையை ஏவியிருக்கின்றது.

–இவ்வாறு குற்றம் சுமத்தி ஊடக சுதந்திரத்துக்காகக் குரல் எழுப்பியிருக்கின்றார்முன்னாள் ஜனாதிபதியும்குருநாகல்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷ.

'அத தெரண' ஊடக நிறுவனத்தின் செய்தி ஒளிபரப்புத் தொடர்பாக ஊடக அமைச்சின் செயலாளரால்எடுக்கப்பட்டவை எனக் கூறப்படும் சில நடவடிக்கைகள் குறித்தே இவ்வாறு அறிக்கை ஒன்றின் மூலம் கண்டனம் தெரிவித்து குரல் எழுப்பியிருக்கின்றார்முன்னாள்ஜனாதிபதி. (உ)

### 'பஷன் பக்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்களும், பிரமுகர்களும் நேற்று நேரில்சென்றுபார்வையிட்டனர் எனக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அந்தக்களஞ்சியம்அமைந்திருந்தஅடுக்குமாடியில்மூன்றாம் தளத்தில் திடீரென ஏற்பட்ட தீ பின்னர்ஏனையமாடிகளுக்கும் பரவியதாகக் கூறப்படுகின்றது.

விரைந்து வந்த தீயணைப்புப் படையினர் நீண்ட நேர போராட்டத்தின் பின்னர் தீயைக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர். சேத மதிப்பீடு இன்னும் முடிவடையவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் களஞ்சியமே 2013 இலும் பேரினவாதக் காடையர் கூட்டத்தினரின் தாக்குதலுக்கு இலக்காகிச் சேதமடைந்தது என்பது தெரிந்ததே.

இந்தத் தீச் சம்பவம் குறித்து விசாரணைசெய்யும்பொறுப்பை ஏற்றுள்ள கொழும்பு குற்றத் தடுப்புப் பகுதியில் பொலிஸ்பிரிவினர், அந்தக்கட்டடச்செயற்பட்ட கண்காணிப்புக் கருவிகளின் அடிப்படையில்விசாரணைகளை நடத்துவர் எனக் கூறப்பட்டது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.11.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.